வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu
வாரமலர் ஈழநாடு

Email : news@eelanadu.lk
மலர் : 03
16.01.2022 ஞாயிற்றுக்கிழமை
இதழ் : 42
பக்கங்கள் : 20






07
சீனாவின் உயிர் நண்பனான இலங்கைக்கு இந்தியாவின் நிதியுதவி



09
இந்தியத் தலையீட்டை விரும்பாத தமிழரசுக் கட்சி



10
இரு விஞ்ஞானிகள் கண்டுபிடித்த பதற வைக்கும் அந்த உண்மை....



13
கனடாவில் எழுச்சி பெறும் தமிழ் மரபுத் திங்கள்

# இலங்கையின் நம்பிக்கை மிக்க பங்காளியாக இந்தியா இருக்கும்

## இந்திய வெளிவிவகார அமைச்சர் உறுதி



புதுடில்லி, ஜன. 16

இலங்கையின் உறுதியான மற்றும் நம்பகமான பங்காளியாக இந்தியா எப்போதும் இருக்கும் என்பதை மீள உறுதிப்படுத்துவதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இலங்கை நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் ஆகியோருக்கு இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இதனை இந்திய வெளிவிவகார அமைச்சர்

19

# எதிர்வரும் மூன்று வருடங்களுக்குள் சகல வாக்குறுதிகளும் நிறைவேறும்

## என்னை நம்புங்கள் என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, ஜன. 16

ஜனாதிபதித் தேர்தலில் வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தும் எதிர்வரும் மூன்று வருடங்களுக்குள் நிறைவேற்றப்படும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார்.

எனவே தன் மீது மக்கள் நம்பிக்கை வைக்க வேண்டும் என ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

குறுகிய விமர்சனங்களை முன்வைத்து மக்களை ஊக்கப்படுத்த வேண்டாம் என்றும்

19

# 4ஆவது தடுப்பூசி; அரசு அவதானம்!

கொழும்பு, ஜன. 16

கொரோனாவுக்கு எதிரான நான்காவது தடுப்பூசி டோஸ் தேவைப்பட்டால் அதனை வழங்குவதற்கு அரசு கவனம் செலுத்தியுள்ளது என்று சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல நேற்று ஊடகங்களிடம் தெரிவித்தார்.

19

# இந்திய பிரதமருக்கான ஆவணம் செவ்வாயன்று கையளிக்கப்படும்

## தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளையும் சந்திக்கின்றார் இந்திய தூதுவர் பாக்லே

கொழும்பு, ஜனவரி 16

13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு இந்தியப் பிரதமரை வலியுறுத்தும் ஆவணம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேயிடம் கையளிக்கப்படவுள்ளது. அன்றைய தினம் மாலை 5 மணிக்கு ஆவணத்தில் கையொப்பமிட்டுள்ள கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இந்திய தூதுவருக்கும் இடையிலான சந்திப்பு நடைபெறும் என ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

19

# பொருளாதார வீழ்ச்சி; கனடா எச்சரிக்கை!

கொழும்பு, ஜன. 16

இலங்கையில் வீழ்ச்சி கண்டுவரும் பொருளாதார நிலைமை தொடர்பில் கனடா அந்நாட்டு பிரஜைகளை எச்சரித்துள்ளது.

இலங்கையின் பொருளாதார நெருக்கடி, அடிப்

19

# பொருளாதாரத் தடையை இப்போதுதான் சிங்கள மக்கள் நன்றாக உணர்கிறார்கள்

## சிறிதரன் எம்.பி தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜன. 16

பொருளாதார தடை என்பது தமிழர்களுக்கு புதிதான ஒரு விடயம் இல்லை. அந்த பொருளாதாரத் தடையை தற்போதுதான் சிங்களவர்கள் உணர்கிறார்கள் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

உருத்திரபுரம் விளையாட்டுக் கழகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட பொங்கல் நிகழ்வும் பாரம்பரிய தமிழர் விளையாட்டு நிகழ்வும் நேற்று உருத்திரபுரம்

19

# 250 கிலோ கஞ்சாவுடன் இருவர் வவுனியாவில் கைது

யாழ்ப்பாணம்,ஜன.16

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்ட 250 கிலோ கஞ்சா மீட்கப்பட்டுள்ளதாக வவுனியா, ஈரப்பெரியகுளம் பொலிஸார் தெரிவித்தனர். இதனை எடுத்துச் சென்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற கூலர் ரக வாகனம் ஒன்றை நேற்று பிற்பகல் வவுனியா, ஈரப்பெரியகுளம் சோதனைச் சாவடியில் வழிமறித்து சோதனை செய்தபோது அந்த வாகனத்தில் கஞ்சா மறைத்துக்கொண்டு செல்லப்பட்டமை கண்டு

19

# துன்பத்தை அறிந்த மக்களால் உருவாக்கப்பட்டதே நமது அரசு!

## கூறுகிறார் அமைச்சர் நாமல்



கொழும்பு, ஜன. 16

நாட்டு மக்களின் துன்பத்தை அறிந்த மக்களால் உருவான அரசே தற்போதைய அரசு என விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

இந்திய அரச நிதி உதவியின் ஊடாக இலங்கையில் மலைய

19

# தேவாலயத்தில் மீட்கப்பட்ட கைக்குண்டால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை

## பாதுகாப்புச் செயலர் கமால் தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 16

பொரளை அனைத்து புனித தேவாலயத்தில் கண்டெடுக்கப்பட்ட கைக்குண்டு தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையவில்லை என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரத்ன தெரிவித்தார்.

கண்டியில் நேற்று மல்வத்து மற்றும் அஸ்கிரிய மாநாயக்க தேரர்களை சந்தித்து ஆசி பெற்றதை அடுத்து ஊடகங்

19

# அமைச்சரவை மாற்றம் தாமதம் இரு அமைச்சர்கள் ஏமாற்றத்தில்!

கொழும்பு, ஜன. 16

புதிய ஆண்டின் ஆரம்பத்தில் அமைச்சரவையில் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படும் என அரசின் தரப்பில் கூறப்பட்டு வந்தது. எனினும், அது விரைவில் நடக்காது எனக் கூறப்படுகின்றது. இந்த நிலையில், அமைச்சரவை மறுசீரமைப்பு நடக்காத காரணத்தால், இரண்டு அமைச்சர்கள் கடும் ஏமாற்றத்தில் இருந்து வருகின்றனர் எனத் தக

19

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

சின்ன வயதில் படித்த முல்லாவின் கதை ஒன்றுதான் இப்போது ஞாபகத்திற்கு வருகின்றது.

முல்லா என்ற ஒரு கதாபாத்திரத்தை உருவாக்கி, சிறுவர்களுக்கு சில அறிவுரைகளை சொல்லுவதற்காக உருவாக்கப் பட்டவை இந்தக் கதைகள் என்று நினைக்கிறேன்.

முல்லா வசித்துவந்த ஊரில் ஒரு நாத்திகன் வசித்து வந்தான். கொஞ்சமும் தெய்வ நம்பிக்கை இல்லாதவன். தெய்வ நம்பிக்கை உடைய முல்லா போன்றவர்களை எப்பொழுது பார்த்தாலும் கேலியும் கிண்டலும் செய்து பரிகசித்துக் கொண்டிருப்பான்.

ஒரு நாள் சந்தைக்கு முன்னால் மக்கள் அதிகம் நடமாடும் இடத்தில் அந்த நாத்திகன் நின்று கொண்டிருந்தான்.

அந்தப் பக்கமாக முல்லா நடந்து வந்து கொண்டிருந்தார். அங்கே திரளாகக் கூடியிருந்த மக்களுக்கு மத்தியிலே முல்லாவை அவமானப்படுத்தவேண்டும் என்று எண்ணினான்.

முல்லா அருகே வந்ததும், "முல்லா அவர்களே, உலகத்திலேயே நீங்கள்தான் முற்றும் துறந்த துறவி என்று மக்கள் பேசிக்கொள்கிறார்களே. அப்படி எதை நீர் துறந்து ஞானியானீர்?" என்று நாத்திகன் கேலியாகக் கேட்டான்.

"எந்த முட்டாள் அந்த மாதிரி சொன்னான்? என்னைவிட மிகவும் மகத்துவம் வாய்ந்த துறவி ஒருவர் நமது ஊரில் இருக்கிறாரே!" என்றார் முல்லா.

நாத்திகனுக்கு மட்டுமல்ல, அங்கு நடமாடிக்கொண்டிருந்த மக்களுக்கும் முல்லா சொன்ன தகவல் ஆச்சரியத்தைத் தந்தது.

முல்லாவையும்விட மேலான துறவி இந்த ஊரில் யார் இருக்க முடியும் என்று அவர்களுக்கு விளங்கவில்லை.

நாத்திகனும் அந்தத் தகவலைக் கேட்டு வியப்படைந்து, "முல்லா, இந்த ஊரில் உள்ள அந்த மகத்துவம் வாய்ந்த துறவி யார்?" என்ற கேட்டான்.

"அந்தத் துறவி நீர் தான்" என்று முல்லா கூறியதைக் கேட்ட நாத்திகனுக்கு கோபம் வந்துவிட்டது.

"என்னைப் போன்ற சாதாரணத் துறவிகள் கேவலம் உலகத்தில் இருக்கும் பொருட்களைத்தான் துறப்பது வழக்கம். நீரோ கடவுளையே துறந்துவிட்ட துறவியாயிற்றே. உம்மை மிஞ்சக் கூடிய துறவி உலகத்தில் வேறு யார்?" என்று முல்லா விளக்கமளித்தார். அங்கே சூழ்ந்திருந்த மக்கள் நாத்திகனைப் பார்த்து ஏளனமாகச் சிரிக்க ஆரம்பித்தனர். நாத்திகன் தலைகுனிந்தவாறு அந்த இடத்தை விட்டு வேகமாக அகன்று விட்டான்.

இந்தக் கதைதான் அந்தச் செய்தியைப் பார்த்தபோது ஞாபகத்திற்கு வந்தது.

கடந்த ஒக்ரோபர் மாதத்தின் ஆரம்பத்தில் இந்திய வெளியுறவுச் செயலர் இலங்கைக்கு விஜயம் செய்திருந்ததை மறந்திருக்கமாட்டீர்கள். அவ்வாறு வந்த அவர், யாழ்ப்பாணத்திற்கும் வந்தபோது, இங்குள்ள அரசியல், சமூக பிரமுகர்களைச் சந்தித்திருந்தார். அந்த வைபவத்தில் கலந்துகொண்ட சுரேஷ் பிரேமச்சந்திரன், பதின்மூன்றை முழுமையாக அமுல்படுத்த இந்தியா உதவவேண்டும் என்று கோரிக்கை வைத்தபோது, அங்கேயிருந்த தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அதற்கு எதிராக எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை, அது அவரும் அதனை ஏற்றுக் கொள்வதாக பொருள்கொள்ளலாம் என்ற வகையில் 'ஈழநாடு' ஆசிரிய தலையங்கம் எழுதியபோது, மறுநாள் இதனை மறுப்பதற்காகவே ஊடகவிலாளர் மாநாட்டை நடத்திய கஜேந்திரகுமார், பதின்மூன்றை ஏற்றுக்கொள்ளவே முடியாது என்றும், அது ஒற்றையாட்சியை ஏற்றுக்கொள்வதாக ஆகிவிடும் என்றும், அவ்வாறு ஏற்றுக்கொண்டால் பின்னர் ஒற்றையாட்சிக்கு எதிரான போராட்டத்தை நடத்த முடியாதுபோய்விடும் என்றும் 'பொங்கி' எழுந்திருந்தார்.

ஆனால், அவர் கடந்த பதின்மூன்றாம் திகதி தான் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில்,

"முதலில் 13ஆவது திருத்தம் நடைமுறைக்கு வரட்டும். அதிலிருந்து இப்போதுள்ள இருப்புக்களை நாம் பாதுகாப்போம். ஆனால், இது தீர்வாகாது என்று கூறி வருகின்றோம்." என்று கூறியிருக்கிறார்.

அட, இதைத்தானே ஈழநாடும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது. அதிகம் ஏன், இந்தியப் பிரதமருக்கு அனுப்புவதற்காக தயாரிக்கப்பட்ட கடிதத்திலும் இதைத்தானே தமிழ்க் கட்சிகள் வலியுறுத்தியிருக்கின்றன. யாருமே இதுவரை பதின்மூன்று போதுமானது என்று கூறவில்லை. மஹிந்த ராஜபக்ஷ கூட 'பதின்மூன்று பிளஸ்' என்றுதானே கூறியிருக்கிறார்.

கஜேந்திரகுமாரும் தமிழ்க்கட்சிகளின் நிலைப்பாட்டுக்கு வந்திருப்பதாகவே கருதலாம் என்றே எண்ணத்தோன்றுகின்றது.

ஆனால், அதே ஊடகவியலாளர் மாநாட்டில் கூட்டமைப்பு ஒற்றையாட்சிக்குள் தமிழ் மக்களை முடக்கப்பார்க்கிறது என்றும் ஒன்றுக்கொன்று முரண்பாடாக கூறியிருப்பதைப் பார்க்கின்றபோது, கூட்டமைப்புக்கு எதிர்க்கட்சியான தமது கட்சி இப்படிக் கூறத்தானேவேண்டும் என்று அவர் வாதிடுவாரோ தெரியவில்லை!

அல்லது, மாகாணசபைக்கு தேர்தல் நடந்தால் தமது கட்சியும் போட்டியிடவேண்டும் என்பதற்காக, தனது கொள்கையில் தளர்வை ஏற்படுத்தினாரா என்பதும் தெரியவில்லை!

- ஊர்க்குருவி.

# இலங்கைக்குள் நுழைபவர்களில் 4 வீதமானோருக்கு ஒமைக்ரோன்!

### சுகாதார நிபுணர்கள் சங்கம் எச்சரிக்கை



கொழும்பு, ஜன. 16

**இலங்கை விமான நிலையங்களுக்கு தினசரி வருபவர்களில் 4 வீதம் பேர் ஒமைக்ரோன் கொரோனா வைரஸுக்கு சாதகமாக இருப்பதாக சுகாதார நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**

ஜனவரி மாதத்தில் கண்டறியப்பட்ட கொரோனா வைரஸ் தொற்றாளர்களில் குறித்து விளக்கமளித்த சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ், நிலைமை மோசமடைவதைத் தடுப்பதற்காக பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு வரும் அனைவருக்கும் பி.சி.ஆர் பரிசோதனை நடத்தப்படுவது முக்கியம்.

நாட்டுக்குள் நுழைபவர்களுக்கான சோதனை நிறுத்தப்பட்டதால், ஒமைக்ரோன் மாறுபாடு நாட்டை அழிக்கும் அபாயம் உள்ளது.

நேர்மறை நோய்த்தொற்றுகளைக் கண்டறிவதற்கான செயல்முறை திறனற்றதாக இருப்பதால், அறிக்கையில் உள்ள தரவு 100 வீதம் துல்லியமாக இருக்காது.

நாட்டை விட்டு வெளிநாடுகளுக்குச் செல்லும் பெரும்பாலான நபர்கள், சோதனையின் போது கோவிட் தொற்றுக்குள்ளானதாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, வந்தவுடன் பி.சி.ஆர். பரிசோதனையை மீண்டும் தொடங்கவேண்டும் - என்றார். (அ)

# மேலும் 160 பேருக்கு ஒமைக்ரோன் உறுதி

*கொழும்பு, ஜன. 16*

இலங்கையில் மேலும் 160 பேருக்கு ஒமைக்ரோன் திரிபு தொற்று உறுதி செய்யப்பட்டதாக ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவப் பிரிவின் பணிப்பாளரும் வைத்திய நிபுணருமான சந்திம ஜீவந்தர தெரிவித்தார்.

ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக ஆய்வகத்தால் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனைகளில் ஒமைக்ரோன் தொற்றாளர்கள் உறுதிப்படுத்தப்பட்டனர்.

இலங்கையில் கடந்த ஆண்டு டிசெம்பர் 3 ஆம் திகதி ஒமைக்ரோன் முதல் தொற்று நோயாளி கண்டறியப்பட்டார். அதன்பிறகு இந்த எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

தற்போது உறுதிப்படுத்தப்பட்ட 160 ஒமைக்ரோன் தொற்று நோயாளிகளுடன் உறுதிப்படுத்தப்பட்ட மொத்த தொற்று நோயாளர் எண் ணிக்கை 200 ஐ கடந்துள்ளது. (அ)

# தடை செய்யப்படும் 'லொக் டவுண்'

*கொழும்பு, ஜன. 16*

லொக் டவுண் (முடக்கம்) என்ற சொல்லை தடை செய்யப்பட்ட சொல்லாக பிரகடனப் படுத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இவ்வாறான வைரஸ் ஒன்றினால், நாட்டுக்கு பாதிப்புக்கள் ஏற்படும் என்பதை தாம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும், கனவில்கூட நினைத்து பார்க்கவில்லை என அவர் கூறினார்.

இந்த வைரஸ் பெருந்தொற்றுக்கு மத்தியில், லொக் டவுண் என்ற சொல்லை, தடை செய்யப்பட்ட சொல்லாக்குவதற்கு தான் சுகாதார அமைச்சர் என்ற விதத்தில் தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.



நாட்டை முடக்குமாறு அனைவரும் கூறுவதானது, மிகவும் இலகுவான விடயம் என அவர் சுட்டிக்காட்டினார்.

நாடு முடக்கப்பட்டபோதிலும், அரச ஊழியர்களின் சம்பளத்தை ஒரு ரூபாவினாலேனும் குறைக்கவில்லை என அவர் கூறினார்.

உலக நாடுகள் இவ்வாறான நிலைமையை எதிர்நோக்கியுள்ள இந்த தருணத்தில், தம் மீது முன்வைக்கப்படுகின்ற குற்றச்சாட்டுக்களை பொறுத்துக் கொண்டு, தமது நடவடிக்கைகளை முன்னோக்கி கொண்டு செல்வதாகவும் கெஹலிய ரம்புக்வெல குறிப்பிட்டார்.(அ)

# அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய 1,700 கொள்கலன்கள் துறைமுகத்தில்!

*கொழும்பு, ஜன. 16*

இரண்டு மாதங்களுக்கும் மேலாக நாட்டில் நிலவும் டொலர் தட்டுப்பாடு காரணமாக அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய சுமார் 1,700 கொள்கலன்கள் கொழும்புத் துறைமுகத்தில் தேங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை மத்திய வங்கியினால், வணிக வங்கிகளுக்கு டொலர்களை விடுவிப்பதில் ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அத்தியாவசியப் பொருட்கள் இறக்குமதியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பல சந்தர்ப்பங்களில் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தப்பட்டபோதிலும், இதுவரை உரிய தீர்வு கிடைக்கப்பெறவில்லை அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கொழும்புத் துறைமுகத்தில் தேங்கிக் கிடக்கும் அத்தியாவசிய பொருட்களை விடுவிக்க முடியாத காரணத்தால் நாட்டில் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# ஆசிரியர் சங்கம் நடத்திய போராட்டத்துக்கு வெற்றி!

*கொழும்பு, ஜன. 16*

அதிபர், ஆசிரியர் ஆலோசகர் சேவை, ஆசிரியர் சேவைகளை மூடப்பட்ட சேவைகளாக பிரகடனப்படுத்தியமை தமது போராட்டத்தின் வெற்றி என இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த போராட்டத்துக்கு பங்களித்த அதிபர்கள், ஆசிரியர்கள் உட்பட அனைத்து தரப்பினருக்கும் இலங்கை ஆசிரியர் சங்கம் நன்றி தெரிவித்துள்ளது.

தொழிற்சங்க நடவடிக்கையை நாசப்படுத்த பலர் முயற்சித்து தமது போராட்டத்தை நிறுத்தியதாக சங்கத்தின் செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

எவ்வாறாயினும், தொடர்ச்சியான தொழிற்சங்க நடவடிக்கையின் மூலம், அடிப்படைச் சம்பள உயர்வை வெற்றிகரமாக பெற்றுக் கொடுத்த ஆசிரியர்களுக்கு அவர் பாராட்டும் தெரிவித்தார்.

அதிபர் சேவை மற்றும் ஆசிரியர் ஆலோசகர்கள் சேவையில் உள்ளவர்களின் தரத்துக்கு ஏற்ப அடிப்படைச் சம்பளங்களும் அதிகரிக்கப்படும் என மஹிந்த ஜயசிங்க கூறினார்.

(அ)

ஈழநாடு
Eelanadu
16.01.2022 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், தை 03

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

## ஆட்சிக் கவிழ்ப்பின் சாத்தியம்?

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன – தாங்கள் வெளியேறினால் ஆட்சி கவிழ்ந்துவிடும் என்று குறிப்பிட்டிருக்கின்றார். தமிழ் தேசிய கூட்டமைப்பின் முக்கியஸ்தர், எம்.ஏ.சுமந்திரன் – இந்த ஆட்சி ஏற்கனவே கவிழ்ந்துவிட்டது என்று குறிப்பிட்டிருக்கின்றார். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச – இது ஒரு தோல்வியடைந்த அரசாங்கம் என்று குறிப்பிடுகின்றார். அடிப்படையில் இவைகள் அனைத்துமே அரசியல்வாதிகளின் கருத்துக்கள். ஓர் அரசாங்கத்தை எதிர்கட்சியினர் விமர்சிப்பது ஜனநாயக அரசியலில் சாதாரணமான ஒன்றுதான். ஒருபுறம் எதிரணியினர் இவ்வாறான கருத்துக்கள் வெளியிட்டுவரும் சூழலில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அண்மையில் தெரிவித்திருந்த கருத்தொன்று சற்று வித்தியாசமாக இருக்கின்றது. அவரது கூற்றை உற்று நோக்கினால், அவர் அவ்வளவு இலகுவாக அரசாங்கத்தை விட்டுக் கொடுத்துவிடப் போவதில்லை போன்றே தெரிகின்றது.

ஓர் இளைஞர் தன்னிடம் கூறியதாகவே அவர் இந்த கருத்தை பதிவு செய்கின்றார் – அதாவது, கொரோனா உங்களுடைய இரண்டு வருடங்களை எடுத்துவிட்டது. நீங்கள் பல நல்ல விடயங்களை செய்யும் திட்டங்களுடன் வந்தவர். கொரோனா வந்தமைக்கு நீங்கள் என்ன செய்வது – எனவே நீங்கள் ஏன் மக்களிடம் மேலும் கால அவகாசத்தை கேட்கக்கூடாது. தேர்தலுக்கு செல்லாமலேயே பொதுசன வாக்கெடுப்பு மூலம் ஜனாதிபதியின் ஆட்சிக் காலத்தை நீடித்துக் கொள்ளும் வழிமுறையொன்றும் உண்டு. அதனைத்தான் ஜனாதிபதி நினைவூட்டுகின்றாரா? 1982இல், ஜே.ஆர்.ஜெயவர்த்தன இதனை வெற்றிகரமாக கையாண்டிருக்கின்றார்.

ஜே.ஆரினால் முடிந்த ஒன்றை ஏன் தன்னால் செய்ய முடியாதென்று ஜனாதிபதி கோட்டாபய எண்ணினால் அதனை எவராலும் தவறென்றும் கூறமுடியாது. அவர் அவ்வாறான திட்டத்துடன் இருக்கின்றார் என்று நாம் கூறவரவில்லை – அவ்வாறு நடந்தால் ஆச்சிரியப்பட ஏதுமில்லையென்றே கூறுகின்றோம். ஏனெனில் அந்தளவிற்கு அரசாங்கம் நெருக்கடிளை எதிர்கொண்டு வருகின்றது. அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, தங்களின் மக்கள் செல்வாக்கு சரிவடைந்திருப்பதை ஒப்புக்கொள்கின்றார். ஆனால், அது தற்காலிகமானதென்றும் கூறுகின்றார்.

ஜனாதிபதி தேர்தலின் போது ராஜபக்ஷக்கள் தொடர்பில் காணப்பட்ட ஆரவாரங்கள் தற்போது பெருமளவிற்கு அடங்கித்தான்விட்டது. எனவே, தற்போதைய நிலைமைகளில் முன்னேற்றத்தை காண்பிக்காவிட்டால் – ராஜபக்ஷக்களின் சரிவை தடுக்க முடியாது. 2015இல் ஏற்பட்ட சரிவிலிருந்து மீண்டெழுந்திருக்கும் அவர்கள், அவ்வளவு எளிதாக தங்களின் வீழ்சியை அனுமதிக்கப் போவதில்லை. அவர்களால் முடிந்த அனைத்தையும் செய்து தங்களை தற்காத்துக் கொள்ளவே முயற்சிப்பார்கள். அதே வேளை, எதிரணியை பொறுத்தவரையில் அவர்கள் முன்னரைப் போல் சிதறியே இருக்கின்றனர்.

முன்னரைப் போலவே, அனைவரையும் மீளவும் ஒட்டி, ஒன்று சேர்க்க வேண்டிய நிலையிலேயே இப்போதும் இருக்கின்றனர். சஜித் பிரேமதாச ஒருவரே தனித்து பலமாக இருக்கின்றார். இந்த அடிப்படையில் நோக்கினால், ராஜபக்ஷக்கள் தனித்து பலமாகவே இருக்கின்றனர். அவர்களது பலம் என்பது அவர்கள் மட்டுமே! விடுதலைப் புலிகளை அழித்தவர்கள் என்னும் சிங்கள அபிப்பிராயமே, அவர்களது இதுவரையான பலமாக இருக்கின்றது. அதாவது, சிங்களவர்களை பாதுகாக்கக் கூடியவர்கள் அவர்கள் மட்டுமே என்பதை பெரும்பாலான சிங்கள மக்கள் நம்புகின்றனர். இந்த நம்பிக்கையில் வீழ்ச்சியேற்பட்டால் மட்டுமே, அவர்கள் வீழ்வார்கள்.

ஆனால், 'பசி வந்தால் பத்தும் பறந்து போகும்' என்பது போல், பொருளாதார நெருக்கடியின் சுமைகளை – சுமக்க முடியாமல் போகும்போது, அனைத்து கற்பனைகளும் காணமால் போய்விடலாம். நாடு தற்போது எதிர்கொண்டிருக்கும் நெருக்கடி அப்படியான ஒன்றாகவே தெரிகின்றது. இரண்டு ஆண்டுக்குள் இதனை சரிசெய்யாவிட்டால் ராஜபக்ஷக்களின் வீழ்சியை அவர்களால் தடுக்க முடியுமா – அவர்களுக்கு முன்னர் கைகொடுத்த யுத்த வெற்றிவாதம், மீளவும் கைகொடுக்குமா? பதில் காலத்திடம் மட்டுமே உண்டு. ஆனால் ஒன்று மட்டும் உண்மை. அதாவது, எவர் ஆட்சிக்கு வந்தாலும் நாட்டின் பொருளாதார நிலைமையில் பாலாறும் தேனாறும் ஓடப் போவதில்லை. ஏனெனில் அந்த நிலைமையை நாடு ஏற்கனவே கடந்துவிட்டது. ஆனால் ஒரு விடயத்திற்கு ஆட்சி மாற்றங்கள் கைகொடுக்கும் – அதாவது, மேற்குலகத்தின் நம்பிக்கையை வெற்றெடுப்பதற்கு.



# தமிழர்கள் இல்லாவிட்டால் நமது நாடு குறுகிக் குறைந்துவிடும்

## பொங்கல் பண்டிகையை ஒட்டி பிரித்தானிய பிரதமர் பொறிஸ் ஜோன்சன் வாழ்த்து

**குமாரதாஸன் - பாரிஸ்**

*தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகையை ஒட்டி பிரித்தானிய பிரதமர் பொறிஸ் ஜோன்சன் வாழ்த்துச் செய்தி ஒன்றை விடுத்திருக்கிறார். "மிகவும் அருமையான தமிழ்ச் சமூகத்தைக் கொண்டாடுகின்ற தருணம் இது" என்று தனது வீடியோச் செய்தியில் அவர் தெரிவித்திருக்கிறார். தமிழர்கள் மிக நீண்ட காலமாக பிரிட்டிஷ் வாழ்க்கைக் கட்டமைப்போடு மிக இறுக்கமாகப் பின்னப்பட்டுள்ளனர்.*

*அவர்கள் இல்லாவிட்டால் நமது நாடு குறுகிக் குறைந்துவிடும்"என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.*

*இதே நேரம் அவரது உத்தியோகபூர்வ பணிமனையில் கொரோனா காலங்களில் - விதிகளை மீறி நடத்தப்பட்டவை எனக் கூறப்படுகின்ற மது விருந்துகள் அவரது அரசியல் வாழ்க்கையில் பெரும் புயலைக் கிளப்பியிருக்கின்றன.*

*நம்பர் 10, டவுணிங் வீதியில் அமைந்துள்ள பொறிஸ் ஜோன்சனின் அலுவலக பூங்காவில் கடந்த 2020 மே மாதம் நடத்தப்பட்ட மது விருந்து தொடர்பான விவகாரத்தில் அவரைப் பதவி விலகுமாறு கோரிக்கைகள் எழுந்துள்ள நிலையில்விதிகளை மீறி அங்கு மேலும் இரண்டு விருந்துகள் நடைபெற்றுள்ளமை பற்றிய தகவல்கள் புதிதாக வெளியாகியிருக்கின்றன.*

*கடந்த ஆண்டு ஏப்ரலில் பொது முடக்கக்கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் நடைபெற்றுள்ள அவ்விரு விருந்துகளிலும் பிரதமர் ஜோன்சன் கலந்துகொண்டாரா என்பது உறுதிப்படுத்தப்படவில்லை. ஆனால்*

*அவற்றில் ஒன்று இளவரசர் பிலிப்பின் இறுதிச் சடங்குக்கு முதல் நாள் இரவு தொடங்கி விடிய விடிய நடந்துள்ளது என்ற "பகீர்" தகவலை ஊடகங்கள் வெளியிட்டுள்ளன.*


*மகாராணி எலிஸபெத்தின் இறுதிச்சடங்கு நடைபெற்ற ஏப்ரல் 17 ஆம் திகதிக்கு முதல் நாள் இரவு நடந்த பிரதமரின் அலுவலக விருந்தில் சுமார் 30 பேர் மது அருந்தி விடியும் வரை களியாட்டங்களில் ஈடுபட்டனர் என்று 'ரெலிகிராப்' பத்திரிகை தெரிவித்துள்ளது. மறுநாள் கொரோனா கட்டுப்பாடுகளுடன் நடைபெற்ற இளவரசரின் இறுதி நிகழ்வில் விதிகளைப் பின்பற்றி மகாராணி எலிஸபெத் மாஸ்க் அணிந்தபடி ஓர் ஓரமாகப் போய்த் தன்னந்தனியாக அமர்ந்திருந்தார் என்பதை ஊடகங்கள் நினைவூட்டியுள்ளன.*

*மே , 2020 மது விருந்துக்காக பிரதமர் பொறிஸ் ஜோன்சன் மன்னிப்புக் கோரியிருந்த நிலையில் ஏப்ரலில் நடந்த அடுத்த விருந்துகளுக்காக அவரது அலுவலகம் இன்று மகாராணியிடம் மன்னிப்புக் கேட்டிருக்கிறது. 'இது மிகவும் வருந்தத்தக்க விடயம்' என்று பிரதமர் அலுவலகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்திருக்கிறார். இந்தச் சம்பவங்கள் பிரதமர் ஜோன்சனின் அரசியல் வாழ்வைப் பெரும் போராட்டத்துக்குள் தள்ளிவிட்டிருக்கின்றன.*

*அவரது பழமைவாதக் கட்சிக்குள் அவரை எதிர்ப்பவர்களும், எதிர்க் கட்சியாகிய தொழிற்கட்சியைச் சார்ந்தவர்களும் பதவி விலகுமாறு அவர் மீது அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றனர்.*

*'பார்ட்டிகேற்' (PartyGate) எனக் கூறப்படுகின்ற இந்த முறைகேடுகள் 57 வயதான ஜோன்சனின் அரசியல் வாழ்வில் நிச்சயமற்றதொரு நிலையை உருவாக்கிவிட்டிருக்கின்றன. அவருக்குப் பின்னால் அடுத்துப் பிரதமர் பதவிக்கு வரக்கூடிய செல்வாக்குமிகுந்த தலைவர்கள் எவரும் அவரது கட்சிக்குள் இல்லை. பிரிட்டிஷ் பிரதமராக 2019 இல் பொறுப்பேற்ற ஜோன்சன் தனது பதவியில் நீடிப்பாரா என்பது தற்போதைய நிலையில் மூத்த சிவில் சேவை அதிகாரியான சூ கிறே (Sue Gray) அம்மையாரின் கைகளிலேயே தங்கியுள்ளது. டவுணிங் வீதி அலுவலகத்தில் விதிகளை மீறி நடந்த விருந்துகள் தொடர்பாக விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கின்ற பொறுப்பு அவரிடமே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன்னர் பல ஊழல் விசாரணைகளில் அமைச்சர்கள் சிலரது தலைகள் உருண்டமைக்கு அம்மையாரது அறிக்கைகளே காரணமாகின என்பது கவனிக்கத்தக்கது.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'





# இந்தவார ராசிபலன் 16.01.2022 – 22.01.2022

ஜனவரி. 16 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம் - தை - 3

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 7.30 - 9.00 |
| ராகு காலம் | : | 4.30 - 6.00 |
| திதி | : | சதுர்த்தசி |

## மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

அனுகூலம் உண்டாகும். எடுத்த விஷயத்தை வெற்றிகரமாகச் செய்து முடிக்க, தேவையான உதவிகள் கிடைக்கும். தொழில், வியாபாரம் முன்னேற்ற பாதையில் செல்லும், சிறப்பாக செயல்பட முடியும் என்ற நம்பிக்கை ஏற்படும். வேலை தேடி கொண்டு இருப்பவர்களுக்கு நல்ல வாய்ப்புகள் வரும். நீங்கள் மதிப்பளிக்கும் நபர்களின் உதவியும். ஆதரவும் கிடைக்கும். எடுத்த பணிகளில் சாதகமான போக்கு காணப்படும். எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வி தொடர்பான சிக்கல்கள் குறையும்.

## ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

பல வகையிலும் நல்ல பலன்கள் உண்டாகும். எதிர்பாராத சம்பவங்களால் இழுபறியாக நின்ற விஷயங்கள் நல்ல முடிவுக்கு வரும். சிறு பயணம் ஒன்று செல்ல நேரிடலாம். சற்று கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். அந்த உழைப்பு நன்மை தரும். கடன் பிரச்னைகள் குறையும். பணியிடத்தில் இருந்த நேரடி, மறைமுக எதிர்ப்பு கள் நீங்கும் குடும்பத்தில் இருந்து வந்த குழப்பங்கள் தீரும். நினைத்ததை முடிப்பதில் கவனமாக இருப்பீர்கள். இழுபறியாக இருந்த பிரச்னைகள் சாதகமான முறையில் முடிவுக்கு வரும்.

## மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

விடா முயற்சியுடன் கடமைகளையும் பணிகளையும் செய்து சாதகமான பலன் பெறுவீர்கள். மனகுழப்பம் நீங்கும். மாணவர்களுக்கு பிரச்னைகள் முழுமையாகத் தீரும். தன்னம்பிக்கையும், தைரியமும் அதிகரிக்கும்.அடிப்படை புத்திசாலித்தனம் காரணமாக மற்றவர்களின் பிரச்னையைத் தீர்த்துப் பாராட்டுப் பெறுவீர்கள். தந்தைக்கு உங்களாலும் உங்களுக்குத் தந்தையாலும் நன்மைகள் உண்டு. தன்னம்பிக்கை அதிகரிக்கும். கொடுத்த தொகை திரும்ப வந்து சேரும். பெரிய மனிதர்களின் நட்பால் நன்மை ஒன்று நிகழும்.

## கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

பொறுப்புகள் அதிகமாகலாம். உழைப்புக்கேற்ற லாபம் இல்லை என்ற எண்ணம் வரக்கூடும். பொறுமை பலன் தரும். குடும்பத்தில் சிறுசிறு பிரச்னைகள் இருந்தாலும் சமாளித்து விடுவீர்கள். உறவினர்கள் வீட்டு விசேஷ நிகழ்வுகளில் பங்கேற்பீர்கள். உடன்பிறப்புகளின் உதவிகள் கிடைப்பதால் சந்தோஷம் ஏற்படும். மற்றவர்களின் விமர்சனங்களைப் பற்றிக் கவலைப்படாமல் செயல்படுவது நல்லது. முயற்சி கைகூடும். குடும்பம் சீராக நடந்து வரும். உறவினர்களின் அரவணைப்பில் பாதிப்பு வராது.

## சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

சுப நிகழ்ச்சி பற்றிய பேச்சுகள் முடிவாகும். முக்கியமான முயற்சி ஒன்றில் வெற்றி பெறுவீர்கள். பண வரவு தாமதம் இன்றிக் கிடைக்கும். மன உறுதி அதிகரிக்கும். தீயவர்களின் மிரட்டலுக்கு பயமின்றி எதிர்ப்பீர்கள். பணி ஒன்றை அவசரமாகச் செய்தததன் காரணமாக ஏற்பட்ட குறையை நிவர்த்தி செய்வீர்கள். நல்ல அனுபவம் பெற்ற பெரியோரின் வழிகாட்டுதலால் பயன்பெறுவீர்கள். திடீர் லாபங்கள் வரும். சகோதரர்களுக்கு நன்மை செய்து அன்பை உறுதி செய்வீர்கள்.

## கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

எதிரிகளின் முயற்சி பலனின்றிப் போகும். பண விஷயத்திலி ஏற்பட்ட குழப்பங்கள் அகலும். ஆரோக்கியத்தில் இத்தனை காலம் இருந்து வந்த அச்சுறுத்தல்கள் முடியும். மாற்று இனத்தவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். முயற்சியில் தடை தாமதங்கள் ஏற்பட்டு நீங்கும். அரசாங்கம் சம்பந்தப்பட்ட ஒருவரின் உதவி கிடைக்கும். புதிய கலை கற்பதில் ஆர்வம் வரும். செலவினங்களை திட்டமிட்டுச் செய்வது நல்லது. உயர் அதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாகாதபடி கவனமாகப் பணி செய்வீர்கள்.

## துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

பேச்சில் மிகுந்த கவனம் தேவை. முயற்சி மிகச் சுலபமாகக் கைகூடும். கடந்த கால பாதிப்புகள் அகலும். குழந்தைகள் நலனில் அதிக அக்கறை எடுத்துக் கொள் வீர்கள். நல்லவர்களின் தொடர்பு நீடிக்கும். திருமணப் பேச்சுகள் இனிதே முடிவடை யும். வீடு, நிலம் வாங்கும் முயற்சியில் சிறு தடைகள் முடிந்து முன்னேற்றம் உண்டு. தாயாருடன் மன வேறுபாடு இல்லாமல் பணிந்துபோவது நல்லது. பணப்பற்றாக் குறையால் ஏற்பட்ட சிரமம் நீங்கும். அலுவலக சகாக்களின் எதிர்ப்பு அடங்கும். கவலை ஒன்று தீரும்

## விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

தடைதாமதங்கள் இருக்கும். நண்பர்களைச் சந்திப்பீர்கள். எந்த விஷயத்திலும் பதற்றமின்றி முடிவெடுப்பீர்கள். உடல் நலத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள். திறமை கள் கூடும் நிம்மமதி மீளும். நல்ல நபர் ஒருவர் அறிமுகமாவார். நண்பர்களிடையே ஒற்றுமை நிலைக்க எடுத்த முயற்சி வெற்றி பெறும். சோம்பல் தடையாகாமல் கவனம் தேவை. புதிய முயற்சிகளை நிறைவேற்ற அடி எடுத்து வைப்பீர்கள். கவலைகள் ஆடை, ஆபரணம் மூலம் தோற்றப்பொலிவு அதிகரிக்கும். தொழிலில் பாக்கி வசூலாகும். மன நிறைவு காண்பீர்கள்.

## தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

குடும்பத்தில் தேவையற்ற பிரச்னைகள் தலை தூக்க வாய்ப்புள்ளதால் பணிந்து பேசி எதையும் சமாளிப்பது நல்லது. குறையும். பொறுப்பும் சுறுசுறுப்பும் அதிகரிக்கும். குடும்பத்தில் சந்தோஷம் மெல்ல அதிகரிக்கும். செலவுகள் கூடும். எதையும் எதிர்த்து நிற்பதை விடுத்து அனுசரித்துச் செல்வது முன்னேற்றத்திற்கு உதவும். அடுத்தவர்களின் நலனுக்காக உழைக்க வேண்டி இருக்கும். வீடு, நிலம் வாங்கும்போதும் விற்கும்போதும் கவனமாக இருப்பது நல்லது. அருகில் இடமாற்றம் உண்டாகலாம். பொறுமை தேவை.

## மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

அலைச்சலுக்குப் பிறகு கடினமான விஷயம் ஒன்று நிறைவேறும். அரசாங்க நன்மை எதிர்பார்த்தவர்களுக்கு நல்ல செய்தி உண்டு. கண் பரிசோதனை செய்ய வேண்டி வரும். சகோதர சகோதரிகளின் சந்திப்பு நிகழும். பொறுமை காக்கவும். நெருங்கிய ஒருவரின் முயற்சியால் வாழ்வில் முன்னேற்றம் உண்டாகும். வழக்கு விவகாரங்களை தள்ளிப் போடுவதும் நன்மை தரும். கோபத்தைக் காட்டாமல் நிதானமாகப் பேசுவதால் மற்றவர்கள் உங்களை மதிப்பார்கள். புதிய பொருள் வாங்க வேண்டி வரும்.

## கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

படபடப்பில்லாமல் பேசி மற்றவர்களிடம் அனுசரித்துச் செல்வது முன்னேற்றத்துக்கும் வெற்றிக்கும் உதவும். மெத்தனம் காட்டாமல் இருப்பது நல்லது. எதிர்பார்த்தபடி இந்த வாரம் அமையும். கலையில் ஆர்வம் உண்டாகும். அரசாங்க விஷயமாக எடுத்த செயல்களில் உடனே வெற்றி ஏற்படும். பயணங்கள் சற்றுத் தள்ளிப்போகக்கூடும். கணவருக்கு, மனைவிக்கு நன்மை ஏற்படும். அழகுணர்ச்சி அதிகரிக்கும். வீண் அலைச்சல் இருக்கும். அரசியல்துறையினர் அடுத்தவர்களிடம் வாக்குவாதத்தைத் தவிர்ப்பது நன்மை தரும்.

## மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

எதிர்பார்த்த வேகத்தில் விஷயங்கள் நடைபெறாதிருந்தால் பொறுமை காக்கவும். எடுத்த விஷயம் சிறப்பாக முடிவதற்குச் சற்று மெனக்கெட வேண்டியிருக்கும். பயணங் கள் செல்ல முடியாவிட்டாலும் தொலைத் தொடர்பின் மூலம் நன்மை கிடைக்கப் பெறுவீர்கள். அதிகம் சிரமப்படாமல் நன்மையடைவீர்கள். முன்னேற்றத்துக்கான ஆலோசனைகளை கிடைக்கும். செயல்திறமை வெளிப்படும். பாராட்டுக் கிடைக்கும். களைப்பு நீங்கி உற்சாகம் வரும் வழக்கு விவகாரங்களில் நீங்களாக முன்வந்து ஈடுபடாமல் தவிர்ப்பது நல்லது.

# புத்தகப் பகிர்வு

பகிர்வு -12

**கணபதி சர்வானந்தா**

உதவுதல் என்பது ஒரு இயல்பு. யாரோ ஒருவர் நமக்கு உதவிசெய்து கொண்டிருப்பதால்தான் இந்த உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. மிகவும் உன்னிப்பாகக் கவனித்தால் மட்டுமே அதனை உணரமுடியும். அவ் உதவிகள் தொடர்ச்சியானவையாகவும் அத்துடன் வடிவ மாற்றங்கள் கொண்டவையாகவும் காணப்படுகின்றன. சொல்லிக்கொண்டு உதவுதல், சொல்லாமல் உதவுதல், தக்க சமயத்தில் உதவுதல், தான் உதவி செய்வது தெரியாமல் உதவுதல் என்று இதற்கு பல பெயர்கள் உண்டு. இருந்த போதும் ... உதவுதல் என்பது ஒரு இயக்கம் என்று சொல்லலாம்.

பயணிக்கப் புறப்படும் ஒருவரை நோக்கிப் “பார்த்துப் போங்கள்” என்று சொல்வது ஏன்? மழை காலத்தில் “வழுக்கும் கவனம்” என்ற எச்சரிப்பு எதனால் ஏற்படுகிறது? கோடையில் “வெயில் தணியட்டும். சற்றுத் தாமதித்துப் போகலாமே!” என்று சொல்வதெல்லாம் எதற்காக..? உதவுதல் என்ற விடயம் எம் உள் இருக்கிறது என்பதையே அவை எமக்கு உணர்த்துகின்றன.

புத்தக வடிவில் சமூகத்துக்கு உதவுதல் பற்றிய ஒரு விடயத்தைப் படித்தேன். ஒரு இணைய முகநூல் பதிவு அது. அந்த விடயம் பலரைத் தொழிற்படுத்தும்.. பலரை நெறிப்படுத்தும்என்ற உணர்வு ஏற்பட்டதனால் அதனை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

ஏழைகளுக்கு இங்கே புத்தகங்கள் இலவசம் - என்ற வாசகத்தோடு தூத்துக்குடியில் இயங்கும் ஒரு புத்தக வங்கி பற்றிய எழுத்து.

“ஒரு நாள் படிப்பதற்காகப் புத்தகம் கேட்டு வரும் மாணவர்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு அதிகரிக்கிறது. ஆனால், அத்தனை பேருக்கும் எங்களால் உதவ முடியவில்லை. முக்கிய பிரமுகர்கள் இந்த நல்ல முயற்சிக்கு நிதி கொடுத்து உதவுவார்களேயானால், அதுவே எங்களது முயற்சிக்குக் கிடைத்த வெற்றியாகும்” - என்கிறார் பொன்னுசாமி

தூத்துக்குடி தெற்கு, கால்ற்றன் சாலையின் வழியே சென்று கொண்டிருந்தபோது, அந்த பழமையான கட்டிடத்திலிருந்து மாணவிகள் புத்தகமும் கையுமாய் வெளியேறிக் கொண்டிருந்தார்கள். “புத்தகக் கடை ஏதும் இருக்குமோ?” என்று எட்டிப் பார்த்தேன். அங்கே கடந்த 17 ஆண்டுகளாக புத்தக வங்கி ஒன்று செயல்பட்டுக் கொண்டிருப்பதாகச் சொன்னார்கள்.

அந்தப் புத்தக வங்கியை ஆரம்பித்த பொன்னுசாமிக்கு இப்போது வயது 84. தூத்துக்குடி பகுதியில், புத்தகம் வாங்கிப் படிக்க வசதியில்லாத கல்லூரி மாணவர்களுக்கு இந்தப் புத்தக வங்கியில் இலவசமாகப் புத்தகங்களை வழங்குகிறார்கள். படிப்பு முடிந்ததும் அந்தப் புத்தகங்களை திரும்பப் பெற்று அடுத்த ஆண்டு மாணவர்களுக்கு அவற்றை வழங்குகிறார்கள். இதுவரை இந்த புத்தக வங்கியின் மூலம் 1,766 மாணவர்கள் பயனடைந்துள்ளனர் என்ற பதிவு அவர்களிடம் உண்டு. இதுவரை அவர்கள் கொடுத்து உதவிய புத்தகங்களின் மதிப்பு சுமார் ரூ.9.37 லட்சம் பெறுமதி உடையதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. தற்போது வங்கியில் உள்ள மொத்தப் புத்தகங்கள் தொகை “மூவாயிரம்” என்று பெருமையாய் சொல்கிறார் பொன்னுசாமி.

“எனக்கு ஆறு குழந்தைகள். அப்போ உப்பு வியாபாரத்தில் இருந்த நான், அத்தனை பிள்ளைகளுக்கும் கொப்பி, புத்தகங்கள் போன்றவற்றை வாங்கிக் கொடுக்க முடியாமல் திணறியதுண்டு. நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த நமக்கே இவ்வளவு சிரமம் என்றால், ஏழைகள் எவ்வளவு கஷ்டப்படுவார்கள் என்று யோசித்தேன். அதன் வழி வந்ததுதான் இந்தப் புத்தக வங்கி என்ற செயல் வடிவம்.

எனக்குச் சொந்த ஊர் கீழ ஈரால். தூத்துக்குடியில் வசிக்கும் கீழ ஈரால் மக்களின் நலனுக்காக, 1974இல் கீழ ஈரால் நாடார்கள் மகமை அறக்கட்டளையைத் தொடங்கி அதற்கு செயலாளரானேன். அந்தச் சமயத்தில், நாடார்கள் மகமை அறக்கட்டளை உறுப்பினர் ஒருவரின் மகனுக்கு கல்லூரியில் படிக்கப் புத்தகங்கள் வாங்குவதற்காக அந்த மகமை அறக்கட்டளையின் உதவியை அவர் நாடினார். மகமை உறுப்பினர்கள் அனைவரும் பணம் போட்டு புத்தகங்களை வாங்கிக் கொடுத்தோம். புத்தக வங்கி தொடங்குவதற்கு அதுதான் உந்துதலாகக இருந்தது.

தொடக்கத்தில் ரூ.13 ஆயிரம் முதலீட்டில் - 1996 இல் மகமை உறுப்பினர்கள் அனைவரது சம்மதத்துடன் இந்தப் புத்தக வங்கியைத் தொடங்கினோம். மகமை கையிருப்பு ரூ. 13 ஆயிரத்தை அப்படியே போட்டுப் புத்தகங்களை வாங்கினோம். அதன் மூலம் முதல் ஆண்டு 7 மாணவர்களுக்கு புத்தகங்களை வழங்கினோம். அது படிப்படியாக வளர்ந்து இந்த ஆண்டு 123 மாணவ - மாணவியர்களுக்கு புத்தகங்களை வழங்கியுள்ளோம் - என்கிறார் அவர்.

புத்தகம் கேட்டு வரும் மாணவர்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு அதிகரிக்கிறது. ஆனால், அத்தனை பேருக்கும் எங்களால் உதவ முடிய வில்லை. முக்கிய பிரமுகர்கள் யாரும் இந்த நல்ல முயற்சிக்கு நிதி கொடுக்கத் தயாரில்லை. மகமை உறுப்பினர் முத்துக்கனி கொடுத்த ஒரு லட்ச ரூபாவை வங்கியில் வைப்புச் செய்து, அதில் கிடைக்கும் வட்டியில் ஆண்டுதோறும் புதிய புத்தகங்களை வாங்கி வைக்கிறோம். ஆரம்பத்தில் மகமை உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு மட்டுமே உதவினோம். இப்போது அனைத்து ஏழைக் குழந்தைகளுக்கும் உதவி வருகிறோம்” என்றார் பொன்னுசாமி.

இந்தப் புத்தக வங்கியில் புத்தகங்களை வாங்கிப் படித்தவர்களில் சிலர் மருத்து வர்களாகவும் பொறியாளர்களாகவும் இருக்கிறார்கள். சென்னை உள்ளிட்ட இடங்களில் இதுபோன்ற புத்தக வங்கிகள் இருந்தாலும் அங்கெல்லாம் குறிப்பிட்ட தொகையை முன்பணமாக வாங்கிக் கொண்டுதான் புத்தகங்களை கொடுக்கிறார்கள். ஆனால், இங்கே அப்படி எந்தப் பணமும் அறவிடப்படுவதில்லை.

“எனக்குப் பிறகு இந்த புத்தக வங்கியை செம்மையாக நடத்துவதற்கு இளைஞர்கள் முன்வரவேண்டும். தூத்துக்குடி மாநகரம் மட்டுமின்றி, மாவட்டம் முழுமைக்கும் உள்ள அனைத்துக் கல்லூரி மாணவர்களுக்கும் புத்தகங்களை வழங்குமளவுக்கு இந்தப் புத்தக வங்கி ஆல் போல் தழைக்க வேண்டும்'' என்ற பொன்னான வார்த்தைகளைச் சொல்லி எமக்கு விடைகொடுத்தார் பொன்னுசாமி. - என்று முடிகிறது அப்பதிவு.

# 2022, 2023 ஆம் ஆண்டுகளில் உலகின் பொருளாதார வளர்ச்சி மந்தநிலையில்!

## சுட்டிக்காட்டுகின்றது ஐ.நா.

நியூயோர்க், ஜன. 16

**2022 மற்றும் 2023-ஆம் ஆண்டுகளில் உலக பொருளாதார வளர்ச்சி மந்தமாகவே இருக்கும் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.**

கொரோனா தொற்று நோய், தொடர்ச்சியான தொழிலாளர் சந்தை சவால்கள், நீடித்து வரும் விநியோக சங்கிலி சிக்கல்கள், பணவீக்கம் அதிகரிப்பு உள்ளிட்ட பாதிப்புகளால் புதிய ஆண்டிலும் இந்தச் சிக்கல் தெரியும் எனக் கூறப்பட்டுள்ளது.

உலக பொருளாதார நிலை மற்றும் 2022-ஆம் ஆண்டுக்கான வளர்ச்சி வாய்ப்புகள் குறித்து நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை ஐ.நா. வெள்ளிக் கிழமை வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 2021 ஆம் ஆண்டு தொடக்கத்தில் உலக பொருளாதாரம் கடந்த 40 ஆண்டுகளில் இல்லாத அளவில் 5.5 சதவீத அளவுக்கு வளர்ச்சி பெற்றது.

ஆனால், அந்த ஆண்டின் இறுதியில் கொரோனா பாதிப்பால் ஏற்பட்ட தாக்கம் காரணமாக உலக பொருளாதார வளர்ச்சி வீதம் சரியத் தொடங்கியது.


சீனா, ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா போன்ற மிகப் பெரிய பொருளாதார வல்லரசுகளும் கடும் சரிவை சந்தித்தன. தொடர்ந்து, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் உலக பொருளாதார வளர்ச்சி குறைவாகவே இருக்கும்.

2022 இல் உலக பொருளா தார வளர்ச்சி விகிதம் 4 சதவீத அளவி லும், 2023-இல் 3.5 சதவீத அளவிலும் இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலான வளரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சி பொதுவாக பலவீனமாக இருக்கும். குறிப்பாக, சுற்றுலா துறையை சார்ந்துள்ள நாடுகளில் பொருளாதார வளர்ச்சி மிக மந்தமாகவே இருக்கும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைவருக்கும் தடுப்பூசி என்பது உள்ளிட்ட கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைக்கு ஒருங்கிணைந்த, நீடித்த சர்வதேச முயற்சி எடுக்கப்படவில்லை என்றால் உலக பொருளாதாரம் மீண்டும் எழுச்சி பெறுவதில் மிகப்பெரிய அச்சுறுத்தல் தொடரும் என ஐ.நா.வின் பொருளாதாரம் மற்றும் சமூக நலன்களுக்கு பொறுப்பான துணைப் பொதுச் செயலாளர் லியு ஜென்மின் தெரிவித்துள்ளார். (அ)

# கடந்த ஆண்டு மட்டும் 1,400 பில்லியன் ரூபா பணத்தை அச்சடித்துக் குவித்தது இலங்கை!



கொழும்பு, ஜன. 16

2021ஆம் ஆண்டு இலங்கை யில் 1,400 பில்லியன் ரூபா பணம் அச்சடிக்கப் பட்டதாக மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பணத்தை அச் சிடுவதால் சில சிக்கல்கள் எழ லாம் எனவும் ஒப்புக்கொண்ட மத்திய வங்கியின் ஆளுநர், அச்சிடப்படும் பணத்தின் அளவை இலங்கை மத்திய வங்கி குறைத்து தற்போது வருவ தாகவும் ஒப்புக்கொண்டார். பணம் அச்சடிக்கும் நடை முறை புதிய நிகழ்வு அல்ல எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# நெடுந்தீவில் உயிரிழந்து கரையொதுங்கும் மீன்கள்

## இந்திய மீனவர்கள் காரணமென குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜன. 16

நெடுந்தீவு கடற்கரையில் அதிகமான மீன்கள் இறந்த நிலையில் கரையொதுங்கியுள்ளன.

நெடுந்தீவு கிழக்கு கடற்கரையில் நேற்று முன் தினம் காலையில் இருந்து இறந்த நிலையில் மீன்கள் கரையொதுங்குவதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

இந்த செயற்பாட்டுக்கு இந்திய இழுவைமடி மீன்பிடியைமேற்கொள்ளும் மீனவர்களே காரணமாக இருக்கக்கூடும் என மீனவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

வடக்கு கடலில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்களது இழுவைப்படகுகளில் பிடிக்கப்பட்ட மீன்களே இவ்வாறு இறந்த நிலையில் கரையொதுங்கி வருவதாக நெடுந்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச தலைவர் குரூஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த புதன் கிழமை வடக்கு கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் இழுவை மடி பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டபோது ரோந்து சென்ற இலங்கை கடற்படையினரை கண்டு தப்பியோடியதாக தெரியவந்துள்ளது.

இவ்வாறு இலங்கைக் கடற்படையை கண்டு ஓடியபோது மடியை வெட்டிவிட்டுச் சென்ற காரணத்தினால்தான் இவ்வளவு பெருந்தொகையான மீனகள் இறந்த நிலையில் கரையொதுங்கியுள்ளன-என்றார். (அ)

# வாகன விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜன. 16

மத்துகம-ஹொரணை பிரதான வீதியில் வாகன விபத்து ஒன்று இடம்பெற்றுள்ளது.

ஓட்டோ ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகியதில் இந்த விபத்து ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் பலத்த காயமடைந்தவர் ஹொரணை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது உயிரிழந்தார் என தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்தவர் புளத்சிங்கள, திப்போட்டாவ பகுதியைச் சேர்ந்த 56 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

# 'சந்திரிகா' நூல் வெளியீடு!



முன்னாள் ஜனாதிபதி சந் திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவைப் பற்றி எழுதப்பட்ட நூல் நேற்று முன்தினம் கொழும்பில் வெளியிடப் பட்டது. தரிந்து தொட்டவத்தவால் தொகுக்கப்பட்டுள்ள இந்த நூல், சந்திரிகா எனப் பெயரிடப்பட் டுள்ளது.

நூல் வெளியீட்டு விழாவில் அரசியல் பிரமுகர்கள், கலைஞர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

முன்னாள் ஜனாதிபதியின் பிரத்தியேக வாழ்க்கை மற்றும் அரசியல் வாழ்க்கையின் முக்கியமான பல தருணங்களை உள்ளடக்கி இந்த நூல் படைக்கப்பட்டுள்ளது. நான்கு வருட காலம் முன்னெடுக்கப்பட்ட தேடலின் பயனா கவே நேற்று முன்தினம் இந்த நூல் சாத்தியமாகியுள்ளது. வெளியீட்டு வைபவத்தில் முன்னாள் பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க சிறப்புரை ஆற்றினார்.

இதன்போது, சந்திரிகா ஜனாதிபதியாக இருந்த காலத்தில் நீதித் துறையின் சுதந்திரம் பாதுகாக்கப்பட்டது என ஷிராணி பண்டாரநாயக்க குறிப்பிட்டார். 2013 ஜனவரியில் நீதித்துறை சுதந்திரத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களின் பின்னர் சந்திரிகா மீதான மதிப்பும் மரியாதையும் மென்மேலும் உயர்ந்தது எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# பிரதமரின் தலைமையில் தேசிய பொங்கல் விழா!



கொழும்பு, ஜன. 16

பிரதமர் மஹிந்த ராஜ பக்ஷ தலைமையில் தேசிய தைப்பொங்கல் விழா நேற்று முன் தினம் பிற்பகல் அலரி மாளிகையில் நடைபெற்றது.

விவசாய நடவடிக்கைகளுக்கு உதவிய சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தும் வகையில் தை மாதம் முதல் நாள் இவ்வாறு சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் என்ற வகையில் பிரதமரின் ஆலோசனைக்கமைய இம்முறை தைப்பொங்கல் விழா சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அலரி மாளிகையில் நடைபெற்ற தேசிய பொங்கல் விழா இந்து கலாசார அம்சங்களுடன் நடைபெற்றதுடன், பிரதமருடன், பிரதமரின் பாரியார் திருமதி ஷிரந்தி விக்ரமசிங்க ராஜபக்ஷவும் விழாவில் கலந்து கொண்டார்.

நிகழ்வில் கலாசூரி வாசுகி ஜெகதீஸ்வரனின் மாணவிகளின் நடன நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டன.

இதன்போது இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் அச்சிடப்பட்ட இந்து அறநெறி பாடசாலை மாணவர்களுக்கான புதிய பாடத்திட்டத்துக்கு அமைவான புத்தகங்கள் பிரதமரின் பாரியார் திருமதி.ஷிரந்தி விக்ரமசிங்க ராஜபக்ஷவால் மாணவர்களுக்கு வழங்கி வெளியிட்டு வைக்கப்பட்டது.

கொழும்பு ராமகிருஷ்ண மிஷன் தலைவர் அக்ஷராத் மானந்த மஹராஜ் சுவாமி, பிரதமரின் இந்து சமய விவகாரங்களுக்கான இணைப்பாளர் ராமசந்திர குருக்கள் பாபு சர்மா உள்ளிட்ட இந்து மதகுருமார் பலர் நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

தேசிய பொங்கல் விழாவின் நிறைவில் இந்து மதகுருமார் இந்து முறைப்படி பிரதமரை ஆசீர்வதித்தனர்.

குறித்த நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன், பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளர் அங்கஜன் ராமநாதன், இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லே, பிரதமர் அலுவலக பணிக்குழாம் பிரதானி யோஷித ராஜபக்ஷ, பிரதமரின் ஒருங்கிணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான், இந்து சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் உமா மகேஸ்வரன் மற்றும் அத் திணைக்களத்தின் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (அ)

# சு.கவுக்குள் நெருக்கடி இல்லை மறுசீரமைப்புப் பணி மும்முரம்

## அமைச்சர் மஹிந்த அமரவீர கூறுகிறார்

கொழும்பு, ஜன. 16

**சுதந்திரக் கட்சிக்குள் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதாக வெளியாகும் செய்தி கள் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.**



கட்சியில் அவ்வாறான நெருக்கடிகள் எதுவும் இல்லையெனவும், 14 பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் மத்திய குழு, அமைப்பாளர்கள் மற்றும் கிராம உறுப்பினர்கள் அனைவரும் இதே கருத்தில் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது கட்சியை மறுசீரமைக்கும் பணிகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும், இதற்காக கட்சியின் தலைவர்கள் கிராம மட்டங்களிலும் பிரதேச மட்டங்களிலும் கூட்டங்களை நடத்தி வருவதாகவும் அவர் கூறினார்.

சிலர் கட்சி மறுசீரமைப்பு தொடர்பில் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு வருவதாகவும், இருப்பினும் சுதந்திரக் கட்சி அது பற்றி பொருட்படுத்தவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பல அரசியல் தலைவர்களுக்கு கிராமங்களுக்கு செல்வதில் பல பிரச்னைகள் இருப்பதாக தெரிவித்த அமைச்சர் மஹிந்த அமரவீர, சுதந்திர கட்சிக்கு அவ்வாறானதொரு நிலை ஏற்படவில்லை என்றும் பெருமிதம் வெளியிட்டார். (அ)

# அரசியல்வாதிகளும், அரச ஊழியர்களும் நாட்டுக்கு சுமை என்பது ஏற்கக்கூடியதே!

## அமைச்சர் டலஸ் அழகப்பெரும கருத்து

கொழும்பு, ஜன. 16

அரசியல்வாதிகளும் அரச உத்தியோகத்தர்களும் நாட்டிற்குச் சுமை என்பதே சமூகத்தின் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதென ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

திஹாகொட பிரதேச செயலகத்தில் அரச உத்தியோகத்தர்கள் கலந்து கொண்ட நிகழ்வில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக் கண்ணோட்டத்தை மாற்றுவதற்கு அனைத்து அரச ஊழியர்களும் அரசியல்வாதிகளும் ஒன்றிணைந்து செயற்படவேண்டுமென அமைச்சர் வலியுறுத்தினார்.

அரச நிர்வாகத்தில் நேர்மையாகவும் பொறுப்புடனும் செயற்படவேண்டிய பொறுப்பு குறித்தும் டலஸ் அழகப்பெரும கருத்துத் தெரிவித்தார். (அ)

# தைப்பொங்கல் தினத்தன்று வவுனியாவில் கைகலப்புகள்

## 15 பேர் படுகாயம்

வவுனியா, ஜன. 16

வவுனியாவில் தைப்பொங்கல் தினத்தில் பல்வேறு பிரதேசங்களில் இடம்பெற்ற கைகலப்பு சம்பவங்களில் 03 பெண்கள் உட்பட 15 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை 04.00 மணி தொடக்கம் இரவு 12.00 மணி வரையான காலப்பகுதியிலேயே குறித்த சம்பவங்களில் பதிவாகியுள்ளன.

இவ்வாறு காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் 12 ஆண்களும் 03 பெண்களும் அடங்குகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவங்கள் வவுனியா பூந்தோட்டம், புளியங்குளம், ஈச்சங்குளம் ஆகிய பகுதிகளில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அதிபர், ஆசிரியர் சேவைகள் அரசால் மூடப்பட்ட சேவைகளாக பிரகடனம்

கொழும்பு, ஜன. 16

இலங்கை அதிபர்கள் சேவை - ஆசிரியர் ஆலோசனை சேவை மற்றும் இலங்கை ஆசிரியர் சேவை ஆகியவை மூடப்பட்ட சேவைகளாக கல்வி அமைச்சின் செயலாளரினால் அதிசிறப்பு வர்த்தமானி அறிவித்தல் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது பொதுச் சேவை ஆணைக்குழுவின் ஒப்புதலுடன் வெளியிடப்பட்டது.

இந்தப் பிரகடனம் 2021 ஒகஸ்ட் 30ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பதவி உயர்வுகள், நியமனங்கள், ஒழுக்காற்று இடமாற்றங்கள் மற்றும் ஏனைய நிறுவன விடயங்கள் தொடர்பான அதிகாரங்கள் மற்றும் ஏற்பாடுகள் தற்சமயம் அந்தந்த சேவைகளுக்கு தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும் என தொடர்புடைய வர்த்தமானி அறிவித்தலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஒவ்வொரு சேவைக்கும் தனித்துவமான குறிப்பிட்ட சம்பள அமைப்புகளை விசாரித்து அதற்கேற்ப திருத்தவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. (அ)

# மீண்டும் சீனாவிடம் கடன் வாங்கும் பேச்சுவார்த்தைகளில் இலங்கை அரசு

கொழும்பு, ஜன. 16

சீனாவிடமிருந்து புதிதாக மற்றுமொரு கடனைப் பெறுவதற்கான பேச்சுவார்த்தைகளில் இலங்கை அரசாங்கம் ஈடுபட்டு வரும் நிலையில், அவசியமான உதவிகளை வழங்க சீனா எப்போதும் தயார் என அந்நாட்டு வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கூறியுள்ளார்.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான இராஜதந்திர தொடர்புகள் ஆரம்பமானதிலிருந்தே இரு நாடுகளும் பரஸ்பரம் புரிந்துணர்வையும் ஒத்துழைப்பையும் வெளிப்படுத்தி வருகின்றன என்றும் அவர் கூறினார்.

சீனாவிடமிருந்து புதிதாகக் கடன்களைப் பெறுவதற்கான பேச்சுவார்த்தைகள் ஓரளவுக்கு முன்னேற்றகரமான நிலையில் இருப்பதாகவும் இறுதிக்கட்ட முடிவுகள் எடுக்கப்பட்டவுடன் அறிவிக்கப்படும் என்றும் சீன வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கூறினார்.(அ)

## மலையகத்தில் பட்டிப்பொங்கல்

# மாட்டுக்குப் பொங்கலை ஊட்டிய நாமல் ராஜபக்ஷ



கொழும்பு, ஜன. 16

உழவர் திருநாளை முன்னிட்டு நேற்று மலையகத்தில் பட்டிப் பொங்கல் மிகவும் சிறப்பாக கால்நடை வளர்ப்பாளர்களால் கொண்டாடப்பட்டது.

அந்தவகையில் மலையகத்தில் பிரதான நிகழ்வு கொட்டகலை ரொசிட்டா தேசிய பண்ணை வளாகத்தில் பட்டிப் பொங்கல் சிறப்பாக நடைபெற்றது.

இதில் இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரும், அபிவிருத்திக் கூட்டிணைப்பு மற்றும் கண்காணிப்பு அமைச்சரும் மற்றும் டிஜிற்றல் தொழில்நுட்பம் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான நாமல் ராஜபக்ஷ, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, இந்திய உதவித் தூதுவர் திருமதி. ஆதிரா, நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ரமேஷ்வரன், இ.தொ.காவின் உப தலைவரும், பிரதமரின் இணைப்பு செயலாளருமான செந்தில் தொண்டமான் ஆகியோருடன் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முக்கியஸ்தர்கள் உள்ளிட்ட உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இதன்போது பொங்கல் வைத்து கால்நடைகளுக்கு பிரதம அதிதிகள் பொங்கல் ஊட்டி நிகழ்வை சிறப்பித்தனர். (அ)

# வரவு - செலவுத் திட்ட நிதியில் கிளிநொச்சிக்கு 545 மில்லியன்

## வெளிப்படைத்தன்மையுடன் செலவிடுமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பணிப்பு

கிளிநொச்சி, ஜன. 16

2022ஆம் ஆண்டுக்கு வரவு - செலவுத் திட்ட நிதியொதுக்கீட்டின்படி கிளிநொச்சி மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள 545 மில்லியன் ரூபா பணத்தை வெளிப்படைத்தன்மையுடன், மக்கள் நலன்சார்ந்து செலவிடுமாறு அமைச்சர் டக்ளஸ் அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தை தலைமையேற்று நடத்திய கடற்றொழில் அமைச்சரும், ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா அதிகாரிகளுக்கு இந்தப் பணிப்புரையை வழங்கினார்.

2022ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்ட நிதியொதுக்கீட்டின்படி, கிராமத்துடனான உரையாடல் திட்டத்தின்கீழ் கிளிநொச்சியின் 95 கிராம சேவையாளர் பிரிவுகளுக்கும் தலா 3 மில்லியன் படி 285 மில்லியன் ரூபாவும், இணைத்தலைவரின் ஒதுக்கீடாக 100 மில்லியன் ரூபாவும், 40 வட்டாரங்களுக்கும் தலா 4 மில்லியன்படி 160 மில்லியன் ரூபாவுமாக மொத்தம் 545 மில்லியன் ரூபா கிளிநொச்சி மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில், முதலாவது காலாண்டுக்கென கிராமத்துடனான உரையாடல் திட்டத்துக்கு 58 மில்லியனும், வட்டாரங்களுக்கு 32 மில்லியனும், இணைத்தலைவரின் ஒதுக்கீடாக 20 மில்லியனுமாக, மொத்தம் 110 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியை வெளிப்படைத்தன்மையுடன், மக்களுடைய நலன்களை நிறைசெய்யக்கூடிய வகையில் நன்கு திட்டமிட்டுச் செலவிடுமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அதிகாரிகளைப் பணித்தார்.

கிராமத்துடனான உரையாடல் திட்டத்தின்படி கிளிநொச்சியின் 95 கிராமசேவையாளர் பிரிவுகளிலும் இணைத்தலைவர் டக்ளஸ் தேவானந்தாவின் இணைப்பாளர்கள் தலைமையில் பொதுமக்களுடனான நேரடிக் கலந்துரையாடல் மூலம் முன்னுரிமை அடிப்படையில் திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதில், சில கிராமங்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு நிதிப்பற்றாக்குறை உள்ள திட்டங்களுக்கு முன்னுரிமையளித்து இணைத்தலைவரின் நிதியொதுக்கீடு பங்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதேபோல், உள்ளூராட்சி மன்றங்களின் வட்டாரங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியையும் வெளிப்படைத்தன்மையுடன் பொதுமக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் செலவிடுமாறே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதன் போது பணிப்புரை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சீனாவின் உயிர் நண்பனான இலங்கைக்கு இந்தியாவின் நிதியுதவி அறிவிப்பு



பேராசிரியர்
கே. ரீ. கணேசலிங்கம்

இந்திய - இலங்கை உறவு முரண்பாட்டையும் சுமுக தன்மையையும் மாறிமாறி கொண்டிருக்கும் போக்கொன்று கடந்த பல தசாப்தங்களாக நிகழ்ந்து வருகிறது. இதன்தொடர்ச்சி சமகாலத்திலும் பேணப்படுகிறது.

இலங்கையின் நிதியமைச்சர் டிசெம்பரில் இந்தியாவுக்கு மேற்கொண்ட பயணத்தின்போது நான்கு பிரதான கோரிக்கைகளை முன்வைத்தார். அதற்கான பதிலை கடந்த 13ஆம் திகதி 90 கோடி டொலர் நிதியுதவியை வழங்கியதன் மூலம் வெளிப்படுத்தியுள்ளது. அதேநேரம் திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் இந்தியாவுக்கு கையளிப்பது தொடர்பான உடன்பாடும், தமிழ்த் தேசிய கட்சிகளின் இந்திய பிரதமருக்கு அனுப்ப திட்டமிட்ட ஆவணத்தின் வடிவமும் இக்காலப்பகுதி இலங்கை - இந்திய உறவை முதன்மைப்படுத்துவதாக அமைந்து உள்ளது. இக்கட்டுரை சீனாவின் உயிர் நண்பனான இலங்கைக்கு இந்தியாவின் பெரும் நிதியுதவி என்பதை புரிந்து கொள்வதாக அமையவுள்ளது.

இந்திய மத்திய அரசு 90 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான நிதியுதவியை இலங்கையின் அந்நியச் செலாவணிக் கையிருப்பை வலுப்படுத்துவதற்காக வழங்குமென இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே இலங்கையின் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலை நேரில் சந்தித்து உறுதிப்படுத்தியதாக செய்திகள் வெளியாகியிருக்கின்றன. இதேநேரம் ஈழத்தமிழர்களின் நீடித்த இனப்பிரச்னைக்கான தீர்வுக்கு அனுசரணை வழங்கும் நோக்குடன் இந்திய பிரதமருக்கு கைச்சாத்திட்ட ஆவணத்தை இலங்கைக்கான இந்திய தூதுவரிடம் கையளிக்க தயாரான போது தூதுவர் புதுடில்லி சென்றிருக்கிறார் என்ற செய்தி வெளியாகியிருந்தது. இவ்விரண்டு செய்திகளும் இலங்கை - இந்திய உறவையும் ஈழத்தமிழர்களின் அரசியல் இருப்பையும் புலப்படுத்துகின்ற விதத்தில் அவதானிக்க வேண்டியது அவசியமாகும்.

முதலாவது, இந்திய தரப்பு தென்னிலங்கையோடு புரிதலையும் ஒத்துழைப்பையும் ஏற்படுத்துவது என்பது அந்த நாட்டின் நலனுக்கு உட்பட்டது. திருகோணமலை எண்ணெய் குதங்கள், மேற்கு முனையம், பலாலி சர்வதேச விமான நிலையம், காரைக்கால் கப்பல் சேவை போன்ற விடயங்கள் பொறுத்து இந்தியாவின் நகர்வுகள் அவசியமானவையாகும். அத்தகைய நகர்வுகள் இந்திய நலன்களை இலங்கையிலும் இந்து சமுத்திர பிராந்தியத்திலும் தெற்காசியாவிலும் உறுதிப்படுத்தக்கூடியது. ஆனால், அதேநேரத்தில் ஈழத்தமிழர்கள் நீண்ட நெருக்கடிக்குள் காணப்படுவது மட்டுமன்றி 2009களுக்கு பின்னர் தீர்வுமின்றி - இருப்புக்கான உத்தரவாதமுமின்றி காணப்படுகிறார்கள் என்பது இந்தியாவின் கரிசனைக்குட்பட்டதே. இதனை கருத்தில்கொண்டே இந்தியாவை நோக்கி இந்தியாவின் முக்கியத்துவம் கருதியும் தமிழ்த் தேசிய கட்சிகள் நடவடிக்கை ஒன்றை முன்னெடுக்கவும் திட்டமிட்டிருந்தன. அத்தகைய திட்டமிடலை இந்திய தரப்பு உதாசீனம் செய்கின்றதா என்ற சந்தேகம் ஏற்பட தொடங்கியுள்ளது. காரணம் அஜித் கப்ராலை சந்தித்து செய்தி சொல்லும் இந்தியத் தூதுவர் கடிதம் கையளிக்க தயாரானபோது புதுடில்லி சென்றாரென செய்தி வெளியானது குழப்பத்தை தருகிறதாகவே தெரிகிறது.

இரண்டாவது, அதேநேரம் தமிழ்த் தேசிய கட்சிகள் நீண்ட இழுபறிகளுக்கு பின்னர் உடன்பாட்டில் கையெழுத்திட்ட அதேதினத்தில் திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் தொடர்பில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் ஓர் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. அவ்வாறாயின் தமிழ்த் தேசிய கட்சிகளின் நகர்வுகளை முன்னிறுத்தி எண்ணெய் குதங்கள் சார்ந்த உடன்பாட்டை இந்தியா அடைந்துள்ளதா என்ற கேள்வி நியாயமானதாகவே உள்ளது. அதாவது ஈழத்தமிழர்களின் அரசியல் பிரச்னைகளை முன்னிறுத்திக்கொண்டு தென்னிலங்கை ஆட்சியாளர்களை தமது கட்டுப்பாட்டுக்குள்ளும் செல்வாக்குக்குள்ளும் கொண்டு வருவதற்கு இந்திய தரப்பு முனைகிறதா என்ற குழப்பமே அதுவாகும். இந்திய - இலங்கை உடன்பாடு மட்டுமல்ல கச்சதீவு உடன்படிக்கை, சிறீமா-சாஸ்தரி உடன்பாடு என்பன எல்லாமே இந்திய நலன்களுக்குட்பட்டதேயாகும்.

மூன்றாவது, ஈழத்தமிழர்களின் அரசியல் அபிலாசை இந்தியாவுடனான புரிதலை ஏற்படுத்தமாயின் தென்னிலங்கையின் ஆட்சி அதீத குழப்பத்தை எதிர்கொள்ளும். இதனை முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன ஆட்சிக் காலம் முதல் அவதானிக்க முடிகிறது. அவர் முன்னின்று செயல்பட்டு ஈழத்தமிழர்களையும் இந்தியாவையும் திட்டமிட்டு பகையாளிகளாக மாற்றினார். அத்தகைய பகைமையே பின்வந்த தென்னிலங்கை ஆட்சியாளர்கள் பேணி பாதுகாத்து பலப்படுத்தி வருகின்றனர். அதாவது, ஈழத்தமிழருக்கும் இந்தியாவுக்குமான புரிதல் சாத்தியப்பாடுடைய சூழல் அமைகின்ற போதெல்லாம் இந்தியர்களின் கோரிக்கைகள் எத்தகையதாயினும் தென்னிலங்கை ஆட்சியாளர்கள் அதனை நிறைவேற்றியே வந்துள்ளனர். அதன் ஒரு வடிவமாகவே எண்ணெய் குதங்கள் தொடர்பிலான உடன்பாடு புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

நான்காவது, இந்தியா திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் தொடர்பிலே எட்டிய உடன்பாடு தொடர்பிலே உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் அதற்கெதிரான போராட்டங்களும், அமைச்சரவை தீர்மானத்தில் குழப்பங்களும் ஏற்பட்டுள்ளது. இதேவிடயத்தை இந்திய தரப்பு கிழக்கு முனையத்திலும் அனுபவித்திருந்தது என்பதை சுட்டிக்காட்டுதல் அவசியமாகும். கிழக்கு முனையம் இந்தியாவிற்கு வழங்கப்படாமைக்காக அரசாங்கம் இந்தியாவிற்கு தெரிவித்த பிரதான விடயம் தொழிற்சங்க எதிர்ப்பாகும். அதேநேரம் கிழக்கு முனையம் சீனாவிற்கு கையளிக்கப்பட்டமை சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயமாகும். எனவே, இதே அனுபவத்தை திருகோணமலை எண்ணெய் குதங்களில் தொடர்பிலான உடன்பாட்டிலும் ஏற்படக்கூடிய வாய்ப்பு உள்ளது என்பதை உயர்நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்ட தனிநபர் வழக்கிலும் மக்களின் ஆர்ப்பாட்டத்திலும் புரிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது. மக்களின் எதிர்ப்பினால் அரசாங்கம் இந்தியாவுடனான உடன்பாடுகளை நிராகரித்த செயல்பட வேண்டிய சூழல் ஏற்படுவதாக வெளிப்படுத்துகிறது. அதேநேரம் சீனாவின் நுரைச்சோலை மின்நிலைய திட்டத்திலும் அம்பாந்தோட்டை துறைமுக 99 வருடக் குத்தகைக்கு கையளிப்பிலும் மக்கள் போராட்டங்கள் அன்றைய அரசாங்கங்களால் முறியடிக்கப்பட்டது என்பது கவனிக்கத்தக்க வேண்டிய விடயமாகும்.

> **ஈழத்தமிழர்களின் அரசியல் பிரச்னைகளை முன்னிறுத்திக் கொண்டு தென்னிலங்கை ஆட்சியாளர்களை தமது கட்டுப்பாட்டுக்குள்ளும் செல்வாக்குக்குள்ளும் கொண்டு வருவதற்கு இந்திய தரப்பு முனைகிறதா என்ற குழப்பமே அதுவாகும். இந்திய - இலங்கை உடன்பாடு மட்டுமல்ல கச்சதீவு உடன்படிக்கை, சிறீமா-சாஸ்தரி உடன்பாடு என்பன எல்லாமே இந்திய நலன்களுக்குட்பட்டதேயாகும்.**



ஐந்தாவது, இத்தகைய பெரும் நிதியை வழங்க இந்தியா முன்வந்த போது நிச்சயமாக இந்தியாவின் நலன்கள் பாதுகாக்கப்பட்டிருக்கும் என்பதில் அதிக குழப்பம் இல்லாத போதும் இலங்கைப் பிரதம மந்திரியின் அண்மைய சீனா தொடர்பான அறிவிப்பு என்பது கவனத்திற்குரியதாகும். அதாவது “இலங்கையின் உயிர் நண்பன சீனா“ என்பதாகும். அதுவே நிரந்தரமானது. அத்தகைய தென்னிலங்கை ஆட்சியாளரின் உபாயம் சரியானதே. இந்தியாவை கையாள சீனா அவசியமானது. சீனாவை முன்னிறுத்தி 900 மில்லியன் நிதியுதவியை இந்தியாவிடம் பெற்றுவிட்டது தென்னிலங்கை அரசாங்கம். இந்தியாவால் அத்தகைய நிதியளிப்பட்ட போது சீனாவின் கடன்களை கையளிக்குமாறும் கோரப்பட்டதாகவும் செய்தியொன்றுள்ளது. அதனை பக்கச்சார்பின்றி உறுதிப்படுத்த முடியாதுள்ளது. எதுவாயினும் சீனாவின் உயிர் நண்பனுக்கு இந்தியா நிதியுதவி அளித்துள்ளதாகவே விளங்கிக் கொள்ள வேண்டியுள்ளது. இந்த நிதியுதவிக்காக தென்னிலங்கை சீனாவின் நட்பைக் கைவிடும் என்று இந்தியா கருதுமாயின் உலக வரலாற்றில் இதனைவிட மோசமான இராஜதந்திர நகர்வாக வேறு எதுவும் அமையாது.

ஆறாவது, தற்போது தென்னிலங்கையால் பெறப்பட்ட நிதியுதவியானது இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கானது மட்டுமல்ல. அது தென்னிலங்கையின் அரசியல் நெருக்கடிக்குமானது. இலங்கையின் பொருளாதார நெருக்கடி என்பது அரசியல் பொருளாதார நெருக்கடியேயாகும். இலங்கை ஏற்றுமதியினாலோ உற்பத்தியினாலோ இயங்கும் நாடு அல்ல. மாறாக கடன், நன்கொடை மற்றும் நிதியுதவியாலும் முதலீட்டு தர திட்டங்களாலும் இயங்கும் ஒரு நாடு. தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி எனக் குறிப்பிடும் விடயம் மேற்கு நாடுகளாலும் அவற்றின் நிதி நிறுவனங்களாலும் ஏற்பட்ட நெருக்கடியாகும். சீனாவுடனான தென்னிலங்கை ஆட்சியாளரின் நெருக்கமான அரசியல் இராணுவ உறவும் சீனாவின் இலங்கைக்கான நிதியுதவிகளுமே அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகள் இலங்கைக்கு நிதி உதவி மறுக்கப்பட்டமைக்கான காரணமாகும். எனவே இது ஒரு தற்காலிகமான நெருக்கடியே அன்றி ஒரு பொருளாதார மந்தம் அல்ல. இலங்கையில் எந்தவொரு நிதி நிறுவனமோ வங்கியோ கம்பனியோ இது வரை மூடப்படவில்லை. அவ்வகை நிறுவனங்கள் எதுவும் திவாலாகவில்லை.

எனவே, இந்தியாவின் தற்போதைய நகர்வுகள் எந்தவிதத்திலும் ஈழத்தமிழருக்கானதல்ல. அது இந்திய நலனுக்கானது. ஆனால், அத்தகைய நலனும் இந்தியாவால் எட்டப்படுமா என்பதே பிரதான கேள்வியாகும். சீனாவின் நண்பனை இந்தியா பாதுகாத்துக் கொண்டு இந்தியாவின் நலனை அடைய முடியுமோன கருதுவது அபாயமானதே. ஆனால் இந்தியாவின் நகர்வுகளை ஈழத்தமிழருக்கானதாக மாற்றுவதென்பது ஈழத்தமிழரின் அரசியலிலேயே தங்கியுள்ளது. அது சாத்தியப்படாத வரை ஈழத்தமிழர் இருப்பில் எந்த மாற்றமும் நிகழவாய்ப்பில்லை என்றே தெரிகிறது.

நன்றி - அருவி

# எப்போதும் இல்லாமல் உயரும் நெல் விலை! என்ன காரணம்?



**சில விவசாயிகள் இரசாயன பசளையினை கறுப்புச் சந்தையில் 10 மடங்குக்கும் அதிகமான விலைக்கு கொள்வனவு செய்து, தமது நெற்பயிர்களுக்கு விசிறியிருந்தமையினால், நெல் உற்பத்திக்கான செலவு இம்முறை சில தரப்பினருக்கு அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.**



யூ.எல். மப்றூக்

இலங்கை வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாதவாறு நெல்லின் விலை பாரியளவில் அதிகரித்துள்ளது. தற்போது பெரும்போக நெல் அறுவடை ஆரம்பித்துள்ள நிலையில், உலர்த்தி சேமித்து வைக்கப்பட்ட முன்னைய போகத்துக்குரிய நெல், 66 கிலோகிராம் எடைகொண்ட ஒரு மூடை 6700 ரூபாவுக்கு விற்கப்படுகிறது. உலர்த்தப்படாத புதிய நெல் 5500 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

இதனால், அரிசிக்கான விலையும் சடுதியாக அதிகரித்துள்ளது. இதன்படி ஒரு கிலோகிராம் அரசி 168 ரூபாவிலிருந்து 200 ரூபா வரையில் விற்கப்படுகிறது.

கடந்த வருடம் செப்டம்பர் மாதம் - முதல் வாரமளவில் அரிசிக்கு 103 ரூபா கட்டுப்பாட்டு விலையினை விதித்து அரசு அறிவித்திருந்தது.

இருந்தபோதும் தற்போது இலங்கையில் நெல் மற்றும் அரிசிக்கான கட்டுப்பாட்டு விலைகளை அரசு ரத்துச் செய்துள்ளது.

இதன் காரணமாக, அரிசியினைக் கொள்வனவு செய்யும் ஏழை மற்றும் நடுத்தர வர்க்க மக்கள் பெரிதும் திண்டாட்டத்தினை எதிர்கொண்டு வருகின்றனர்.

அரிசி உற்பத்தித் தொழிலில் 40 வருட அனுபவத்தைக் கொண்டுள்ளதாகக் கூறும் அம்பாறை மாவட்டத்திலுள்ள அரிசி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கமொன்றின் தலைவர் ஏ.எல். பதுறுதீன், “இலங்கையில் நெல்லுக்கு இது போன்றதொரு அதிகரித்த விலை இருந்ததில்லை” என்கிறார்.

இயற்கை விவசாயத்தில் ஈடுபடுமாறு அரசாங்கம் அறிவித்து, இரசாயன பசளை இறக்குமதியினை நிறுத்தியமை காரணமாகவே, நெற் விளைச்சல் வீழ்ச்சியடைந்தது என்றும், அதுவே நெல்லின் விலையேற்றத்துக்கான பிரதான காரணம் எனவும் பதுறுதீன் கூறுகின்றார்.

இயற்கை விவசாயத்துக்கு மாறுமாறு அரசாங்கம் அறிவித்தமையினை அடுத்து மேற்கொள்ளப்பட்ட - தற்போதைய பெரும்போக நெற்செய்கை மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், கடந்த போகத்துடன் ஒப்பிடுகையில் நெல் விளைச்சல் அரைவாசியளவு வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் பிபிசி தமிழ் சந்தித்துப் பேசிய விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

சில விவசாயிகள் இரசாயன பசளையினை கறுப்புச் சந்தையில் 10 மடங்குக்கும் அதிகமான விலைக்கு கொள்வனவு செய்து, தமது நெற்பயிர்களுக்கு விசிறியிருந்தமையினால், நெல் உற்பத்திக்கான செலவு இம்முறை சில தரப்பினருக்கு அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை விவசாயிகளிடமிருந்து நெல்லினை இடைத்தரகர்கள் பெற்று, அவற்றினை அரிசி ஆலைகளுக்கு அதிக விலைக்கு விற்பனை செய்கின்றமையும் நெல்லுக்கான விலை அதிகரிப்புக்கான மற்றொரு காரணமாகக் கூறப்படுகிறது.

ஒரு மூடை நெல்லுக்கு இடைத்தரகர்கள் சில சமயங்களில் 500 ரூபா வரையில், கொள்ளை லாபம் பெற்றுக் கொள்வதாகவும் விவசாயிகள் கூறுகின்றனர்.

நெல் மற்றும் அரிசிக்கான கட்டுப்பாட்டு விலைகளை அரசாங்கம் நீக்கியுள்ளமையினால், நினைத்த விலைகளில் அவற்றினை விற்க முடியுமான நிலை ஏற்பட்டுள்ளது எனவும் அரிசி உற்பத்தியாளர் சங்கத் தலைவர் பதுறுதீன் குறிப்பிடுகின்றார்.

ஆயினும், மிகச் சிறியதொரு தொகை லாபத்தை தாங்கள் பெற்றுக் கொள்ளும் வகையில்தான், அரிசியை சந்தைக்கு தாம் வழங்கி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க, நாட்டின் அதிகமான பகுதிகளில் தினமும் மழை பெய்து வருகின்றமையால், நெல் அறுவடையும் பாதிக்கப்பட்டுள்ளது.

மழை மேலும் அதிகளவு பெய்தால் நெல்லை அறுவடை செய்வதில் பாரிய இடர்களை எதிர்கொள்ள வேண்டியேற்படும் என்கிற அச்சத்தில், உரிய காலத்துக்கு முன்னராகவே தமது வயல்களில் விவசாயிகள் நெல்லை அறுவடை செய்கின்றமையினையும் காண முடிகின்றது. இதனால் தரமற்ற நெல் - சந்தைக்குச் செல்லும் நிலைவரமும் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை நெல்லினை மேலும் அதிக விலைக்கு விற்கும் நோக்கத்துடன் அவற்றினை சேமித்து அல்லது பதுக்கி வைக்கும் நடவடிக்கையில் சிலர் ஈடுபடுவது வழமை என்றும், அவ்வாறு இம்முறையும் நடந்தால் நெல்லுக்கான தட்டுப்பாடு மென்மேலும் அதிகரிப்பதோடு, அதற்கான விலை இன்னும் உயர்வடைவதற்கான சந்தர்ப்பம் உள்ளது எனவும் பதுறுதீன் கூறுகின்றார். அப்படி நடந்தால், அரிசி உற்பத்தியாளர்களுக்கு போதியளவு நெல்லினைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்படலாம் எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

இதேவேளை, நெல் விளைச் சல் அரைவாசியளவு வீழ்ச்சி யடைந்துள்ள நிலையில், நெல்லுக்கான விலை அதிக ரித்திருப்பதால் தமக்கு எதுவித மான லாபங்களும் கிடைக்கப் போவதில்லை என்று விவசாயிகள் கூறுகின்றனர். நாட்டில் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான விலைகள் அதிகரித்திருக்கும் நிலையில், நெல் விலையேற்றம் - விவசாயிகளுக்கு நன்மையளிக்கப் போவதில்லை எனவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.



இந்த நிலைவரத்துக்கு காரணம் நாட்டில் தற்போது நெல் உற்பத்தி வீழ்ச்சியடைவதற்கும் அதனால் நெல்லுக்கான விலை வரலாற்றில் எப்போதமில்லாதவாறு அதிகரிப் பதற்கும் பிரதான காரணம், தற்போதைய அரசாங்கம் திடீரென அறிவித்த இயற்கை விவசாயக் கொள்கை யாகும்.

விவசாயத்துக்கு தேவையான இரசாயன பசளையினை மிக நீண்ட காலமாக ஒவ்வொரு அரசாங்கமும் மானிய விலையிலேயே மக்களுக்கு வழங்கி வந்தது.

இந்த நிலையில், தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட போது தான் வெற்றிபெற்றால் விவசாயத்துக்கான இரசாயனப் பசளையினை, தனது ஆட்சிக் காலத்தில் இலவசமாக வழங்கப் போவதாக வாக்குறுதியளித்திருந்தார்.

ஆனால் நடந்த கதை வேறு. ஜனாதிபதித் தேர்தலில் 2019ஆம் ஆண்டு வெற்றிபெற்ற கோட்டாபய ராஜபக்ஷ, 2021ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ரசாயனப் பசளை, களை மற்றும் கிருமி நாசினிகளை இறக்குமதி செய்வதற்கான தடையினை விதிக்கும் தீர்மானத்தை எடுத்ததோடு, இயற்கை விவசாயத்துக்கு நாடு மாற வேண்டுமெனவும் அறிவித்தார்.

இது விவசாயிகளிடையே பாரிய அதிர்ச்சியினை ஏற்படுத்தியது. குறிப்பாக இயற்கை விவசாயத்தில் எவ்வித முன் அனுபவங்களுமற்ற நெற் செய்கையாளர்கள் இதனால் பெரும் பாதிப்படைந்தனர்.

இதேவேளை நெற் செய்கைக்குரிய தரமான இயற்கைப் பசளைகளை போதுமானளவு அரசாங்கம் தமக்கு வழங்கவில்லை எனவும் விவசாயிகள் குற்றஞ்சாட்டுகின்றனர். இவ்வாறானள சூழ்நிலையில், நெல் மற்றும் அரிசி விலைகள் இன்னும் அதிகரிக்கும் என்று அரிசி உற்பத்தியாளர்கள் கூறுகின்றனர்.

இதேவேளை அரிசியை இறக்குமதி செய்வதன் மூலம் இந்த விலையேற்றத்தினை, ஓரளவாகவேனும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும் என்கிற எதிர்பார்ப்பு மக்களிடம் உள்ளது.. ஆனால், நாட்டில் டொலர் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கும் நிலையில், அரிசியை போதுமானளவு இறக்குமதி செய்வதிலும் சிக்கல்கள் உள்ளன.

மற்றொருபுறம், இறக்குமதி செய்யப்படும் அரிசியை விடவும், உள்நாட்டு அரிசிக்கே மக்களிடத்தில் அதிகளவு மவுசு உள்ளது என்கிறார் அரிசி உற்பத்தியாளர் சங்கத் தலைவர் பதுறுதீன்.

# இந்தியத் தலையீட்டை விரும்பாத தமிழரசுக் கட்சி



**1. ஈழத்தமிழரின் அடிமை வாழ்வு நீங்கவேண்டும்.**
**2. ஈழத்தமிழருக்கும் இந்தியாவுக்கும் உள்ள உறவுகள் சீரடையவேண்டும்.**
**இந்த இரு நோக்கங்களுடன் என்னாலான மிகச் சிறிய அளவிலான முயற்சிகளைச் சென்னையிலிருந்து மேற்கொண்டு வருகிறேன்.**

**1. ஈழத்தமிழரின் பாதுகாப்பும் தன்னாட்சியும் ஈழத்தமிழரிடமே இருக்கவேண்டிய தேவை,**
**2. 1987-91 கால, ஈழத்தமிழர் - இந்தியப் பொருந்தா நிகழ்வுகளை மறப்பது,**
**3. இந்தியாவில் அகதிகளின் நலம்,**
**4. சிங்களப் படைகளுக்கு இந்தியா உதவக்கூடாதமை,**
**5. இந்திய நலன்களுக்கு மாறாக ஈழத்தமிழர் செயற்படார் என்ற உறுதி,**
**6. தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரை இந்தியா அழைத்துப் பேசுவது,**
**7. தமிழகத்தின் பல்வேறு துறைகளிலும் உள்ள தமிழர்களை ஈழத்துக்கு அனுப்புவது,**
**8. இந்த நோக்கங்களை ஒட்டிய கருத்துருவாக்கக் கட்டுரைகள், ஒலிஃஒளி பரப்புகள்,**
**9. இந்த நோக்கங்களை முன்னெடுக்கச் செல்வாக்குள்ள தமிழகத் தமிழர் மற்றும் இந்தியர்களிடம் ஈழத்தமிழர் பால் நல்லெண்ணத்தை உருவாக்குவது.**
போன்றவை என் முயற்சிகளுட் சிலவாக அமைந்து வந்தன.

**-01-**

**மறவன்புலவு க. சச்சிதானந்தன்**

**மாவை சேனாதிராசாவும் நானும்**

இந்தப் பின்னணியில் 28.8.2006 முதலாக 23.9.2006 ஈறாக வரையுள்ள மூன்று வார காலப்பகுதியில் நிகழ்ந்தவற்றைப் பதிவு செய்யவேண்டியது என் கடன்.

கடந்த ஒன்றரை ஆண்டுகளாகவே சென்னைக்கு வரும்பொழுதெல்லாம் பழம்பெரும் விடுதலைத் தியாகியும் நாடாளுமன்ற உறுப்பினராகிய மாவை சேனாதிராசா என்னுடனேயே தங்குவார். ஈழத் தமிழர் இந்திய உறவுகள் மேம்படையும் முயற்சிகளுக்கு எனக்கு ஒத்தாசையாக இருப்பார். இதற்காகச் சில மாதங்களுக்கு முன்னர் ஒருமுறை இருவருமாக ஒருநாள் பயணமாகக் காலை டில்லிக்குப் போய் மாலை சென்னை வந்தோம்.

**டில்லிச் சந்திப்பும் பிறவும்**

இந்தியப் பிரதமர் அலுவலக மூத்த அலுவலர் நீண்ட காலமாக என் அருமை நண்பர் ஓர்மிஸ் அவர்களின் விருந்தினராகச் சென்று முழு நாளும் அவருடனேயே கலந்துரையாடினோம்.

தமிழகச் சட்டசபைத் தேர்தலுக்கு முன் பெப்ரவரியில் ஒரு சுற்றாகவும், தேர்தலுக்குப்பின் சூலையில் ஒரு சுற்றாகவும் தமிழகத் தலைவர்களைச் சந்தித்தோம்.

பெப்ரவரியில் நடந்த பல்வேறு சந்திப்புகளின் செய்திகள் வெளிவராதவாறு காத்துக் கொண்டோம். தேர்தலுக்குப் பிந்தைய ஜூலை மாதச் சந்திப்புக்கு இரா. சம்பந்தனும் வருவார் என மாவை சேனாதிராசா என்னிடம் தெரிவித்திருந்தார்.

எனவே தமிழகத் தலைவர்களிடம் அதைக் கடிதமாக முன்கூட்டியே தெரிவித்திருந்தேன். தமிழக முதல்வர் கலைஞர், எதிர்க கட்சித் தலைவர் செயலலிதா, மார்க்சிய பொதுவுடைமைக் கட்சி இவை தவிர ஏனைய கட்சித் தலைவர்கள், ஈழத்தவர் இருவரின் வரவை ஆவலோடு பார்த்திருப்பதாக என்னிடம் தெரிவித்தனர்.

**சம்பந்தனின் ஆர்வமின்மை**

சொன்னவாறு இரா. சம்பந்தன் வரவில்லை. எனவே மாவை சேனாதிராசாவும் நானும் இச்சந்திப்புகளைத் தொடர்ந்தோம். சந்திப்புகளின் செய்திகளும் வெளிவந்தன.

இரா. சம்பந்தன் தனது குடும்பச் சூழ்நிலையே வர இயலாமைக்குக் காரணம் எனத் தெரிவித்திருந்தார். அக்காலத்தில் அவர் இந்தியாவில் இருந்தார். அவருக்குப் பதிலாக வேறொரு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை அவர் அனுப்பியிருக்கலாம்.

இந்தச் சந்திப்புகளின் தேவை, அவசியம் பற்றி இரா. சம்பந்தன் போதுமான அக்கறை கொண்டிருக்கவில்லையென அப்பொழுது எனக்குத் தோன்றியது.

**மாவையின் முயற்சி**

அடுத்த சுற்றுச் சந்திப்புக்களுக்காக, இரா. சம்பந்தன் தலைமையிலான நாடாளுமன்ற உறுப்பினர் குழுவுடன் 10.8 முதலாகச் சென்னையில் தங்கி இருக்கப் போவதாகவும் ஏற்பாடுகளைச் செய்யுமாறும் மாவை சேனாதிராசா என்னைத் தொலைப்பேசியில் கேட்டுக் கொண்டார்.

அவர்கள் அனைவரும் சென்னை வந்து சேர்ந்த பின் தமிழகத் தலைவர்களைத் தொடர்பு கொள்வேத ஏற்றது எனக் கருதிய நான், காத்திருந்தேன். முந்தைய அநுபவம் பாடமாக இருந்தது.

23.8.2006 அன்று மாவை சேனாதிராசா சென்னைக்கு வந்தார். விரைவில் இரா. சம்பந்தன் தலைமையிலான குழு வந்துவிடும் என எனக்குக் கூறினார்.

**வைகோவும் அருணகிரியும்**

28.8.2006 மாலை 5 மணியளவில் வைகோவின் செயலர் அருணகிரி என்னிடம் வந்திருந்தார். அவர் வெளியிடவுள்ள புத்தகம் ஒன்றின் பக்கங்களைப் பார்த்துத் தவறுகள் இருப்பின் திருத்தித் தருமாறு கேட்க வந்திருந்தார்.

ஈழத் தமிழர் தொடர்பாகப் பல நூல்களை அவர் வெளியிட்டு வருகிறார். அவற்றை நான் பார்த்துக் கொடுப்பது வழமை.

தமிழக முன்னணி இதழான தினமணியில் வெளிவந்த மன்னிப்போம்.. என்ற என் கட்டுரையைத் தம் கட்சி ஏடான சங்கொலியில் மீள்பிரசுரம் செய்யுமாறு வைகோ தன்னிடம் சொன்னதாகவும், வைகோ என்னிடம் பேச விரும்பியதாகவும், அருணகிரி தெரிவித்தார்.

சென்னை வரும்போது வைகோவைச் சந்திக்கிறேன் எனத் தெரிவித்தேன். உடனே வைகோவுடன் தொடர்பு கொண்டு, 29.8 மாலை சென்னையில் சந்திப்பதற்கு அருணகிரி ஏற்பாடு செய்தார்.

மாவை சேனாதிராசாவும் அப்போது உடனிருந்தார். நீங்களும் வாருங்கள் என மாவை சேனாதிராசாவிடம் கேட்டேன். நீங்களே சந்தித்து விட்டு வாருங்கள் என்றார்.

**பிரதமரைச் சந்திக்கலாமா?**

29.8.2006 மாலை 6 மணிக்கு வைகோவை அவரது இல்லத்தில் சந்தித்தேன். மறுநாள் 30.8 பிரதமரைச் சந்திக்க டில்லி செல்வதாகக் கூறிய வைகோ, பலவற்றை என்னுடன் பேசினார்.

சிங்களத் தலைவர்கள் அடிக்கடி டில்லிக்கு வந்து பிரதமரையும் கட்சித் தலைவர்களையும் சந்தித்துப் போகிறார்கள், தமிழர் தரப்பு நியாயங்களைக் கூற ஈழத் தமிழ்த் தவைர்களும் சந்திக்க ஏற்பாடு செய்யுங்கள் என்றேன். ஏற்கனவே குறித்து வைத்திருக்கிறேன், கட்டாயம் பேசுவேன் என்றார்.

ஈழத்தமிழ்த் தலைவர்களைச் சந்திக்கப் பிரதமர் நேரம் ஒதுக்க வேண்டும் என வைகோ, நெடுமாறன் ஆகிய இருவரும் மிகத் தீவிரமாகவும், மருத்துவர் ராமதாஸ், கி. வீரமணி போன்ற பலர் அடிக்கடியும் போராட்டங்கள் நடத்துவதும், அறிக்கைகள் வெளியிடுவதும் தமிழ் நாட்டில் கடந்த பல மாதங்களாகவே நடைபெற்று வந்த நிகழ்வுகள்.

ஈழத்தமிழ்த் தலைவர்களைச் சந்திப்பது பற்றி முன்பொருமுறை பிரதமரிடம் வைகோ பேசியபொழுதும், கவனிக்கிறேன் எனப் பிரதமர் வைகோவிடம் கூறியிருந்தார்.

**வைகோவின் ஏற்பாடு**

30.8 பிரதமர் - வைகோ சந்திப்பின் போது, ஈழத்தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பிரதமர் சந்திக்க ஒப்புக் கொண்டுள்ளார் எனவும் பிறவுமான வைகோவின் பேட்டி 31.8 காலை இதழ்களில் வந்திருந்தது.

அக்காலத்தில் கலைஞர் முதலமைச்சர். கலைஞரின் அணியில் வைகோ இல்லை. தாம் செய்யாமல் வைகோ செய்வதா? என்ற சினம் கலைஞருக்கு வந்திருக்கலாம்!

அன்று காலை 11 மணிக்கு வைகோ என்னைத் தொலைப்பேசியில் அழைத்தார், மாவை சேனாதிராசாவையும் அழைத்துக் கொண்டு பிற்பகல் 2 மணிக்குத் தன்னைச் சந்திக்க வருமாறு கேட்டார்.

நானும் மாவை சேனாதிராசாவும் அவரிடம் சென்றோம்.

எம்மிடம் பல விவரங்களைச் சொன்ன அவர், பிரதமர் உங்களைக் கட்டாயம் சந்திப்பார். அதற்கான உறுதியை என்னிடம் தந்துள்ளார். ஆணையையும் என் முன்னே இட்டார். நீங்கள் கடிதம் எழுதித் தொலைநகலாக உடனேயே அனுப்புங்கள் என்றார்.

**தமிழ்ச் சாதியின் தலைவிதி**

வீடு திரும்பியதும் இரா. சம்பந்தனைத் தொலைப்பேசியில் மாவை சேனாதிராசா தொடர்பு கொண்டார். இந்தியாவில் இரா. சம்பந்தன் இருப்பதாகவும் 4.9 சென்னை வருவார் என்றும் அவர் வந்ததும் கடிதத்தைதத் தயாரித்து அனுப்பலாம் என அவரே சொன்னதாகவும் மாவை சேனாதிராசா என்னிடம் கூறினார்.

அவர் வரும் வரை காத்திருக்க வேண்டாம், நீங்கள் உடன் கடிதத்தை அனுப்புங்கள், எனக் கேட்டேன். மாவை சேனாதிராசா உடன்படவில்லை.

நான் மனம் நொந்தேன். தமிழ்ச் சாதியின் தலைவிதி இதுவா? என மாவை சேனாதிராசாவிடம் கேட்டேன்.

தமிழ் நாட்டில் பலர் இதற்காகப் பல போராட்டங்கள் நடத்தியிருக்கிறார்கள், கருத்துருவாக்கத்தில் பலர் தம் நேரத்தை, பொருளைச் செலவிட்டிருக்கிறார்கள்.

தமிழகத்தின் அழுத்தத்தை உணர்ந்த பிரதமரும் ஒப்புகிறார். நீங்கள் கடிதம் அனுப்புவது முறை. அதை ஏன் பின்போடுகிறீர்கள்? எனக் கேட்டேன். இரா. சம்பந்தன் வரட்டும் என்று முடிவாகச் சொல்லிவிட்டார்.

**கலைஞருக்குக் கடிதம்**

மாவை சேனாதிராசாவும் இரா. சம்பந்தனும் சந்திப்புக் கேட்டு, இருவரும் ஏற்கனவே கையொப்பமிட்டுக் கலைஞருக்கு எழுதிய கடிதத்தை 01.09.2006 வெள்ளிக்கிழமை காலை, கலைஞர் வீட்டுக்குக் கொடுத்தனுப்பினோம்.


மதியம் கவிஞர் காசி ஆனந்தனும் மனைவியாரும் என்னைத் தற்சேயலாகச் சந்திக்க வந்திருந்தனர். என் ஆற்றாமையையும் ஆதங்கத்தையும் அவர்களிடம் சொன்னேன்.

ஈழத் தமிழர் நியாயங்களை இந்தியப் பிரதமரிடம் எடுத்துச் சொல்ல நல்ல வாய்ப்பு நழுவி விடும் போலத் தெரிகிறேது என்றேன்.

**அடுத்த வாரம்...**

*2006 ஒக்ரோபரில் எழுதப்பட்ட கட்டுரை காலத்தின் தேவை கருதி மறுபிரசுரமாகிறது,*

# இரு விஞ்ஞானிகள் கண்டுபிடித்த பதற வைக்கும் அந்த உண்மை....




## நெட்பிளிக்ஸின் மற்றொரு பரபரப்பு தொடர் 'டோண்ட் லுக் அப்'

**ரமணி - அவுஸ்திரேலியா**

அமெரிக்காவில் மிச்சிகன் மாநிலத்தில் இருக்கும் ஒரு பல்கலைக்கழக விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் ஒரு கொண்டாட்டம் நடைபெறுகிறது. இதற்கு காரணம் கேட் என்ற இளம் விஞ்ஞானி அங்கு இருக்கும் சக்தி வாய்ந்த தொலைநோக்கி மூலம் புதிய வால் நட்சத்திரம்/ தூமகேது ஒன்றை கண்டு பிடித்திருக்கிறார். அந்த கொண்டாட்டத்தின் போது ஒரு மாணவி தலைமை பேராசிரியரான ரண்டலை பார்த்து “இந்த வால் நட்சத்திரம் எங்கு செல்கிறது ?” என்று வினவுகிறார். பேராசிரியர் ரண்டலும் விஞ்ஞானி கேட்டும் அங்கிருக்கும் வெண் பலகையில் திருப்பி திருப்பி கணக்கு போட்டு பார்க்கிறார்கள், பதறுகிறார்கள்.

ஆம் அவர்கள் ஊகித்தது சரி தான் அந்த வால் நட்சத்திரம் பூமியை நோக்கி வருகிறது. இன்னும் ஆறு மாதங்களில் பூமியை தாக்கி எல்லா உயிரினங்களையும் அழிக்க போகிறது. இந்த துன்பகரமான க் கண்டுபிடிப்பை இருவரும் எவ்வாறு உலகுக்கு தெரியப்படுத்துகிறார்கள், அந்த செய்தியை கேட்டு ஒட்டு மொத்த மனித குலம் என்ன செய்யப் போகிறது என்பதை சொல்லும் நெட்ஃபிலிக்ஸ் தொடரே “டோண்ட் லூக் அப்”.

“பிக் சோர்ட்” என்ற அகாடெமி விருது வென்ற இயக்குனர் அடாம் மக்கெய் இன் இயக்கத்தில் உருவான இந்த படம், பருவ நிலை மாற்றத்தை ஒரு வால் நட்சத்திரமாக உருவகித்து, பருவ நிலை மாற்றத்தால் ஏற்படும் விளைவுகள் பற்றிய மனித குலத்தின் அசமந்தப் போக்கை நக்கல் செய்து காட்டும் ஒரு திரைப்படமாக வெற்றி கொண்டுள்ளது.

விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சிகளின் முடிவுகள், இன்றைய காலகட்டத்தில் மக்களை சேர பல்வேறு தடைகளை தாண்டி வரவேண்டியுள்ளது. முடிவெடுக்கும் நிலையில் இருக்கும் தலைவர்களால் அதிமேதாவித்தனம் மற்றும் அரசியல் சுயலாபம் கருதிய சிந்தனை, காரணமான அசமந்தப் போக்கினால் ஆரம்பத்தில் விஞ்ஞான ஆராய்ச்சிகள் கருத்தில் கொள்ளப்படுவது இல்லை. ஊடகமாக இருந்தாலும் சமூக வலைத்தளமாக இருந்தாலும் அதில் மக்கள் பரபரப்பான பொழுது போக்கு சம்பந்தபட்ட தகவல்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். இதனால் எந்த முக்கிய விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சி பற்றிய தகவல்களும் மக்களிடம் செவிடன் காதில் ஊதிய சங்கு போல தான் சேர்கிறது. அப்படி சரியான தகவல்கள் மக்களிடம் போய்ச் சேர்ந்தாலும் பொய்ச் செய்திகள் (fake news) மூலம் தகவல்களின் உண்மைத் தன்மை குழப்பி அடிக்கப்படுகிறது. இந்த நிலைமை கொரொனா காலத்தில் எங்களுக்கு கண்கூடு.

அமெரிக்காவில் இருக்கும் அரசியல் கலை சமூக மற்றும் வியாபார களங்களில், எப்படி பருவ நிலை மாற்றம் போன்ற மனித குலத்தின் தலையெழுத்தை மாற்றும் விடயங்களின் கொள்கைகள் தீர்மானிக்கப்படுகிறது என்பதை நகைச்சுவையுடன் எடுத்துக் காட்டும் இந்தத் திரைப்படம் முன்னைய அமெரிக்க அதிபரின் அசமந்த போக்கு, வாரிசு அரசியல், சிலிக்கன் பள்ளத்தாக்கு முதலாளிகளின் பண பலம் மற்றும், ஹொலிவுட் மற்றும் சமூக ஊடக பிரபலங்களின் செல்வாக்கு என்பனவற்றை எள்ளி நகையாடத் தவறவில்லை.

மெரில் ஸ்ட்ரீப், லியனாடோ டீ கப்ரியோ, ஜெனிபர் லாரெண்ஸ், கேட் பிளான்செட், அரியானா கிராண்டே மற்றும் பல பெயர் போன ஹொலிவுட் பிரபலங்கள் பட்டாளமாக நடித்திருக்கிறார்கள். ஆயினும் தாங்கள் சொல்ல வந்த செய்தியை உலகுக்கு சொல்ல முடியாமல் தவிக்கும் விஞ்ஞானி கேட் ஆக நடித்த ஜெனிபர் லாரெண்ஸும், பேராசிரியர் ரண்டல் ஆக நடித்த லியனாடோ டீ கப்ரியோவும் பிராகசிக்கிறார்கள்.

என்ன தான் நல்ல கதை கருவை எடுத்து கதை செய்தாலும், இந்தத் திரைப்படம் சினிமா ரீதீயாக, கதை சொல்லும் பாணியில் அவ்வளவு ஒன்றும் புதிதாக செய்யவில்லை என சில விமர்கர்களால் விமர்சிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்தத் திரைப்படத்தில் சம்பந்தப்பட்ட பலர் அமெரிக்காவின் இடது சாரி அரசியல் கண்ணோட்டம் கொண்டர்வர்கள் என்பதாலும் அந்த

**“பிக் சோர்ட்” என்ற அகாடெமி விருது வென்ற இயக்குனர் அடாம் மக்கெய் இன் இயக்கத்தில் உருவான இந்த படம், பருவ நிலை மாற்றத்தை ஒரு வால் நட்சத்திரமாக உருவகித்து, பருவ நிலை மாற்றத்தால் ஏற்படும் விளைவுகள் பற்றிய மனித குலத்தின் அசமந்தப் போக்கை நக்கல் செய்து காட்டும் ஒரு திரைப்படமாக வெற்றி கொண்டுள்ளது.**





பார்வையிலே கதை சொல்லப்பட்டுள்ளது என்ற விசனமும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயினும் அனைத்து மக்களும் பருவ நிலை மாற்றம் பற்றி ஒன்றாக சிந்திக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது என்ற செய்தியை உணர்வு ரீதியாக சொன்னமைக்கு விஞ்ஞானிகள் மத்தியிலும் பார்வையாளர்கள் மத்தியி லும் பெருத்த வரவேற்பு பெற்றுள்ளது. இன்னும் நெட் பிலிக்ஸ் வாராந்த பார்வை நேர தரவரிசையில் முதலிடத்தில் உள்ளது.

**“பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்**
**தீராமை ஆர்க்குங் கயிறு” -குறள் 482**

என்ற வாக்கிற்கிணங்க அரசியல்வாதியாக இருந்தாலும் சரி, செல்வாக்கு மிக்க வியாபாரியாக இருந்தாலும் சரி, சாதாராாண குடியாக இருந்தாலும் சரி, காலத்திற்கு ஏற்ப ஆராய்ந்து முடிவுகளை எடுத்து அதன்வழி நடக்க வேண்டும் என்ற செய்தியை நகைச்சுவையுடன் ஹொலிவுட் நட்சத்திர பட்டாளத்துடன் சொல்கிறது. “டோண்ட் லூக் அப்”.

Email: ramaniwrites@gmail.com
twitter : @ramaniwrites








ஈழநாடு





**உங்களுடைய உள்ளுணர்வு, 'இதுதான் நம்முடைய வாழ்க்கையை மாற்றி அமைக்க சரியான தருணம் என்று சொல்கிறது என்றால், அதைச் செய்யுங்கள்' என்று சொல்கிறது இந்த வாரம் பார்க்க இருக்கும் புத்தகம்**

# முடிவு எடுப்பதில் தயக்கமா? அச்சமின்றி களம் இறங்க...




தைரியமிக்க இளைஞர்களே, தொழிலில் புதிய அத்தியாயத்தை எழுத வேண்டும், புதிதாகத் தொழில் தொடங்க வேண்டும் அல்லது இப்போது வாழும் வாழ்க்கையைவிட சிறப்பானதொரு வாழ்க்கையை வாழ வேண்டும் என்ற எண்ணத்துடன் இருக்கிறீர்களா? அதற்கான முதல் அடியை எடுத்து வைக்க நினைக்காதீர்கள். எதைச் செய்ய நினைக்கிறீர்களோ, அதில் உடனடியாகக் குதித்துவிடுங்கள் என்று சொல்லி ஆரம்பிக்கிறது இந்தப் புத்தகம்.

"என்ன இது, முன்பின் தெரியாத விஷயத்தில் குதிக்கச் சொல்கிறீர்கள் என்று நீங்கள் கேட்கலாம். 'ரொம்ப பயமா இருக்கிறதே!' என்றுகூட நீங்கள் சொல்லலாம். "தலைகீழாக மாற்றத் துணியும் எந்த முயற்சியும் நிச்சயம் பயமுறுத்துவதாகத்தான் இருக்கும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. அதுதான் உண்மையும்கூட. ஆனால், அந்த பயத்தையும் தாண்டி உங்களுடைய தைரிய உணர்வு (புரவ) அதில் ஈடுபடச்சொல்கிறது எனில், அந்தப் புதிய காரியத்தில் கண்ணுக்குப் புலப்படாத மிகப் பெரிய வெற்றி உங்களுக்கு காத்திருக்கிறது என்று அர்த்தம். இது நிச்சயம் நடக்கும் என்று பந்தயம்கூட கட்டலாம்.

உங்களுடைய உள்ளுணர்வு, 'இதுதான் நம்முடைய வாழ்க்கையை மாற்றி அமைக்க சரியான தருணம் என்று சொல்கிறது என்றால், அதைச் செய்யுங்கள்' என்று சொல்கிறது இந்த வாரம் பார்க்க இருக்கும் புத்தகம் (Jump: Dare to Do What Scares You in Business and Life).

**வாழ்க்கையை மாற்றியமைக்கும்...**

வாழ்க்கையைத் தலைகீழாக மாற்றி அமைக்கும் முடிவுகளை எடுக்கத் தயங்குகிறீர்களா? பின்வரும் கேள்விகளை நீங்களே உங்களிடம் கேட்டுக் கொள்ளுங்கள். 'நீங்கள் இன்றைக்கு இருக்கும் நிலைக்கு எப்படி வந்தீர்கள், இப்போதுள்ள இந்த நிலைக்கு நீங்கள் வர முடிவெடுத்த போது, உங்கள் கை, கால்கள் நடுங்கி இருக்குமே, நெஞ்சு படபடத்து, உள்ளங்கை வேர்த்திருக்குமே! அப்போதெல்லாம் துணிந்து முடிவெடுத்த நீங்கள், இப்போது ஏன் எடுக்கத் தயங்குகிறீர்கள், அப்போதெல்லாம் முடிவெடுத்து காரியத்தில் இறங்கி ஜெயித்தீர்களே, இப்போது என்ன தயக்கம், குளத்தில் குதிக்காமல் நீச்சல் போட்டியில் வீரனாகிவிட முடியுமா?

**மூன்று சூழ்நிலைகள்...**

எப்போதெல்லாம் மனிதர்கள் பெரிய அளவிலான காரியங்களில் குதிக்கிறார்கள் என்று கொஞ்சம் ஆராய்ந்து பார்த்தால், அவை பின்வரும் மூன்று சூழ்நிலைகளாகவே இருக்கும்.

1. வேறு வழியே இல்லை என்னும் சூழ்நிலையில்.
2. ஒரு சிறந்த வாய்ப்பு இருக்கிறது என்பதை முழுமையாக உணரும்போது.
3. இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் நகர முடியாமல் (முன்னேற்றம் எதுவுமின்றி) சிக்கிக்கொண்ட சூழ்நிலையில்.

முதலாவது, வேறு வழியே இல்லை என்னும் சூழலில் நாம் நம்மைக் காப்பாற்றிக்கொள்ள குதிப்போம். இது போன்ற சூழ்நிலையில் மாற்றம் என்பது செய்தே ஆக வேண்டிய ஒரே ஒரு விஷயமாக நம்முன்னே இருக்கும். வேறெதையும் செய்வதற்கு வாய்ப்பே இருக்காது. உதாரணமாக, வேலையை இழந்த சூழல், திவாலான நிலை, பெரிய இழப்பு போன்ற வாழ்க்கையைப் புரட்டிப் போடும் நிகழ்வு... இது போன்ற சூழலில் இதுவா, அதுவா எனத் தேர்ந்தெடுக்க பல வாய்ப்புகள் இருக்காது. "எமர்ஜென்சி எக்ஸிட்" வழியாகக் குதிப்பது போன்ற சூழல். குதித்தே ஆக வேண்டும் என்கிற சூழலில் யாரும் நம்மைத் தள்ளி விட வேண்டியது இல்லை. நாமாகவே குதித்துவிடுவோம்.

இரண்டாவது சூழலில், (வாய்ப்பைக் கண்டறிந்து குதிப்பது) நாம் ஏற்கெனவே சௌகரியமான நிலையில் சந்தோஷமாக இருப்போம். வாழ்க்கையை மாற்றி எதையாவது சாதிக்க வேண்டும் மற்றும் அதற்கான முயற்சிகளை துணிந்து எடுக்க வேண்டும் என்ற எண்ணம் மற்றும் வசதிகளுடன் இருப்போம். நிச்சயமாக ஒரு மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும் என்ற துணிச்சலுடன் இந்தச் சூழ்நிலையில் நாம் புதிய காரியத்தில் குதிப்போம். இந்தச் சூழ்நிலையில் உள்ளது உள்ளபடி என்று பார்க்காமல், எதிர்காலத்தை சிறப்பாகக் கணிக்க முடிவதால் நாம் குதிப்போம்.

மூன்றாவது சூழலில், முன்னேற்றம் இல்லாத, போரடிக்கிற, 'என் தகுதிக்கு நான் இருக்கும் நிலைமை சற்றும் சம்பந்தம் இல்லையே' என்று நினைக்கக் கூடிய நிலையில் இருப்போம். அதாவது, பல விதமான சௌகரியம் இருக்கும். ஆனால், திறமைக்கேற்ற சவால்கள் இருக்காது. இந்தச் சூழ்நிலையில் ஏன் குதிக்காமல் இருக்கிறோம் எனில், தெரிந்த சூழலை விட்டு விட்டு, முன்பின் தெரியாத விஷயத்தில் ஏன் இறங்க வேண்டும் என்று நினைப்பதால் தான்.

இந்த மூன்று சூழ்நிலைகளிலும் வெவ்வேறு காரணங்களால் நாம் புதிய காரியங்களில் குதிப்போம் என்றாலும், என்ன காரணத்துக்காக நாம் புதிய காரியத்தில் குதிக்கிறோம் என்பது முக்கியமில்லை. எந்த அளவுக்கான நம்பிக்கை மற்றும் தைரியத்துடன் குதிக்கிறோம் என்பது தான் விஷயமே!

**ஆறு கேள்விகள்...**

இந்த நம்பிக்கையைப் பெற ஆறு கேள்விகளை நீங்கள் உங்களைக் கேட்டுக்கொள்ள வேண்டும்.

1. இந்தக் காரி யத்தில் குதிப்பதால் மிகவும் மோசமான ஒரு நிலையில் என்ன நடக்கும்.
2. இந்தக் காரியத்தில் நான் குதிப்பதாலும் அதனால்வரும் பின்விளைவுகளாலும் யாரெல்லாம் பாதிக்கப்படுவார்கள்.
3. வேறு யாராவது இதுபோன்ற காரியத்தைச் செய்திருக்கிறார்களா.
4. என் திறமை மற்றும் அசாத்திய சக்திகள் என்னென்ன.
5. இந்தப் பாதையில் பயணிக்க நினைக்கும்போது முதல் மூன்று அடிகள் என்னென்ன என்பதை என்னால் ஓரளவு சரியாக யூகிக்க முடிகிறதா.
6. கணிக்க முடியாத சூழலில் பயணிக்க நான் தயாராக இருக்கிறேனா என்பவையே அந்த ஆறு கேள்விகள். இதற்கு அடுத்த படியாக, நல்லதொரு மாற்றுத் திட்டத்தையும் நீங்கள் கண்டு பிடித்து வைத்துக்கொள்ள வேண்டும் என்கிறார் ஆசிரியை.

இப்படிக் கேள்விகள் கேட்டு மாற்றுத் திட்டத்தையெல்லாம் கண்டுபிடித்த பின்னாலும் சுலபமாகக் காரியத்தில் குதித்து விட முடியுமா என்ன, பல்வேறு தயக்கங்களும் சாக்குபோக்குகளும் நம்மால் சொல்லப்படுமே! இந்தத் தயக்கங்களைப் போக்கவும், சாக்குபோக்குகளைச் சொல்லாமல் இருக்கவும் என்ன செய்ய வேண்டும்?

"நான் தோற்றுப் போய்விடுவேன் என்று பயமாக இருக்கிறது", 'இதைச் செய்ய எனக்கு நேரமில்லை', 'என்னிடம் இதற்குத் தேவையான பணம் இல்லை', 'எனக்கு இந்த விஷயத்தில் தேவையான அனுபவம் இல்லை' என்பது போன்ற சாக்குப் போக்கு களே இதில் பெரும்பான்மையான வையாக இருக்கின்றன. இந்த சாக்கு போக்குகளைக் களைந்தால் தான் நமக்கு நம்பிக்கை என்பது பிறக்கும் என்கிறார் ஆசிரியை.

**உள்ளுணர்வு மீதான நம்பிக்கை...**

தோல்வி குறித்த பயம், நிலையற்ற தன்மைக்கு பயம், நிராகரிக்கப்படுதலுக்கு பயம், பெரிதாக சோபிக்க முடியாமல் போய்விட்டால் என்னாவது என்று பயம், இப்படி பெரிய ரிஸ்க் எடுத்து வெற்றி பெற்று என்ன சாதிக்கப்போகிறோம் என்கிற பயம் எனப் பல்வேறு பயங்களும் நம்மைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டு குதிக்கவிடாமல் தடுக்கும். பிரச்னைக்குப் பழகிக்கொள்வதும், சங்கடமான சூழலே சௌகரியம் என்று ஆக்கிக்கொள்வதும், அசௌகரியத்துக்கு உள்ளேயே நம்மை ஆழ்த்திக்கொள்வதும் எப்படி அதற்கான பயிற்சிகள் என்னென்ன என்பதையும் இந்தப் புத்தகம் விளக்குகிறது.

உதாரணமாக, நிராகரிக்கப்படுவதைப் பழகிக்கொள்ள நீங்கள் சாமான் வாங்கும் ஒவ்வொரு கடையிலும் தள்ளுபடியைக் கேளுங்கள். அநேக கடைகள், 'தள்ளுபடி இல்லை. ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்டதைத் தாண்டி ஒன்றும் தர முடியாது' என்பார்கள். அப்போது, நிராகரிப்பு என்பது பழகிப்போகும் என்கிறார் ஆசிரியை. அதே போல், உங்களுடைய உள்ளுணர்வின் மீது நம்பிக்கையை வளர்க்க சின்னச் சின்ன விஷயங்களில் உங்களுடைய உள்ளுணர்வு என்ன சொல்கிறதோ, அதன்படி நடந்து அந்த அனுபவத்தை வைத்து முன்னேறுங்கள் என்கிறார்.

இறுதியாக, நீங்கள் வெற்றி என்று நினைப்பது எது என்பதைத் தீர்மானமாக முடிவு செய்து கொள்ளுங்கள். அப்படி முடிவு செய்த பின்னால், அதற்கான திட்டங்களைத் தீட்டி காரியத்தில் குதியுங்கள் என்று சொல்லும் ஆசிரியை, இந்த இரண்டையும் செய்வது எப்படி என்று விளக்கமாக இரண்டு அத்தியாயங்களில் கூறியுள்ளார். அடுத்தவர்கள் என்ன நினைப்பார்கள் என்பதை ஒதுக்கி வைத்துவிட்டு, உடனடியாக நீங்கள் செய்ய வேண்டிய ஆக்கபூர்வமான காரியத்தைச் செய்யுங்கள் என்று முடிகிறது இந்தப் புத்தகம்.

வாழ்க்கையின் பாதையை மாற்றி சாதிக்க நினைக்கும் அனைவரும் படிக்க வேண்டிய புத்தகம் இது. ■



## கவர்ச்சி புயலான தத்தா!

நகுல் நடிப்பில் வெளியான 'தமிழுக்கு என ஒன்றை அழுத்தவும்' படத்தின் மூலம் ஐஸ்வர்யா தத்தா கதா நாயகியாக அறிமுகமானார். அதன் பின்னர் பெரிய அளவில் வாய்ப்புகள் அமையவில்லை.

எனினும், பிக்பாஸ் 2இன் மூலம் பிரபலமான அவர் தற்போது "காதல் கண்டிஷன் அப்ளை" என்ற படத்தில் நடித்து வருகிறார். எனினும், அவருக்கு வேறு வாய்ப்பு கள் இல்லாத நிலையில் உச்சகட்ட கவர்ச்சிப் படங்களை வெளியிட்டுள்ளார். இந்தப் படங்கள்தான் தமிழ் ரசிகர்களிடையே கடந்த வாரம் முன்னணி பிடித்தது.



## கீர்த்திக்கு வரவேற்பு

நடிகை கீர்த்தி சுரேஷ் தற்போது தமிழ், தெலுங்கு, மலையாளம் என மூன்று மொழிகளிலும் முக்கியத்துவம் பெற்றுள்ளார்.

தனது நடிப்பின் மூலம் ரசிகர்களை கவர்ந்து வரும் கீர்த்தி, அவ்வப்போது சமூக வலைத்தளங்களில் வெளியிடும் படங்கள் மூலமும் கவர்கிறார்.

இந்த நிலையில் என்றுமில்லாதவாறு ஹொலிவூட் நடிகைகள் அணியும் உடைபோன்று அணிந்து படங் களை வெளியிட்டுள்ளார். கீர்த்தி சுரேஷின் இந்தப் படங்களுக்கு சமூகவலைத்தளங்களில் பெரும் வரவேற்பு கிடைத்துள்ளது.

## பூனம் பாஜ்வாவின் திட்டம்



நடிகை பூனம் பாஜ்வா, தமிழில் சேவல் படம் மூலம் அறிமுகமா னார். அந்தப் படத்தில் அவரது அப்பாவித் தனமான நடிப்பால் அனைவரையும் ஈர்த்தார்.

கட்டுக்கோப்பான உடல்வாகுவுடன் இருந்த அவர் சற்று எடைகூடிய நிலையில், அவருக்கு பட வாய்ப்புக் கள் குறைந்தன. இதைத் தொடர்ந்து கடின உடற் பயிற்சி மூலம் எடையை குறைத்து போட்டோ ஷூட் நடத்தி படங்களை வெளியிட்டுள்ளார்.

அதிகவர்ச்சிப் படங்கள் மூலம் புதிய வாய்ப்புக்கள் கிடைக்கப்பெறும் என்று அவர் நம்புகிறார்.

# திரை விமர்சனம்



திரைப்படம் : கொம்பு வச்ச சிங்கம்டா
தயாரிப்பு : ரெதான் த சினிமா பியூப்புள்
இயக்கம் : எஸ். ஆர். பிரபாகரன்
இசை : திபு நினன் தோமஸ்
நடிப்பு : சசிகுமார், மடோனா செபஸ்ரியன், சூரி

படத்தின் கதை சாதிப் பிரச்னையை மையமாகக் கொண்டது. நாயகனான சசிகுமார் சிறு வயதிலிருந்தே சாதி வித்தியாசம் இல்லாமல் அனைவருடனும் பழகுபவர். அவருடைய நட்பு வட்டமும் அப்படித்தான் இருக்கிறது. ஊரில் நடக்கும் உள்ளாட்சித் தேர்தலில் தனது வருங்கால மாமனார் வெற்றி பெற அவர் ஆதரவு தெரிவித்ததால் அவரின் நட்பு வட்டம் பிரிகிறது. தேர்தலுக்குப் பின் நடக்கும் தகராறில் அவரின் வேற்று சாதி நண்பன் கொல்லப் படுகிறார். சசிகுமாரும், அவரின் சாதி நண்பர்களும் கைது செய்யப்படுகிறார்கள். பின்னர் அவர்கள் வெளியில் வந்தாலும், பழி வாங்கும் செயலாக சசிகுமாரின் முஸ்லிம் நண்பர் கொல்லப்படுகிறார். அடுத்து கொலைகள் நிகழும் முன் அதைத் தடுக்க முயற்சிக்கிறார் சசிகுமார். அவரது முயற்சியில் வெற்றி பெற்றாரா இல்லையா என்பதே படத்தின் மீதிக் கதை.

சசிகுமாருக்கென்றே உருவாக்கப்பட்ட கதை, கதாபாத்திரம் என படத்தின் ஆரம்பத்திலேயே புரிந்து விடுகிறது. அவரும் அப்படியே பொருந்தியுள்ளார். ஆனால், எத்தனை நாளைக்குத்தான் அவர் ஒரே மாதிரி நடிப்பது?

கதாநாயகியாக மடோனா செபஸ்ரியன். படத்தில் இவருக்குப் பெரிய முக்கியத்துவம் இல்லை. காட்சிகளும் சொற்பமே.

சசிகுமாருடன் எப்போதுமே இருக்கும் நண்பனாக சூரி. ஹரிஷ் பெரடி, இப்படத்தின் தயாரிப்பாளர் இந்தர் குமார் இருவருக்குமிடையே தான் தேர்தல் போட்டி, சண்டை என நடக்க, இவர்கள்தான் பிரதான வில்லன் என நாம் நினைத்தால் உச்சக்கட்டத்தில்தான் முக்கிய திருப்பத்தையே வைத்துள்ளார்கள்.

சசிகுமாரின் நண்பர்களாக நடித்தவர்களும் தங்கள் பாத்திரத்தை பூரணப்படுத்தியுள்ளார்கள்.

திபு நினன் தாமஸ் இசையில் ஒரே ஒரு பாடல் மட்டும் கேட்க வைக்கிறது. கிராமத்துப் படம் என்றாலே சில ஒளிப்பதிவாளர்கள் தனி கவனத்துடன் படமாக்குவார்கள். அதில் அனுபவசாலியான என். கே. ஏகாம்பரம் கதைக்குள்ளேயே காட்சிப் பதிவை அமைத்திருக்கிறார்.

சாதி, மதமற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என நினைக்கும் இன்றைய தலைமுறையினருக்கு அதில் ஊறியவர்களால் வரும் சிக்கல்களைச் சொல்லியிருக்கும் படம். ஆனாலும், பல காட்சிகள் சாதிப் பெருமை பேசுகின்றன.

## மௌனம் கலைத்த பாவனா!

தன் மீதான பாலியல் தாக்குதல் வழக்கில் ஆதரவாக குரல் கொடுப்பவர்களிற்கு, நடிகை பாவனா நன்றி தெரிவித்துள்ளார். தனது இன்ஸ்ட்ராகிராமில் பக்கத்தில் இது குறித்து மனம் திறந்து பதிவிட்டுள்ளார்.

தமிழ் திரையுலகில் 'வெயில்' படம் மூலம் அறிமுகமானவர் நடிகை பாவனா, இவருக்கு திருமணம் நடைபெறவிருந்த நிலையில், சில ஆண்டுகளுக்கு முன்னர் படப்பிடிப்பு முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது சில மர்மநபர்களால் கடத்தப்பட்டு பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளானார். இந்தக் குற்றத்தின் பின்னணியில் நடிகர் திலீப் இருந்தார் என்று தெரிய வந்த நிலையில், இது தொடர்பான வழக்கும் நடந்துவருகிறது.

இந்த நிலையில், பாவனா தனது பதிவில், "இது எளிதான பயணம் அல்ல, ஐந்து வருடங்களாக என் மீது சுமத்தப்பட்ட தாக்குதலில் எனது பெயர் மற்றும் அடையாளம் நசுக்கப்பட்டு விட்டன. குற்றம் செய்தது நான் இல்லை என்றாலும், என்னை அவமானப்படுத்த, அமைதியான முறையில் பல முயற்சிகள் நடந்தன. ஆனால் அதே சமயம் என் குரலை உயிர்ப்பிக்க சிலர் முன்வந்தனர். எனக்காக ஒலிக்கும் குரலை நான் கேட்கும் போது இந்த யுத்தத்தில் 'நான் தனியாள் இல்லை' என்பதை உணர்ந்தேன். எனக்கு ஆதரவாக குரல் கொடுத்த அனைவருக்கும் எனது நன்றி' எனக் கூறியுள்ளார்.





## முரளியின் வரலாற்று படம்

கிரிக்கெட் வீரரான முத்தையா முரளிதரனின் வாழ்க்கை வரலாற்று படமான 800 படத்தில் விஜய் சேதுபதி நடிப்பதாக இருந்தது. படத்திற்கு எழுந்த கடும் எதிர்ப்புகளை அடுத்து அவர் விலகினார்.

மீண்டும் இந்தப் படத்தை தயாரிக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இந்தப் படத்தில் முரளிதர னின் வேடத்தில் ஸ்லம்டாக் மில்லினர் படத்தில் நடத்த தேவ் பட்டேல் நடிக்கவுள்ளார். இதற்கான ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது. விரைவில் உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியாகவுள்ளது.



## பொலிஸ் வேடத்தில் பிரபாஸ்

இதுவரை பொலிஸ் கதாபாத்திரத்தில் நடித்திராத பிரபாஸ், முதன்முறையாக 'அர்ஜூன் ரெட்டி' படத்தை இயக்கிய இயக்குநர் சந்தீப்பின் கதைக்காகக் காக்கி காக்கி உடை அணிகிறார். இது பிரபாஸின் 25ஆவது படம் என்பதுதான் முக்கியமானது.

படத்தில் பிரபாஸூக்கு ஜோடியாக நடிக்கப் பல நாயகிகள் போட்டிபோட, பொலிவூட் நடிகையான கரீனா கபூரைப் பரிசீலிக்கிறது படக்குழு!

# கனடாவில் எழுச்சி பெறும் தமிழ் மரபுத் திங்கள்

**இந்த வருடம் 'எமது வரலாறுகள், எமது மரபுகள், எமது தாயகங்கள்' என்ற தலைப்பை அடிப்படையாகக் கொண்டு நிகழ்வுகள் இடம் பெற்றன. இந்த நிகழ்ச்சியின் தொடர்பாக, பீல் பிரதேசத்தில் உள்ள சொப்கா குடும்ப மன்றத்தினர் தமிழர் மரபுத்திங்களை மிகச் சிறப்பாக ஒவ்வொரு வருடமும் கொண்டாடி வருகிறார்கள்.**

**குரு அரவிந்தன்**





உலகில் மக்கள் வாழ்வதற்குச் சிறந்த முதல் 10 இடங்களில், 2022 ஆண்டு கனடாவும் ஒன்றாக சி.எஸ். குளோபல் பாட்னேஸ் என்ற நிறுவனம் தெரிவு செய்திருக்கின்றது. கனடாவுக்குத் தமிழ் மக்கள் பெருமளவில் புலம் பெயர்ந்து சுமார் 40 வருடங்கள் தான் ஆகின்றது. ஆனாலும் இந்த 40 வருடங்களில் அடைக்கலம் தந்த கனடிய மண்ணுக்கு நன்றிக்கடனாகத் தமிழ் மக்கள் கொடுத்த பங்களிப்பு அளப்பரியது. கனடாவில் அனேகமாக எல்லாத் துறைகளிலும் தமிழ் மக்கள் காலூன்றி விட்டார்கள். இங்குள்ள தமிழர்கள் ஒற்றுமையாகச் செயற்பட்டால் நாடாளுமன்றத்திற்கு இன்னும் பல பிரதிநிதிகளை அனுப்ப முடியும் என்ற நம்பிக்கை உண்டு. கோவிட்-19 பேரழிவின் தொடர்ச்சியாக 2022 ஆண்டும் தமிழர்களின் முக்கிய கலாச்சார நிகழ்வுகளான தைப்பொங்கல், மரபுத் திங்கள் நிகழ்வுகளும் பொதுமக்கள் நன்மைகருதி மட்டுப்படுத்தப் பட்டிருக்கின்றன.

கனடா நாடானது குடிவரவாளரின் நாடாகும். ஏனைய பல்லின மக்கள் போலவே கனடாவின் பெரும்பான்மைப் பண்பாட்டோடு இணைந்து, எமது அடையாளத்தையும் இழக்காமல், எமது மரபுகளையும் பேணிக் காக்கக்கூடிய வசதிகள் இங்கே இருக்கின்றன. அவ்வகையில் நாமும் எமது மொழியையும், மரபுகளையும் பேணிக் காபப்பதற்காக உருவாக்கப்பட்டதே தமிழ் மரபுரிமைத் திங்களாகும்.

இதன் ஆரம்பத்தைப் பார்போமேயானால், 2003ஆம் ஆண்டில் கனடாத் தமிழ்க் கல்லூரியால் தமிழ் மொழி வாரம் ஒழுங்கு செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து இங்கள்ள சில அமைப்புகள் ஒன்றிணைந்து 'தமிழ் மேம்பாட்டுக் கழகம்' என்ற பெயரில் ஒரு சங்கத்தை உருவாக்கினர். இவர்களுடன் இங்குள்ள தமிழ் நிறுவனங்களும் இணைந்து, தமிழ்மொழி மேம்பாடு, சிறுவர்களுக்கான தமிழ்க் கல்வி, தமிழியல் ஆய்வு போன்ற துறைகளில் செல்ல வேண்டும் என்ற நோக்கத்தோடு தமிழ் மொழி வார நிகழச்சிகளை ஒழுங்கு செய்தனர்.

பிள்ளைகளுக்கு தமிழ் மொழியைக் கற்பித்தல், அதில் உள்ள குறைபாடுகளை சரிசெய்தல், தொடர்பு சாதனங்களை இதற்காக இணைத்தல் போன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. கனடாவில் தமிழர் வாழும் இடங்களில் தமிழ் மொழியை முன்னிறுத்தி கலை நிகழ்ச்சிகள், கலந்துரையாடல்கள், பட்டி மன்றங்கள், கருத்தரங்குகள், இசை, நடன நிகழ்ச்சிகள், போன்றவை நடத்தப்பட்டன. 2009 ஆம் ஆண்டு தமிழ்க் கல்வியை கற்பிக்கும் அறிவகம் மற்றும் சில தமிழர் அமைப் புக்கள் இணைந்து 'தமிழ் மரபுத் திங்கள்' அமைப்பை உருவாக்கினர். 2010 ஆம் ஆண்டு முதலாவது தமிழ் மரபுத் திங்கள் விழா பல இடங்களில் கொண்டாடப் பட்டது. இக்கால கட்டத்தில் தற்போது கனடிய தேர்தலில் போட்டியிடும் நீதன் சண் அவர்களும் சங்கங்களை ஒன்றிணைப்பதில் முன்னின்று உழைத்ததையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

2012 ஆம் ஆண்டு ஒன்ராரியோ மாநிலத்தில் உள்ள மார்க்கம், ஏஜெக்ஸ், பிக்கரிங் நகரங்களும் 2013 ஆம் ஆண்டு பிராம்ரன், ரொரன்ரோ, நகரங்களும், 2014 ஆம் ஆண்டு ஒட்டாவா நகரமும் தை மாதத்தை தமிழரின் மரபுரிமைத் திங்களாக அறிவித்தன. இதே ஆண்டு ஒன்ராரியோ மாநில அரசும் தமிழ் மரபுத் திங்களைச் சட்டவலுவுள்ளதாக நிறைவேற்றியது. ஹரி ஆனந்தசங்க ரியின் முயற்சியால் 2016 ஆம் ஆண்டு கனடிய மத்திய அரசு தமிழ் மரபுத் திங்களை சட்டப்படி அங்கீகரித்தது. 2019ஆம் ஆண்டு தமிழ் மரபுத் திங்களை முன்னிட்டு, முதலாவது உலகத் தமிழியல் மாநாடு, ரொரன்ரோவில் நடைந்தேறியது. இம்மாநாட்டுக்கு, பல நாடுகளில் இருந்தும் தமிழ் அறிஞர் வருகை தந்திருந்தனர்.

2004 ஆம் ஆண்டில் இருந்து ஒன்ராறியோ தமிழ் ஆசிரியர் சங்கத்தினர் ரொறன்ரோ கல்விச்சபையோடு இணைந்து ஜனவரி மாதத்தில் பொங்கல் திருநாளை முன்னிட்டு கலை நிகழ்வுகளை கொண்டாடி வருகின்றனர். 2016 ஆம் ஆண்டு தமிழ் மரபுத் திங்கள் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட முன்பாகவே வருடந்தோறும் ரொறன்ரோ கல்விச் சபையால் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. 2011-2012 ஆம் ஆண்டுகளில் சுமார் 5000 தமிழ் மாணவர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட ஒன்ராறியோ தமிழ் ஆசிரியர் சங்கத்தின் தலைவராக நான் இருந்த போது மிகச் சிறப்பாக மரபுத்திங்கள் நிகழ்வுகளைக் கொண்டாடினோம். ஓவியப்போட்டி, பேச்சுப் போட்டி, மற்றும் கலை நிகழ்வுகள் இடம் பெற்றன.

இந்த வருடம் 'எமது வரலாறுகள், எமது மரபுகள், எமது தாயகங்கள்' என்ற தலைப்பை அடிப்படையாகக் கொண்டு நிகழ்வுகள் இடம் பெற்றன. இந்த நிகழ்ச்சியின் தொடர்பாக, பீல் பிரதேசத்தில் உள்ள சொப்கா குடும்ப மன்றத்தினர் தமிழர் மரபுத்திங்களை மிகச் சிறப்பாக ஒவ்வொரு வருடமும் கொண்டாடி வருகிறார்கள். இதில் கனடாவில் பிறந்து வளர்ந்து தமிழில் பேசும் பிள்ளைகள் பேச்சு, பாடல், நாடகம், நடனம் போன்ற நிகழ்வுகளில் பங்குபற்றி மிகவும் சிறப்பாகச் செய்து தமிழுக்கும், தமிழ் இனத்திற்கும் பெருமை சேர்த்தனர். இம்முறை கோவிட் பேரிடர் காரணமாக மெய்நிகர் வழியாகவே இந்த நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. இது போல, இங்கே உள்ள பல மன்றங்கள் தமிழர் மரபுரிமைத் திங்களைக் கொண்டாடுகின்றனர்.

சென்ற வருடம் 2021 தமிழ் மரபுத் திங்கள் நிகழ்வுகள் தைமாதம் முழுவதும் இடம்பெற்றன. நிகழ்வின் ஆரம்பத்தில், ரொரன்ரோவில் உள்ள கனடிய தமிழ் கல்லூரியின் வளாகத் திறந்த வெளியில் கனடிய தேசியக் கீதத்துடன் கனடிய கொடியும், தமிழ்த் தாய் வாழ்த்துடன் மரபுத்திங்கள் கொடியும் ஏற்றி வைக்கப்பட்டது. இந்தக் கொடியில் உள்ள இலட்சனைகள் தமிழர்களின் மரபைச் சரியான முறையில் பிரதிபலிக்கவில்லை, ஒரு சிலர், ஏனையோருடன் கலந்தாலோசிக்காமல் தங்களை முன்னிலைப் படுத்த அவசரமாகச் செய்த முடிவு இது என்ற ஒரு சாராரின் குற்றச் சாட்டும் அதைத் தொடர்ந்து முன்வைக்கப்பட்டது. மரபுத்திங்கள் மாதத்தினை முன்னிட்டு கருத்தரங்குகள் போன்ற நிகழ்வுகள் மெய்நிகர் ஊடாக நடைபெற்றன.

இந்த வருடம் நாடுகடந்த தமிழீழ அரசாங்க அங்கத்தவர்களும் தங்கள் பணிமனை அலுவலகத்தில் 2022 மரபுத் திங்களை இரண்டு நாட்கள் கொண்டாடினார்கள். நேரடி நிகழ்வுகள் தைப்பொங்கல் தினத்திலும், 15 ஆம் திகதி இணையவழியாகவும் நிகழ்வுகள் இடம் பெற்றன. கனடாத் தமிழ் மரபியல் நடுவம் ஒழுங்கு செய்த தமிழ் மரபுத் திங்கள் நிகழ்வுகள் மெய்நிகர் வழியாக நடந்த நிகழ்வில் 9-1-2022; 'வரலாற்றுத் தொடர்ச்சியைப் பேணுவதில் வரலாற்றுத் தொன்மையின் பங்கு' என்ற தலைப்பில் புலவர் செந்தலை ந. கௌதமன் அவர்கள் உரையாற்றினார்கள். 16-1-2022 அன்று பேராதனை பல்கலைக் கழக விரிவுரையாளர் க.ஜெகதீஸ்வரன் 'தமிழர் வரலாற்றுத் தொன்மையில் தொல்லியல் ஆய்வுகளின் பங்கு' என்ற தலைப்பிலும் 23-1-2022 அன்று 'ஈழத்தில் தமிழர் வரலாற்றுத் தொன்மை' என்ற தலைப்பில் யாழ்பாணம் பல்கலைக் கழக வரலாற்றுத்துறை தலைவர் பேராசிரியர் பரமு புஸ்பரத்தினமும் உரையாற்ற உள்ளார்கள்.

'தைப் பொங்கல் மற்றும் தமிழ் மரபு மாதத்தையும் முன்னிட்டு தமிழர்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களின் தேசிய அடையாளத்தைப் பேணுவதற்கும், வலுக்கட்டா யமாக ஒருங்கிணைக்கப்படுவதையும், இனப்படு கொலையை எதிர்ப்பதற்கும் உங்களின் உறுதிப்பாடு ஊக்கமளிக்கிறது மற்றும் பாராட்டுக்குரியது என்று அரிஸ் பாபிகியன், ஒன்றாரியோ மாகாணப் பாராளு மன்ற பிரதிநிதி அரிஸ் பாபிகியன் கனடா உதயன் பத்திகைக்குத் தெரிவித்திருந்தார். ஒன்றாரியோ மாகா ணத்தின் முதல்வர் டக் போர்ட் அவர்கள் தமது தைப் பொங்கல் வாழ்த்துக்களையும் தமிழர் மரபுரிமை மாதத் திற்கான வாழ்த்துக்களையும் தெரிவித்திருந்தார். ஒன்ராறியோவின் செயற்பாடுகளில் முக்கிய பங்கு வகிக்கும் தமிழர்களைத் தனது பொங்கல் வாழ்த்துச் செய்தியில் பாராட்டியிருந்தார்.

கனடா பிரதம மந்திரி ஜஸ்ரின் ட்ரூடோ அவர்களும் வழமைபோல தைப்பொங்கலை முன்னிட்டு வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார். 'உலகம் முழுவதிலும் உள்ள தமிழ்ச் சமூகத்தினர் அறுவடைத் திருநாளான தைப்பொங்கலை இவ்வாரம் கொண்டாடுகிறார்கள். இத்தினத்தில் பாரம்பரியமாக தமிழ் குடும்பத்தினரும், நண்பர்களும் ஒன்றுசேர்ந்து அமோகமான விளைச்சலுக்கு நன்றி தெரிவித்து இனிய பொங்கலையும் ஒவ்வொருவரும் பகிர்ந்து கொள்வார்கள். கனடாவில் ஜனவரி மாதம் தமிழ் மரபுரிமைத் திங்களாகவும் விளங்குவதால், தமிழ்ச் சமூகத்தின் செழிப்பான வரலாறு, மீண்டெழும் வல்லமை மற்றும் சமூக, பொருளாதார, பண்பாட்டுத் துறைகளில் வழங்கிவரும் பங்களிப்பை அங்கீகரித்துக் கொண்டாடும் காலமாகவும் இது அமைகிறது. நாம் ஒன்றுபடும் போது, மேம்பட்டதும், அதிக நியாயம் நிலவுவதும், அனைவரையும் அதிகளவு உள்ளடக்கியதுமாகக் கனடாவை மாற்றலாம். கனடாவிலும், உலகெங்கிலும், தைப்பொங்கலைக் கொண்டாடும் அனைவருக்கும் இந்தப் பண்டிகை மகிழ்ச்சியானதாக அமைவதற்கு எனது குடும்பம் சார்பாக சோஃபியும் நானும் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துகள்.'



**“வீட்டிலிருந்தபடி வேலை பார்க்கும் பணியாளர்களின் “ஓய்வு எடுக்கும் உரிமை” பற்றி முதலில் அக்கறை எடுத்திருக்கும் நாடு, போர்ச்சுகல். நவம்பரில் இதற்கான சட்டம் அமலுக்கு வந்தது. இதன்படி, மிக அவசர மான சூழல் தவிர மற்ற நேரங்களில் அலுவலக வேலை நேரம் தாண்டிப் பணியாளர்களைத் தொடர்பு கொள்வதோ, தகவல் அனுப்புவதோ கூடாது. மீறினால் அபராதம் விதிக்கப்படும்.**



# வீட்டிலிருந்து 'வேலை'யின் எதிர்காலம் எப்படியிருக்கும்?

**அகஸ்டஸ்**

கொரோனா, லொக்டௌன் போன்ற வற்றுடன் சேர்ந்து நமக்கு அறிமுகமான இன்னொரு வாசகம், 'வொர்க் ஃப்ரம் ஹோம்.' அதாவது 'வீட்டிலிருந்து வேலை' கடந்த இரண்டு ஆண்டுகளில் இது ஏராளமான ஜோக்குகள், வாட்ஸ் அப் பகிர்வுகள் வந்துவிட்டன. உலகெங்கும் இருக்கும் பணியாளர்களில் 31 சதவிகிதம் பேர் கொரோனா காலத்தில் வீட்டிலிருந்து வேலை செய்கின்றனர். இலங்கையிலும் பல ஆயிரம் பேர் இதைச் செய்வதாகத் தகவல்கள் சொல்கின்றன. 'இத்தனை லட்சம் பேர் ஈடுபட்டிருக்கும் இந்த வேலை தொடர்பாக அரசு ஏதேனும் நெறிமுறைகள், சட்டங்கள் கொண்டுவந்திருக்கிறதா' என்றால், 'இல்லை' என்பதுதான் பதில்.

கடந்த மாதம் அரசு ஓர் உத்தரவு வெளியிட்டது. வீட்டிலிருந்து வேலை செய்வது 2022 ஜனவரியில் முடிவுக்கு வருகின்றது என்பதுதான் அந்த அறிவிப்பு, அனைவரும் அலுவலகம் வந்து பணிபுரிய வேண்டும் என அரசு அறிவித்திருந்தது. பெரும்பாலான தனியார் துறையினரும் ஜனவரி 1 ஆம் திகதியுடன் பணியாளர்களை அலுவலகத்துக்கு முழுமையாக அழைத்துக்கொண்டுவிட்டனர்.

வீட்டிலிருந்தபடி வேலை பார்ப்பது ஒரு வகையில் சந்தோஷம் ஒருவகையில் சங்கடம். குடும்பத்தையும் பார்த்துக் கொண்டு வேலை செய்யலாம் என்பது சந்தோஷம். குறிப்பாக குழந்தைகளைப் பராமரிக்கும் இளம் அம்மாக்களுக்கு இதில் பெரும் திருப்தி. ஆனால், 'அலுவலகத்தில் பார்த்ததைவிடக் கூடுதலாக வேலை பார்க்கிறேன்' என்று நிறைய பேர் கூறுகிறார்கள். காலையில் அலுவலகம் சென்றபிறகு நடக்கும் சந்திப்புக்கள் எல்லாம் இப்போதெல்லாம் அதிகாலையிலேயே முடிந்துவிடுகிறது. மாலையில் வேலை நேரம் முடிந்ததும் எல்லாவற்றையும் மூடி வைத்துவிட்டு வீடு திரும்புவது போல இப்போது விடுபட முடிவதில்லை. எந்த நேரத்திலும் அழைப்பு வருகிறது. நிறைய பேரின் தூங்கும் நேரம் குறைந்திருக்கிறது. முன்பைவிட குடும்பத்துடன் நேரம் செலவிடுவது சுருங்கிவிட்டதாகப் பலர் ஆதங்கத்துடன் சொல்கிறார்கள். வீட்டிலிருந்து வேலை ஏற்படுத்தும் மன அழுத்தங்கள் பற்றிப் பல நாடுகளில் ஆய்வுகள் நடந்துவருகின்றன.

வீட்டிலிருந்தபடி வேலை பார்க்கும் பணியாளர்களின் 'ஓய்வு எடுக்கும் உரிமை' பற்றி முதலில் அக்கறை எடுத்திருக்கும் நாடு, போர்ச்சுகல். நவம்பரில் இதற்கான சட்டம் அமலுக்கு வந்தது. இதன்படி, மிக அவசரமான சூழல் தவிர மற்ற நேரங்களில் அலுவலக வேலை நேரம் தாண்டிப் பணியாளர்களைத் தொடர்பு கொள்வதோ, தகவல் அனுப்புவதோ கூடாது. மீறினால் அபராதம் விதிக்கப்படும். வீட்டிலிருந்து பணியாற்றுவதற்குத் தேவையான உபகரணங்களைக் கொடுக்க வேண்டும். பணியாளர்களுக்குக் கூடுதலாக ஆகும் இணைத் தொடர்பு மற்றும் மின்கட்டணச் செலவைக் கொடுக்க வேண்டும்.

அலுவலகச் சூழலை அனுபவிக்காமல் தனிமைப்பட்டு இருப்பதைத் தவிர்க்க, இரண்டு மாதங்களுக்கு ஒருமுறையாவது மேலதிகாரிகளைச் சந்திக்க வேண்டும். “பணியாளர்கள் தங்கள் வேலைக்கும் வாழ்க்கைக்குமான சமநிலையை இந்தப்



புதிய சூழலில் பேண வேண்டியுள்ளது. அதற்காகவே இந்தச் சட்டம்” என்கிறார், போர்ச்சுகல் தொழிலாளர் நல அமைச்சர் அனா மென்டெஸ் கோடின்ஹோ.

சில ஐரோப்பிய நாடுகளில் வீட்டிலிருந்து வேலை தொடர்பாக ஏற்கெனவே சட்டங்கள் இருக்கின்றன. பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஸ்பெயின் போன்ற நாடுகளில் வேலை நேரத்தைத் தாண்டி இதர நேரங்களில் அலுவலகம் மின்னஞ் சல்கள், குறுந்தகவல்கள் போன்ற வற்றுக்கு பதிலளிக்க வேண்டிய அவசியம் இல்லை.

கொரோனா கால வீட்டிலிருந்து வேலை கலா சாரம் அமலுக்கு வந்தபோது, 'வழக்க மாக அலுவலகம் வந்து வேலை செய்வது தொடர்பான அனைத்து விதிகளும் வீட்டிலிருந்தே வேலை செய்வோருக்கும் பொருந்தும்' என அறிவித்தது இங்கிலாந்து. 'வீட்டிலிருந்து வேலை செய்தாலும், இயல்பான வேலை நேரத்தைத் தாண்டிக் கூடுதல் நேரம் வேலை செய்ய வேண்டியதில்லை' என அறிவித்தது அயர்லாந்து.

உலகெங்கும் இருக்கும் நடைமுறை போலவே இந்தியாவிலும் ஐ.டி மற்றும் ஐ.டி சேவை நிறுவனங்கள் பலவும் கடந்த ஆண்டு மார்ச் மாதம் முதல் வீட்டிலிருந்து வேலையில் இருக்கின்றன. இன்னும் பல நிறுவனங்களும் தங்கள் ஊழியர்களில் பெரும்பாலானோரை வீட்டிலிருந்தே வேலை செய்யப் பணித்துள்ளன. சிலர் பாதி நாள்கள் வீட்டிலிருந்தும், மீதி நாள்கள் அலுவலகம் வந்தும் பணியாற்றுகிறார்கள். இந்த ஜனவரியில் எல்லோரும் அலுவலகம் திரும்பக்கூடும் என்று பல நிறுவனங்கள் அறிவித்திருந்த நிலையில், கொரோனா தனது புதிய உருமாற்றமான ஒமைக்ரோனை அறிமுகம் செய்திருக்கிறது. எனவே, வீட்டிலிருந்து வேலை இன்னும் சில மாதங்களுக்கு இந்தியாவில் நீடிக்கும் என்பதே யதார்த்தம்.

சில நிறுவனங்களுக்கு இந்தப் புது நடைமுறை வசதியாகவும் இருக்கிறது. அலுவலகங்கள் சுருங்கிவிட்டன. அலுவலகப் பராமரிப்பு, மின் கட்டணம், தண்ணீர்ச் செலவு, போக்குவரத்துச் செலவு கணிசமாகக் குறைந்திருக்கிறது. இதனால் மிச்சம் பிடிக்கும் சில நிறுவனங்கள், தங்கள் பணியாளர்களுக்கு கணினி, இணைய வசதி என்று செய்துகொடுத்திருக்கின்றன. ஆப்பிள் நிறுவனம் தன் பணியாளர்களுக்கு 'வீட்டிலிருந்து வேலை போனஸ்' என ஆயிரம் டொலர் சமீபத்தில் அளித்திருக்கிறது.

பணியாளர்களுக்கும் வீட்டிலிருந்து வேலை வசதியாக இருக்கிறது. அவசரமாகத் தயாராகி, சமைத்து எடுத்துக் கொண்டு, போக்குவரத்து நெரிசலில் சிக்கி அலுவலகம் போக வேண்டியதில்லை. சிலர் இந்த இடைப்பட்ட காலத்தில் வேறொரு நிறுவனத்துடன் பேசி பகுதி நேர வேலை, சுயாதீன வேலை எனக் கூடுதலாகச் செய்ய ஆரம்பித்துவிட்டனர். இரண்டு நிறுவனங்களுக்கு வேலை பார்ப்பது பலருக்கும் தப்பாகவே தோன்றவில்லை.

அட்லாசியன் நிறுவனம் செய்த ஓர் ஆய்வின்படி, உலக அளவில் வீட்டிலிருந்து வேலை செய்வதை அதிகம் விரும்புவது இந்தியர்கள்தான். 94 சதவிகிதம் பேர் இது பிடிப்பதாகச் சொல்கிறார்கள். 57 சதவிகிதம் பேர் இதற்கு ஏற்றபடி தங்கள் வீடுகளில் வசதிகளைச் செய்திருக்கிறார்கள். உலகிலேயே வீட்டிலிருந்து வேலை நடைமுறைக்கு எளிதில் தங்களைப் பழக்கிக்கொண்டது இந்தியர்கள் தான்.

இந்தப் புத்தியல்பு பெண்களுக்கும் வயது முதிர்ந்த பணியாளர்களுக்கும் பாதிப்பு ஏற்படுத்தும் என்று ஒரு விமர்சனமும் வைக்கப்படுகிறது.

கொரோனா அச்சம் இடையில் நீங்கியிருந்த நாள்களில், மற்றவர்கள் அலுவலகத்துக்கு அழைக்கப்பட்டனர். பல நிறுவனங்கள் பெண்களையும், குறிப்பிட்ட வயதுக்கு மேற்பட்ட பணியாளர்களையும் தொடர்ந்து வீட்டிலிருந்து வேலை செய்யச் சொல்லின் உலகளாவிய ரீதியில் காணப்பட்ட நிலை இது.

“நேரடியாகக் கண்ணில் படும் ஊழியர்களின் பணியை மட்டுமே உயர் அதிகாரிகள் கவனிப்பார்கள். எங்கள் பணி இரண்டாம்பட்சமாகப் பார்க்கப்படும். இது எங்கள் பணி உயர்வு, ஊதிய உயர்வு ஆகிய இரண்டையுமே பாதிக்கும்” என்கிறார்கள் இவர்கள்.

எந்த மாற்றமும் முதலில் பாதிப்பது பெண்களைத்தான் என்பதே வேதனை. ■

# எங்கெங்கு காணினும்...

**வி.ஜீவகுமாரன்**



"புதிய மண்ணும் புதிய வாழ்வும்" என்ற பெயரில் நான் எழுதி வரும் வார மலருக்கான கட்டுரைகளை இரண்டு மூன்று இதழ்க ளுக்குப் போதுமானவற்றை முதலிலேயே டென்மார்க்கில் இருந்து அனுப்பி விடுவது என் இயல்பு.

எனது எழுத்துகளைக் கௌரவப்படுத்தும் பத்திரிகைகளைக் கடைசி நேர டென்சனுக்குள் இழுத்துச் செல்வதில் எனக்கு என்றுமே உடன்பாடில்லை.

ஆயுதங்கள் மௌனமாக்கப்பட்ட போருக்குப் பின்னான இலங்கையை யும். அதற்கு போருக்கு முன்னாக புலம் பெயர்ந்த மக்களின் வாழ்க்கை யினையும் இணைத்து எழுதிக் கொண் டிருக்கும் தொடர்.

25 தொடருக்கான... அதாவது அரை வருடத்திற்கான ஒப்பந்தம்.

இன்னும் 5 தொடர்களே பாக்கி உள்ளன.

ஆனால் திடீரென இலங்கைக்கு வர வேண்டியிருந்ததால் இலங்கையில் வந்து நிற்கும் இந்த ஒரு மாதத்துக்குள் அதனை எழுதிக் கொடுத்திட வேண்டும் என்ற நினைப்பில் என்னை நானே அழுத்திக் கொண்டு இருந்தேன்.

"உலகத்தின் அதிசயங்களில் ஒன்று காலில் செருப்புக் கூட போடாது நடந்து திரிந்து கொண்ட ஒரு இனம் ஒரு 50 ஆண்டுகளுக்குள்... சுழற்றிப் போட்டுப் போட்ட சோழிகள் போல.... அல்லது கொத்தணிக் குண்டு கள் போல வெடித்து வெடித்துத் துண்டுகள் பரவுவது போல... உலகம் எல்லாம் சிதறிப் போய் கோட்டும் சூட்டும் போட்டுக் கொண்டு ஒரு பணக்கார சமுதாயமாக தலையெ டுத்து நிற்பது எவரும் கனவில் கூட கற்பனை பண்ணியிருக்காத ஒரு நிகழ்வு. அடுத்ததொரு தரப்படுத்தல் உலகம் முழுக்க என்றால் அது எம் பிள்ளைகளால் தான் என மகிழ்வுடன் வருகின்ற வாரத் திற்கான கட்டுரையை முடித்திருந்தேன்" தொடர் கட்டுரையை முடித்து விட்டு கையில் ஒரு சிகரட்டையும் எடுத்துக் கொண்டு வீட்டின் வெளிமதிலுக்கு வெளியே நின்று புகைத்துக் கொண்டு நின்றா லும் எழுதிய கட்டுரையின் ஒவ்வோர் வரியும் என் மனத்தில் ஓடிக் கொண்டே இருந்தன.

மனம் மீண்டும் மீண்டும் சில சொற் களை மாற்றியும்... சில வசனங்களை வெட்டி வெட்டித் திருத்தியும் கொண்டு இருந்தது.

தானாகப் புகைந்து கொண்ட சிக ரட்டின் நெருப்பு கை விரல் நுனியைச் சுட்டு, "நீ எப்போ தான் முழுதாய் ஒரு சிகரட்டை குடிக்கப் போறாய். மற்றவன் புகைத்து தான் காசைக் கரியாக்கிறான். நீ புகைக்காமலே காசைக்கரியாக்கிறியே" என அது என்னைத் திட்டுமாப் போல் இருந்தது.

புன்னகைத்துக் கொண்டு எரிந்து போன சிகரட்டால் மற்ற சிகரட்டினை பற்ற வைத்து வைத்துக் கொண்டு உல கம் எல்லாம் எழுந்த எங்கள் இனத்தின் எழுச்சியை நினைத்துக் கொண்டு நின்றேன் - எனது கட்டுரைக்கு மேலும் மேலும் ஆதாரங்களைத் தேடியபடி.

எங்கள் பிள்ளைகள் பலஉ உயர் பதவிகளிலும் உயர் நிறுவனங்களுக்கு ஆலோசகர்களாக இருப்பதும் ஆரோக் கியமான நிகழ்வு தானே. அது மட்டு மில்லை அண்மையில் எனது கார் எஞ்ஜின் சூடேறி விரைவுப்பாதையில் நின்ற பொழுது வாகனப்பழுது உதவி நிறுவத்துக்கு தொடர்பு கொண்ட பொழுது "சொல்லுங்கோ மாமா" என்கின்றான் எங்கள் நாட்டுப் பையன் ஒருவன்.

எஞ்ஜின் சூடு இறங்கியது போல இருந்தது.

ஒரு 60 வயது மதிக்கத்தக்க அம்மா. ஒரு கையில் பூக்கள். காலையில் முழுகி தலையில் பூ வைத்திருப்பது தெரி கிறது. மறுகையில் இன்னோர் பை. கோயிலுக்குப் போகின்றார் போலும்.

என்னைத் தாண்டிக் கொண்டு செல் கின்றார் - குனிந்த தலை நிமிராமல்.

அவர் வாய்க்குள் ஏதோ ஒரு தேவா ரம் ஓதிக் கொண்டு போவது போலத் தெரிகின்றது.

தூரத்தில் "இது மாலை நேரத்து மயக்கம்" என ஒரு பனை உச்சியில் இருந்து லவுட் ஸ்பீக்கர் பாடிக் கொண்டு இருந்தது.

இந்த முறை சிகரட்டிடம் ஏச்சு வாங்காமல் இரசித்து உறிஞ்சி உள் வாங்கி புகைவளையங்களை விட்டு என் எழுத்துகளை நானே இரசிப்பது போல நான் விடும் புகை வளையங் களை நானே ரசித்துக் கொண்டு நின்றேன்.

"ஓரம்போ... ஓரம்போ..." என்ற பாட்டின் இசையை ஒலிக்க தூரத்தில் பாண் விற்கும் ஆட்டோ வந்து கொண்டிருக்கின்றது. இந்த இசை அந்தக் குறிப்பிட்ட பேக்கரிகாரனின் றேட்மார்க் மியூசிக். காலையும் மாலையும் எங்கள் வீட்டைத் தாண்டி மெதுவாகச் செல்லும்.

இவ்வாறு எல்லாவற்றுக்கும் ஆட்டோ தான் - அதிகாலையில் சைக்கிளில் அவலக் குரலில் "இன்னார் செத்துப் போனார்" என சொல்லிக் கொண்டு போகும் இழவு முதற்கொண்டு அனைத்துமே ஆட்டோக்களாயப் போய் விட்டது.

என்னைத் தாண்டிச் சென்ற அந்த அம்மா தூரத் தில் போன பின்பு அக்கம் பக்கம் திரும்பிப் பார்த்து விட்டு கையில் கொண்டு சென்ற பையை ஒரு வீட் டின் மதில் கரையில் போட்டு விட்டு விரைவாக நடக்கத் தொடங்கினார்.

எனக்கு 'திக்' என்றது.

நிச்சயம் அது அவர் வீட்டுக் குப்பைப் பையாக இருக்க வேண்டும்.

▼ ▼ ▼

இரவு முழுக்க ஏனோ பயங்கரமான கனவுகள்.

ஒன்றுடன் ஒன்று சம்மந்தமில்லாத மாதிரி.

கனவில் வந்தவர்கள் தெரிந்தவர்கள் போலும் இருந்தார்கள்.

தெரியாவர்கள் போலும் இருந்தார்கள்.

அதிகாலையில் புரண்டு புரண்டு படுத்துப் பார்த்தேன்.

நித்திரை வர மறுத்தது.

வாகனங்களின் சத்தமும் - றோட் டால் கதைத்துக் கொண்டு சந்தைக்கு போய்க் கொண்டு இருப்பவர் களின் சத்தங்களும் கேட்டுக் கொண்டிருந்தன.

மெதுவாக எழுந்து மனைவி பிள்ளைகளைக் குழப்பாமல் குசினியுள் சென்று தேனீரையும் ஊற்றிக் கொண்டு வெளிவிறாந்தையில் போடப்பட்ட அப்பாவின் ஈசிச்செயரில் சாய்ந்து கொண்டேன்.

கிட்டத்தட்ட நாற்பது வருடத்திற் குப் பின்பாக.... அப்போ இதில் அப்பா... இப்போ நான்....

அப்பாவின் கால்களுக்கு நடுவே அவரின் சாரத்தி னுள் தொட்டிலில் உட்கார்ந்து இருப்பது போல இருந்த சுகத்திற்கு என்றும் நிகரில்லை.

றோட்டில் திடீரென கலவரச் சத்தங்கள் கேட்கின்றன.

வாகங்களின் ஓட்டம் திடீரென அதிகமாகி வேகமாகப் போகத் தொடங்கின .

நாய்களின் குலைப்பும் ஊளையிடுதலும் அதிகமாகின.

மெதுவாக எழுந்து சென்று வெளி வாசல் கேற் றைத் திறக்காமல் உள்ளே நின்று கொண்டு வெளியே என்ன நடக்கின்றது என அறிய முற்பட்டேன்.

"பொறுக்கி வேலை செய்து போட்டாங்கள்.... பொறுக்கி வேலை செய்து போட்டான்கள்" என்ற குரல்கள் பல மாகக் கேட்டன.

மனைவி பின்னால் வந்து நிற்பது போலத் தெரிந்தது.

"இப்ப உள்ளுக்கை வாங்கோ... விடிய எல்லாம் தெரியும் தானே.. இப்ப அறிஞ்சு என்ன பத்திரிகைக்கு எழுதவா போறீங்கள்.. தலைதலையாய் அடிச்சனான் வேண்டாம் இலங்கைக்கு வர வேண்டாம் என்று..."

பாதுகாப்பு வலையங்களுக்குள் வாழ்ந்து பழக்கப்பட்டவள் அவள்.

எல்லா எல்லைகளையும் தாண்டி வாழ்பவன் அல்லது எழுதுபவன் நான்.

எனக்குள் ஆயிரம் குறுகுறுப்பு.

நிலம் வெளிக்க முதலே மெதுவாக வீதிக்கு வந்தேன்.

சலசலப்பு கொஞ்சம் ஓய்ந்திருந்தாலும், ஏதோ ஒரு அமைதி - அவைரின் முகங்களில்.

அவை இறுகியிருந்தது போல இருந்தன.

கடந்து போன போராட்டம் மக்களை மௌ னித்திருக்கப் பழக்கியிருந்தது போலும்.

சற்றுத் தூரத்தில் இருந்த தேனீர் கடை திறந் திருந்தது.

சிவசம்புஅண்ணை அதிகாலையிலேயே அடுப்பு மூட்டி விடுவார்.

மெதுவாக அவரின் கடையடிக்கு கால்கள் தானா கவே நகர்ந்தன.

சாதாரணமாக நாலைந்து பேர் மட்டும் கடைக்கு வெளியே நின்று தேனீர் குடித்துக் கொண்டிருக்கும அவர் கடைக்கு முன்னால் பத்து பதினைந்து பேர் மட்டில் நின்றிருந் தார்கள்.

"ஒரு தேனீர் சீனி போடாமல்"

சிவசம்பு அண்ணை நிமிர்ந்து ஆச்சரியமாக பார்த்தார்.

சந்தைக்கு வருவபவர்கள் மட்டும் தான் அவரின் காலை நேர வாடிக்கையாளர்கள்.

"எப்ப தம்பி பயணம்"

"வாற கிழமை"

"வந்த விசயங்கள் முடிந் தால் போய்ச் சேருங்கோ... ஏன் வீணாய் இங்கை நின்று கொண்டு..."

அவரை ஏன் என்பது போல பார்த்தேன்.

"என்ன கோழைத்தனம் இது?.. தகப்பன் அல்லது பெட்டை யின்ரை தமையன்மார் அல்லது தம்பிமார் அல்லது மாமான்மார் யாராவது போய்க் கதைத் திருக்கலாம். விருப்பமில்லாவிட்டால் பிரச்னையை வேறு விதமாய் முடித்து இருக்கலாம். இது முன்பின் தெரியாத யாரோ ஆட்களைக் கொண்டு வந்து படுத்துக் கிடந்ததுகளை படுக்கையிலை வைச்சு... நினைச்சுப் பார்க்கவே ஏலாமல் கிடக்கு"

தேனீர் கிளாஸ் மெதுவாக நடுங்கியது போல இருந்தது. சிவசம்பு அண்ணையிடம் இருந்து எதிர்பார்த்த பதிலைப் பின்னால் நின்று கதைத்தவர்களிடம் இருந்து பெற்றுக் கொண்டேன்.

"வந்தவன்கள் யாராம்"

"யாருக்குத் தெரியும்?... வந்தவங்கள் வந்த கார் நம்பர் பிளேட் எங்கட பிரதேசத்தின்ரை இல்லையாம்"

பேசிக்கொண்டே நின்றார்கள்.

நான் மெதுவாக அவ்விடம் விட்டு விலகினேன்.

▼ ▼ ▼

மீண்டும் டென்மார்க் வந்து ஒரு கிழமையாயிற்று.

தொடரின் இறுதிப் பாகத்தை இன்று எழுதி முடித்து அனுப்ப வேண்டும்.

"புதிய மண்ணும் புதிய வாழ்வும்"

**(16 ஆம் பக்கம் பார்க்க...)**

ஈழநாடு



# கலை, இலக்கிய உலகுக்கு புதிய வரவாக "வழித்தடம்"

- ராம்ஜி

அச்சு ஊடகங்களில் பல பதிப்புக்கள் மூடப்பட்டுள்ள / மூடப்பட்டு வருகின்ற நிலையில் "வழித்தடம்" ஒரு புதிய பரிணாமத்தை சுமந்து அச்சுப் பிரதியாக வெளிவந்துள்ளது.

112 பக்கங்கள், கைக்கு அடக்கமாக, வாசிப்பதற்கு இலகுவாக நேர்த்தியாக சிரேஷ்ட ஆளுமைகளால் ஒருங்கிணைந்து வெளிக்கொணரப்பட்டுள்ள கலை இலக்கிய, சமூக சஞ்சிகை வழித்தடம், "வாசிய" யாருக்கு? எனும் ஆசிரியர் தலையங்கத்துடன் ஆரம்பமாகின்றது.

தமிழ் உலகில் புகழ்பெற்ற பல்துறை சார் ஆளுமையான பேராசிரியர் எம்.ஏ.நுஹ்மானை அட்டைப்படத்தில் ஓவியாமாக கொண்டமைந்துள்ளது இதழ். அவரை ஓவியமாக எஸ்.நளீம் அழகாக வரைந்துள்ளார்.

நவம்பர் மாதம் முதலாவது இதழாக அக்கறைப்பற்று புத்தகக்கண்காட்சியின் போது வெளியிடப்பட்ட வழித்தடத்தின் பிரதம பொறுப்பாசிரியர் சிராஜ் மஷ்ஹூர். எழுத்து, ஆய்வு, ஊடகம் என பலதுறைசார் ஆளுமைகளான க.கருணாகரன், மல்லியப்புசந்தி திலகர், அம்ரிதா ஏயெம் ஆகியோர் இணையாசிரியர்களாக தமது பங்களிப்பை வழங்கியுள்ளனர்.

பேராசிரியர் நுக்மான் அவர்களின் நேர்காணலை பிரதானமாகக் கொண்டும் முன்பக்க அட்டை கொண்டும் வெளிவந்துள்ளமை சிறப்பம்சம்

முக்கிய ஆளுமைகளான தமிழ்நாட்டின் பிரபல மார்க்ஸிய எழுத்தாளர் அ.மார்க்ஸ் எழுதிய 'ஒண்லைன் கல்விப்பிரச்சினைகள்' மறைந்த பிரபல எழுத்தாளர் நந்தினி சேவியரின் கட்டுரை, "மூளைக்குமுண்டோ சிலிக்காசிப்" என்ற ரும்மானின் கட்டுரை, அஸ்லம் சஜாவின் "காலநிலை மாற்றம்" ஒளிப்படக் கலைஞன் அப்துல் ஹமீத்தின் "வாழ்வியல் கோலங்கள்" எனும் தலைப்பிலான படங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் மற்றுமொரு புகழ்மிகு இரு மொழி இலக்கிய அளுமை 2019 ஆம் ஆண்டுக்கான "சாகித்ய ரத்னா" விருது பெற்ற கே.எஸ்.சிவகுமாரன் பற்றிய வாழ்க்கை குறிப்பாக மாத்திரம் அல்லாமல் அவரது ஆளுமைகளைப் பற்றியும் ஆங்கிலப்புலமைப்பற்றியும் ஆழமான கட்டுரையைத் தந்துள்ளார் புலம்பெயர் எழுத்தாளர் மு. நித்தியானந்தன்.

அனார் இஸ்ஸத் ரிஹானாவின் "புலனாகாவெளி" எனும் கவிதை, "அம்மா" என்ற எஸ்.பாயிஸா அலியின் சிறுகதை, எழுத்தாளர் றியாஸ் குரானாவின் சிப்பதும் ஒரு வகை தியானமேஎனும் தலைப்பில் வாசிக்காதவர்களையும் வாசிக்க தூண்டுவதான கட்டுரையாகவும் உள்ளது.

டணிஸ்கரனின் "நாஸ்தென்காவின் கண்களில் பனி பொழிகிறது" , இலங்கையில் "ஜனநாயகம்" அனுபவப் பகிர்வும் ஆய்வு முடிவுகளும் எனும் தலைப்பிலான மல்லியப்புசந்தி திலகரின் கட்டுரை, திக்குவல்லை கமாலின் "சிங்களத்தில் முஸ்லிம் சிறுகதைகள்" என ,ஆளுமைகள் பலரது ஆக்கங்களை சுமந்து வெளிவந்துள்ளது.

இலங்கைத் தேயிலைத் தோட்டத்திலே" என்ற மலையகத்தின் மறைந்த புகழ்ப்பெற்ற கவிஞர் சக்தீ அ பால ஐயாவின் மெழிப்பெயர்ப்பு கவிதை என கனதியான ஆக்கங்களை 'வழித்தடம்' சுமந்து வந்துள்ளது.

"வழித்தடம் ஒரு வாழ்வியல் சஞ்சிகை. புதிய பாதையை நோக்கிய பயணத்தின் திசைவழி இது. அந்தவகையில் சமூக □ பண்பாட்டு அசைவியக்கத்தின் வழிப்படமாகவும் இது அமைகின்றது. அனைவரும் வாசிக்க வேண்டிய சஞ்சிகை

**தொடர்புகளுக்கு :**
**அயாஷ்- 075-7440505**
**விலை - 200 ரூபா**



(16 ஆம் பக்கம் பார்க்க...)

# எங்கெங்கு காணினும்...

இலங்கைக்குச் சென்று வந்த பின்பு முதல் பாகத்தை எழுதும் பொழுது மனம் இருந்த உற்சாகம் இன்று ஏனோ இல்லாமல் இருப்பதை மனம் உணர்ந்தது.

ஆனாலும் தொடரை எழுதி முடிக்க வேண்டும்.

ஒரு தொடர்கதையை உடனே முடிக்க வேண்டும் என்றால் ஒரு தற்கொலையையோ... விபத்தையோ ... அல்லது ஒரு புற்றுநோயையோ கொண்டு வந்து முடித்து விடலாம். ஆனால் கட்டுரைக்குள் கொண்டு வந்து அதனை முடிக்க முடியாது.

வாழ்ந்து... போராடி... மௌனமாகி.... பின் மீண்டும் துளிர்த்துக் கொண்டிருக்கும் எனது சொந்த மண் பற்றியும்.... புலம் பெயர்ந்து நான் வாழும் புதிய மண்ணைளும்; அதன் வாழ்க்கையின் பெருமைகளையும் சிறப்புகளையும் பதிவு செய்யும் கட்டுரைத் தொடரினை எழுதிச் சென்ற என் விரல்கள் ஏனோ தடுமாறுவது எனக்குத் தெரிகிறது.

தமிழ்த் தட்டெழுத்தின் சின்ன எழுத்தும் பெரிய எழுத்தும் என்னையும் அறியாமல் என்னுடன் கண்ணாமூச்சி ஆடுகின்றன.

உடல் என்று எழுதினால் ஊடல் என்று வருகிறது. கடல் என்று எழுதினால் குடல் என வருகிறது.

கொஞ்சம் அமைதியாக இருந்து விட்டு எழுதினால் நன்றாய் இருக்கும் போலிருக்க எழுந்து போய் ரி.வி.க்கு முன்னால் அமர்ந்து கொண்டேன்.

மகாபாரதம் போய்க் கொண்டிருக்கின்றது.

அதர்மத்தை தோற்கடிக்க இன்னோர் அதர்மத்தைக் கையில் எடுப்பதும் தர்மம்தான் என்று கிருஸ்ணன் சொன்னதை அவனவன் எல்லாம் கையில் எடுத்து விட்டானா என மனம் என்னையே கேட்டுக் கொண்டது - கண்ணப்ப நாயனார் கடவுளுக்கே மாமிசம் படைக்கும் பொழுது நாங்கள் வெள்ளியில் சாப்பிடக் கூடாதா என பேஸ்புக்கில் அறிவாளிகள் கருத்துத் தெரிவிப்பது போல.

ஏகலைவனின் கட்டை விரலை தானமாய் பெற்ற துரோணர் இறந்து போகின்றார்.

மனம் வேறு இறுதி யுத்தத்தை நினைத்து சஞ்சலப்படுகின்றது.

தொலைபேசி அழைக்கின்றது.

"சொல்லுங்கள்"

"பீற்றர் அண்ணையை மண்டையிலை போட்டுட்டாங்கள்"

"என்ன சொல்லுறீங்கள்"

"ஓம் அண்ணை.... பீற்றர் அண்ணையின்டை பொடியனின்ரை பிரச்சனை தெரியும் தானே?"

"ஓம்.... அந்த ஆள் கடைசிவரை செய்து கொடுக்க மாட்டன் என்று சொல்லிக் கொண்டு இருந்தது. அதிலை என்ன?"

"அதால பிரச்னை இல்லை.... இந்த ஆள் பொது இடத்திலை பிழையாய் வாயை விட்டுட்டார்.... ஒருத் தன்ரை ரோச நரம்பை பிடிச்சு இழுக்கிற அளவுக்குப் பேசினால் யார் தான் பொறுத்துக் கொள்ளுவாங்கள்?"

"அதுக்கு மண்டையிலை போடுறதோ... சரி நான் வந்து பார்க்கின்றன்?"

"இப்ப எங்கை வந்து என்னத்தைப் பார்க்கிறது. பிரேதத்தை பொலிஸ் கொண்டு போயிட்டுது. வீட்டைச் சுற்றி பொலிஸ் நிற்குது. யாரும் உள்ளேயும் வெளியேயும் போக முடியாது?

"பெடிச்சியின்ரை தகப்பன் தாய் சகோதரங்கள் எங்கே?"

"அவர்கள் எங்கேயும் போகவில்லை.... இப்போதும் சுப்பர் மாக்கற்றுக்கையும் தமிழ் கடைக்கேக்கையும் யாரோ கண்டவையாம்"

"அப்ப யார் செய்தது?... அது தான் தெரியேல்லை.... ஆனால் சிவிரி கமராவில் ஒரு போலாந்து நம்பர் பிளேட்டுடன் ஒரு வான் நின்று போயிருக்கு" அதிர்ந்து போனேன். இதுக்குப் பின்பு நான் எதனையும் கேட்கத் தேவையிருக்கவில்லை.

"புதிய மண்ணும் புதிய வாழ்வும்" தொடரை முடித்தே ஆக வேண்டும் - வெளியே வராத சில ஆராய்ச்சிகளின் முடிவுகள் போல. இன்று எனக்கு உள்ள தெளிவு ஆரம் பத்தில் இருந் திருந்திருந்தால் இந்தத் தொடருக்கு "எங்கெங்கு காணி னும்" என்று பெயர் வைத்திருப் பேனோ என்னவோ!

▼ ▼ ▼

எழுதிக் கொண்டே கணனி முன் தூங்கி விட்டேன் என்று நினைக்கின்றேன்.

கணனித் திரையில் ஆன்லைனில் ஓடர் பண்ணுவதற்கான இணையத் தளம்.

முதலில் எனது பெயர். விலாசம். வயது அனைத்தும் கேட்கப்பட்டது.

முன்னெச்செரிக்கையுடன் முழுக்க முழுக் தவறான தகவல்களையே கொடுத்தேன்.

பின் எதிராளியின் விபரங்கள் கேட்கப்பட்டது.

முழுக்க முழுக்க துல்லியமாக சரியான தகவல்களையே கொடுத்தேன்.

எவ்வாறு தண்டிக்க வேண்டும் என்று பல தெரிவுகள் தரப்பட்டிருந்தன.

கை எடுப்பது- கால் எடுப்பது -உயிர் எடுப்பது இத்தியாதி... இத்தியாதி...

அது அதுக்கு எதிரே அதற்கான பணமும் போடப் பட்டிருந்தது.

சம்மந்தப்பட்டவரின் வாயை அடக்குவதற்குரிய தெரிவு இல்லாதது குறையாக இருந்தது.

சரி- கை போனாலும் அவர் உயிர் வாழலாம் தானே என்ற நம்பிக்கையில் அதனைத் தெரிவு செய்தேன்.

அடுத்து வங்கி அட்டையின் எண் - முடிவடையும் திகதி - பின்னால் உள்ள இரகசிய எண்.

கொடுத்துக் கொண்டிருக்கும் பொழுது கண் விழித்து விட்டேன்.

நிச்சயமாக இது எனக்கான இணையத்தளம் இல்லை என்று மட்டும் புரிகிறது.

▼ ▼ ▼

எங்கெங்கும் - எப்பொழுதும் - எவ்வகையிலும்.

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

கல்வி tv CHANNEL

46. 
பாடசாலையில் தயாரிக்கப்பட்ட கூட்டெருப் பாத்திரம் அருகே தரப்பட்டுள்ளது. இப்பாத்திரத்தினுள் இடக்கூடிய கழிவுப் பொருட்களில் இரண்டு.
(1) யோகட் கோப்பை, பொலிதீன் உறை
(2) கடதாசித்துண்டுகள், இலைகுழைகள்
(3) இலைகுழைகள், கண்ணாடித்துண்டுகள்

47. எரிகாயத்திற்கு உள்ளான ஒருவருக்கு முதலுதவி அளிக்கும் போது **செய்யக்கூடாதது.**
(1) எரியுண்ட இடத்தைக் குளிர்நீரினால் குளிரூட்டல்.
(2) எரியுண்ட இடத்தை மூடுதல்.
(3) எரிவின் மேல் எண்ணெய் அல்லது கொழுப்புகளைப் பூசுதல்.

48. பயிர்ச் செய்கைக்குத் தீங்கு விளைவிக்கும் பிராணிகள்,
(1) தண்டுகோதி, நத்தை (2) தேனீ, ஆந்தை (3) மண்புழு, தேனீ

49. கண்கள் காதுகள் ஊடாகத் தகவல்களைப் பெறக்கூடிய ஊடகம்,
(1) வானொலி (2) செய்திப்பத்திரிகை (3) தொலைக்காட்சி

50. சிவப்பு, வெள்ளை ஆகிய நிறங்களைக் கலப்பதால் பெறப்படும் நிறம்,
(1) ரோஸ் (2) செம்மஞ்சள் (3) கபிலம்

51. மின்குமிழ் **ஒளிராத** சுற்றினைக் காட்டும் வரிப்படம் எது?


(1) (2) (3)

52. அலுமீனியப் பாத்திரத்தில் சமைக்கப்படும் உணவுடன் சேர்க்கக் **கூடாத** ஒரு பொருள்,
(1) கொறுக்காய் (2) இஞ்சி (3) கறுவா


53. தேசிய மரபுரிமையாகவும் உலக மரபுரிமையாகவும் கணிப்புப் பெற்றுள்ள இலங்கையின் இயற்கை இடங்களில் ஒன்று,
(1) சிகிரியா (2) பொலன்னறுவை புராதன நகர் (3) சிங்கராஜ வனம்

54. ஒருவர், வதிவை உறுதிப்படுத்தும் சான்றிதழைப் பெறச் செல்ல வேண்டியது,
(1) பிரதேச செயலாளரிடம் (2) சமுர்த்தி அலுவலரிடம் (3) கிராம அலுவலரிடம்

55. தான் சஞ்சரிக்கும் மேற்பரப்புகளில் ஒட்டிக்கொள்ளக் கூடிய விஷேட பாதங்களைக் கொண்டுள்ள பிராணி,
(1) பல்லி (2) அணில் (3) கரப்பான்

56. உறுதியற்ற சதுப்பு நிலச்சூழலில் வளரும் கண்டல் தாவரங்கள் அசைவின்றி, தம்மை நிலைப்படுத்துவதற்கு அவை கொண்டுள்ள விஷேட வேர்க் கட்டமைப்பு எது?
(1) மூச்சு வேர் (2) மிண்டி வேர் (3) தொங்கு வேர்

57. நாட்டின் நற்பெயரைக் கட்டி எழுப்புவதில் பங்களிப்புச் செய்த இலங்கையின் சிங்கள மொழிப் பாடகரும் இசையமைப்பாளருமாகத் திகழ்ந்தவர்,
(1) அநகாரிக தர்மபால (2) ஆதர் சீ. கிளார்க் (3) பண்டிதர் அமரதேவ

58. 
இந்தத் தையல் முறைக்கு வழங்கப்படும் பெயர் யாது?
(1) சங்கிலித் தையல்
(2) விஸ்பம் தையல்
(3) கம்பளித் தையல்

59. பின்வரும் எப்பாத்திரத்தினுள் இடப்படும் பனிக்கட்டி முதலில் உருகும்?
(1) சூடான நீர் கொண்ட கண்ணாடிக் குவளை
(2) சாதாரண நீர் கொண்ட கண்ணாடிக் குவளை
(3) சாதாரண வெப்பநிலையில் உள்ள வெற்றுக் கண்ணாடிக் குவளை

60. 'காலைப் பொழுது அழகானது' என்பதைத் தலைப்பாகக் கொண்டு **மூன்று** வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் **ஐந்து சொற்களுக்கு மேல்** இடம்பெற வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்.)

1) ..................................................................................................
..................................................................................................
2) ..................................................................................................
..................................................................................................
3) ..................................................................................................
..................................................................................................

## விடைகள்

46. (2) 47. (3) 48. (1) 49. (3)
50. (1) 51.(1) 52. (1) 53. (3) 54. (3) 55. (1) 56. (2) 57. (3) 58. (3) 59. (1)

---

கல்வி tv CHANNEL-1

**16.01.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

கல்வி tv CHANNEL - 2

**16.01.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# பாராளுமன்றத்தின் 2020 ஆம் ஆண்டு உணவுச் செலவு 90 மில்லியன் ரூபா!

கொழும்பு, ஜன. 16
பாராளுமன்றத்திற்கு வரும் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் விருந்தினர்களுக்கு உணவு மற்றும் பானங்கள் வழங்குவதற்காக 2020 ஆம் ஆண்டு மாத்திரம் கிட்டத்தட்ட 90 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதாக பாராளுமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, பல்வேறு ஊழல்கள் மற்றும் வீண்விரயங்கள் காரணமாக பாராளுமன்றத்தில் உணவு மற்றும் பானங்கள் இழுக்கப்படுவதை தடுக்கும் வகையில் பாராளுமன்றச் செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க அண்மைக் காலமாக பல நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக பாராளுமன்ற தகவல்கள் கூறின.

அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் வெளியேறும்போது அவர்களின் உடைமைகளை சீரற்ற முறையில் சோதனை செய்வதும் ஒரு படியாகும் என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அரிசி, மரக்கறிகள் உள்ளிட்ட உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பு காரணமாக பாராளுமன்றத்தில் உணவு மற்றும் பானங்கள் தயாரிப்பது மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

## மின்கம்பியில் சிக்கி குடும்பப் பெண் பரிதாப மரணம்!

கொழும்பு, ஜன. 16
வயல் ஒன்றுக்கு அருகில் மின் கம்பியில் சிக்கி பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

கெப்பட்டிபொல - வெலங்கஸ்தென்ன பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் 47 வயதுடைய குடும்பப் பெண் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தை அடுத்து, அனுமதியின்றி மின் இணைப்பை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் 28 வயதுடைய இளைஞரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (அ)

## ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி 48 கட்சிகளுடன் பேச்சு!

கொழும்பு, ஜன. 16
பலம் பொருந்திய கூட்டணி ஒன்றை உருவாக்கும் நோக்கில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இதுவரை 48 கட்சிகளுடன் கலந்துரையாடியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் தேர்தல்களில் போட்டியிடுவதற்காக பலம் பொருந்திய அரசியல் அமைப்பை உருவாக்கும் நோக்கில், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி ஏனைய கட்சிகளுடன் கலந்துரையாடி வருகிறது.

இந்நிலையில், இதுவரை 48 கட்சிகளுடன் கலந்துரையாடியதாக கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார். கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் இணைந்தே கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கமைவாக எதிர்வரும் தேர்தல்களில் மிகவும் பலம் பொருந்திய அமைப்பாக செயல்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்று, கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். (கே)

## 1,164 பேருக்கு எச்சரிக்கை!

கொழும்பு, ஜன.16
மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய 1,164 பேர் கடுமையாக கடுமையாக எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறுவோரை கண் காணிக்கும் நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், மேல் மாகாணத்தில் 762 பொலிஸார் இணைந்து நேற்று முன்தினம் கடும் சோதனை நடவடிக்கைகளை நடத்தினர்.

இதன்போது 3,221 மோட்டார் சைக்கிள்கள், 2,052 முச்சக்கர வண்டிகள் என்பன சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.அத்துடன், 6,568 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்களில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய 1,164 பேர் கடுமையான எச்சரிக்கையின் பின் விடுவிக்கப்பட்டனர். (கே)

## அரசாங்கத்தின் பின்வரிசை எம். பிக்களுக்குள் பிளவு?

கொழும்பு, ஜன.16
அரசாங்கத்தின் பின்வரிசை உறுப்பினர்கள் மத்தியில் பிளவு ஏற்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பல பின்வரிசை உறுப்பினர்கள் அனுமதியின்றி தனித்தனியாக செய்தியாளர் சந்திப்புகளை நடத்தியதால் பிளவு ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது.

அரசாங்கத்தின் உயர் அதிகாரி ஒருவரின் வேண்டுகோளுக்கு இணங்க கடந்த வாரமும் அதற்கு முதல் வாரமும் பலர் தனித்தனியாக செய்தியாளர் சந்திப்புகளை நடத்தினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, புலனாய்வு அறிக்கையின் அடிப்படையில் சுசில் பிரேமஜயந்தவை இராஜாங்க அமைச்சர் பதவியில் இருந்து நீக்கியதற்காக பின்வரிசை உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்த கருத்துக்கு பின்வரிசை உறுப்பினர்கள் சிலர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர் என்றும் தெரியவருகிறது. (கே)

எல்லோரையும் அன்புடன் அழைக்கின்றோம்

**காளிமாதா ஜோதிட நிலையம்**







இந்திய பிரபல்யமான பாரம்பரிய

**கண்ணன் பொதுவாழ்தாஸ்**

ஜாதகம், கைரேகை பார்த்து பலன் சொல்லுதல், கணவன் மனைவி சண்டை, காதல் பிரிவு, திருமண அக்கறையின்மை, வேலை தொழில் உத்தியோகம் போன்ற பிரச்சினையின்மை செய்வினை, சூனியம் போன்றமையால் தொழில் பாதிப்பு, வீட்டில் பேய், பிசாசு நடமாட்டம், சாக்கினி, டாக்கினி பேய் விரட்டப்படுதல் போன்ற பிரச்சினைகளையும், கண் திருஷ்டியால் வாழ்வில் முன்னேற்றமின்மை, குழந்தை பாக்கியம் இல்லாதவர்களும் வேண்டிய வழிகளைக் காட்டுதல், வெளிநாட்டுப் பிரயாண வாய்ப்புகள், சிறந்த கல்வி மேம்பாடு ஆகியவற்றுக்கும் பலன் சொல்வதோடு பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பார். மேலும் உங்கள் வீட்டை காவல் செய்தல் போன்றவற்றையும் செய்வார்.

**நேரம்: காலை 8.00 - இரவு 7.00**

இல.109, மட்டு நகர் வீதி, கல்முனை
அர்ச்சனா ஜுவலரி அருகாமையில் (தேசிய சேமிப்பு வங்கி எதிர்ப்பக்கமாக)
075 217 1943

## பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக தெரிவும்

இருபாலை, ஜன. 16
இருபாலை வேளாதோப்பு ஸ்ரீமதுரை மகா முத்துமாரி அம்பாள் ஆலய பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டம் ஆலய வீதியில் அமைந்துள்ள பொது நோக்கு மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

## மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 30 - 01 - 1954 |  | 12 - 01 - 2022 |

### திருமதி
### தில்லைநாதன் யோகேஸ்வரி

யாழ். நாயன்மார்கட்டு இராசேஸ்வரி வீதியைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், பிரான்ஸ் Le Bourget ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லைநாதன் யோகேஸ்வரி கடந்த 12-01-2022 புதன்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற ஐயாத்துரை சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகளும், தில்லைநாதன் அவர்களின் அன்பு மனைவியும், ஜெயமாலினி(பிரான்ஸ்), ராஜ்குமார்(அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், அரியதீபன்(பிரான்ஸ்) அவர்களின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை(கொழும்பு), பரணிரூபநாதன்(லண்டன்), ஜெகநாதன்(பிரான்ஸ்), தனலெட்சுமி (பிரான்ஸ்), காலஞ்சென்ற வரதராயன்(ஜேர்மனி), நித்தி ஆனந்தன் (பிரான்ஸ்), அருளானந்தம்(யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், அஜய், அஞ்சனா, அனன்யா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

பார்வைக்கு :
Sunday, 16 Jan 2022 10:00 AM - 11:00 AM
Tuesday, 18 Jan 2022 3:00 PM - 4:00 PM
Thursday, 20 Jan 2022 3:00 PM - 4:00 PM
Saturday, 22 Jan 2022 10:00 AM - 11:00 AM
Sunday, 23 Jan 2022 10:00 AM - 11:00 AM
Crématorium 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France.

கிரியை :
Monday, 24 Jan 2022 12:15 PM - 2:15 PM
Crématorium 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France.

அஞ்சலி :
Monday, 24 Jan 2022 2:25 PM - 3:25 PM
Crématorium 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France.

தகனம்:
Monday, 24 Jan 2022 3:30 PM
Crématorium 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**மாலா - மகள்**
**Mobile : +33660175867**
**ராசன் - மருமகன்**
**Mobile : +33753729415**
**தனா - சகோதரி**
**Mobile : +33650224181**
**ஜெகநாதன் - சகோதரர்**
**Mobile : +33636179107**
**பரணிரூபநாதன் - சகோதரன்**
**Mobile : +447424995030**
**அருளானந்தம் - சகோதரன்**
**Mobile : +94767163068**

தகவல்:
**குடும்பத்தினர்.**

## பொருளாதாரத்...

விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது இந்த நிகழ்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்-

தமிழர்களின் பாரம்பரியத்தையும் பண்பாட்டையும் நாங்கள் தான் பேணி வளர்க்க வேண்டும். நாங்கள் தான் அவற்றை கட்டிக்காக்க வேண்டும். நாங்கள் அதற்கான முதுகெலும்பாக செயற்பட வேண்டும் என்கின்ற அடிப்படையில்தான் இன்றைய நாள் ஒரு பண்பாட்டு நாளாக உருத்திரபுரம் விளையாட்டுக் கழகம் முன்னெடுத்திருக்கிறது. மிக முக்கியமாக தமிழர்களிடமிருந்து அருகிப் போகின்ற போர்த்தேங்காய் உடைத்தல், தலையணைச்சமர், முட்டி உடைத்தல், கிளித்தட்டு போன்ற எங்கள் பண்பாட்டோடும் பாரம்பரியத்தோடும் தமிழரோடு பிறந்து வளர்ந்த-அவர்களுடைய கலாசாரத்தோடு இயல்புடைய இந்த நிகழ்வுகள் எங்களை விட்டு விலகிச் செல்லுகின்றன. அவ்வாறு விலகிச் செல்லுகின்ற இந்த விளையாட்டுக்களை மீண்டும் நினைவூட்டுகின்ற வகையில் பண்பாட்டு விழாவாக தமிழர்களுடைய திருநாளான தைப்பொங்கலை மையமாக வைத்து நீங்கள் முன்னெடுத்திருப்பது மிகவும் மகிழ்ச்சியானது.

இம்முறை விவசாயிகளுக்கான பசளைகள் தடை செய்யப்பட்ட காரணத்தால் அறுவடை என்பது மிகப் பாரிய அளவில் பாதிக்கப்பட்டிருக்கிறது.

ஒரு ஏக்கரில் 8 அல்லது ஒன்பது பை நெல்லுத்தான் அறுவடை செய்கின்ற அளவுக்கு நிலைமை மாறியிருக்கிறது. ஆனால் அரசாங்கம் இப்போது மியன்மாரில் இருந்தும் வேறு நாடுகளில் இருந்தும் எத்தனையோ இலட்சம் மெற்றிக்தொன் அரிசியைக் கொள்வனவு செய்ய தயாராக இருக்கிறது. இவ்வாறு அங்கு இரசாயன முறையில் தயாரிக்கப்பட்ட அரிசிகளை இங்கு இறக்குமதி செய்ய முனைகிறார்கள். இங்கு விவசாயம் செய்பவர்களுக்கு உரத்தை பயன்படுத்த அரசு தடை விதித்திருக்கிறது. அதிலும் குறிப்பாக வடக்கு-கிழக்கில் அறுவடை செய்கின்ற காலத்தில் இலங்கையில் ஏனைய பகுதிகளில் சிலவற்றில் இனித்தான் விதைப்பு ஆரம்பமாக இருக்கின்றது. வடக்கு-கிழக்கில் விவசாயிகள் நெல் அறுவடை செய்கின்ற காலத்தில் இந்த அரசாங்கம் வெளிநாடுகளிலிருந்து அரசியை இறக்குமதி செய்வது மேலும் எமது மக்களை துன்பத்துக்கு உள்ளாகும்.

ஆனால் நாம் கடும் நெருக்கடியோடு வாழ்ந்தவர்கள். ஒரு கால கட்டத்தில்-90 களில் இலங்கையில் மண்ணெண்ணெய் 12 ரூபாவிக்கு விற்றபோது நாம் 300 ரூபாவுக்கு வாங்கியவர்கள். அப்போது யூரியாவை கண்ணால் காணவில்லை. உடுப்பு துவைப்பதற்கு சவர்க்காரங்களைக் காணவில்லை. நாங்கள் இந்த மண்ணிலே பெற்றோலை கண்டிருந்ததில்லை. அவ்வாறு இருந்தும் இந்த மண்ணிலே நாங்கள் வாழ்ந்து இருந்தோம். எங்களுடைய வாழ்க்கை நகர்ந்திருந்தது. அதனை இப்போது தான் சிங்கள மக்கள் படிக்கவும் உணரவும் ஆரம்பித்திருக்கிறார்கள். ஆகவே பொருளாதார தடை என்பதும் பொருளாதாரத்தின் மீதான ஒரு வகையான ஆக்கிரமிப்பு என்பதும் இப்போது தான் சிங்கள மக்களை உணர வைத்திருக்கிறது . தமிழர்கள் ஏற்கனவே இவற்றை நேரடியாக அனுபவித்து வாழ்ந்தவர்கள்-என்றார். (அ)

## அமைச்சரவை...

வல்கள் வெளியாகியுள்ளன.

வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன மற்றும் விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே ஆகியோரை இவ்வாறு ஏமாற்றத்தில் இருக்கின்றனர் எனக் கூறப்படுகின்றது.

இவர்கள் இருவரும் தமக்கு வேறு அமைச்சுக்களை வழங்குமாறு கோரிக்கை விடுத்திருந்தனர் எனப் பேசப்படுகின்றது.

அமைச்சு ஒன்றை மாற்றும்போது கவனத்தில்கொள்ளவேண்டிய விடங்களைப் பந்துல குணவர்தன விபரித்திருந்தார்.

ஓர் அமைச்சர் தற்போது வகித்து வரும் அமைச்சு வெற்றிகரமாக முன்னெடுக்கப்படவில்லை என்றால், அவருக்கு வேறு ஒரு அமைச்சுப் பதவியை வழங்கவேண்டும் எனவும், அமைச்சர் ஒருவர் மோசடியாக நடந்துகொண்டால் அவரை அமைச்சரவையில் இருந்து நீக்கவேண்டும் எனவும் பந்துல குறிப்பிட்டிருந்தார்.

எனினும், ஓர் அமைச்சர் தனக்கு வழங்கிய அமைச்சுப் பதவியில் வெற்றிகரமாகச் செயற்படவில்லை என்பதால், அவருக்கு வேறு ஓர் அமைச்சுப் பதவியை வழங்கும்போது, அவர் எப்படி வெற்றிகரமாகச் செயற்பட முடியும் என்பதை பந்துல குணவர்தன விளக்கவில்லை.

அதேவேளை, தான் வகிக்கும் கமத்தொழில் அமைச்சர் பதவி காரணமாக 35 ஆண்டுகளாகத் தான் உருவாக்கிய அரசியல் விம்பம் அழிந்து போயுள்ளது என விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே குறிப்பிட்டுள்ளார்.

பொருட்களின் விலை அதிகரிப்பு காரணமாக பந்துல குணவர்தனவும், சேதனப் பசளை பிரச்னை காரணமாக மஹிந்தானந்த அளுத்கமகேவும் மக்களின் கடும் விமர்சனங்களுக்கும் நகைப்புக்கும் உள்ளாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## எதிர்வரும் மூன்று...

கோட்டாபய அனைத்து தரப்பினருக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

மீரிகம தொடக்கம் குருநாகல் வரையிலான மத்திய அதிவேகப் பாதையின் பகுதியை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

கோவிட்-19 பெரும் தொற்று பரவல் குறைவடைந்துள்ளதாகவும், தடுப்பூசி மற்றும் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்தால் நாடு முன்னேற முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

விவசாயியை தாம் ஒருபோதும் மறக்கமாட்டோம் என உறுதியளித்த ஜனாதிபதி, விரைவில் பயிர்ச்செய்கை போர் ஒன்று ஆரம்பிக்கப்படும் எனவும் வலியுறுத்தினார். (அ)

## 4ஆவது...

கொரோனா தடுப்பூசியின் நான்காவது டோஸ் தேவைப்பட்டால், அது இந்த நாட்டு மக்களுக்கு இலவசமாக வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தடுப்பூசி வேலைத்திட்டத்தின் கீழ் இதுவரை கொள்வனவு செய்யப்பட்ட டோஸ்களுக்காக சுமார் 35 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் மேலும் கூறினார். (அ)

## பொருளாதார...

படை தேவைகளின் பற்றாக்குறையை நோக்கி நகர்வதாக கனடா அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மருந்துப்பொருட்கள், எரிபொருள் மற்றும் உணவு என்பன இதில் உள்ளடங்குகின்றன.

பொருளாதார ஸ்திரத்தன்மை, சுகாதாரம் உள்ளிட்ட பொதுச்சேவைகளையும் இது பாதிக்கும் என இலங்கையிலுள்ள கனேடிய பிரஜைகளுக்கு அந்நாட்டு அரசாங்கம் எச்சரித்துள்ளது.

எனவே, உணவு, நீர் மற்றும் எரிபொருளை கையிருப்பில் வைத்துக் கொள்ளுமாறு அவர்களை அறிவுறுத்தியுள்ளது.

அத்துடன் பலசரக்கு கடைகள், எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மற்றும் மருந்தகங்களிலும் நீண்ட வரிசைகளில் நிற்கும் நிலை ஏற்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உணவு மற்றும் எரிபொருள் பற்றாக்குறை தொடர்பிலான தகவல்களை உள்நாட்டு ஊடகங்கள் வாயிலாக அறிந்து கொள்ளுமாறும் இலங்கையிலுள்ள கனேடிய பிரஜைகளை அந்நாட்டு அரசாங்கம் அறிவுறுத்தியுள்ளது.

# 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை மேலதிக வகுப்புக்களுக்கு தடை!

கொழும்பு, ஜன. 16

ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சை குறித்த மேலதிக வகுப்புகள் மற்றும் கருத்தரங்குகளை நடத்த எதிர்வரும் 18ஆம் திகதி நள்ளிரவு முதல் தடை விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைகள் திணைக்களம் இதனைத் தெரிவித்துள்ளது. அத்துடன், கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை குறித்த மேலதிக வகுப்புகள் மற்றும் கருத்தரங்குகளை நடத்தவும் எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதி நள்ளிரவு முதல் தடை விதிக்கப்படும் என பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (அ)

## 250 கிலோ...

கப் பகுதிகளில் கட்டி அமைக்கப்பட்ட இந்திய வீடமைப்பு வீடுகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளைப் பூரணப்படுத்தி அதனைப் பயனாளிகளுக்குக் கையளிப்பதற்கான திறப்பு வழங்கும் வைபவம் நேற்று நடைபெற்றது.

கொட்டகலை சீ.எல்.எப் வளாகத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் இந்த வைபவம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு மக்கள் மத்தியில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்த இந்திய வீட்டுத்திட்டத்தை தற்போதைய அரசு மலையக பகுதிகளுக்கும் விரிவுபடுத்தியுள்ளது.

அமரர் தொண்டமான் நாட்டில் ஸ்திரமான அரசு ஒன்றை உருவாக்கப் பாடுபட்டவர். அதேபோல் தற்போதைய ஜீவனும் மலையக மக்களின் முன்னேற்றத்துக்காகப் பாடுபட்டு வருகின்றார்.

மலையகத் தொழிலாளர்கள் பறிக்கும் கொழுந்தின் மூலமே நாட்டுக்கு அந்திய செலவாணி கிடைக்கின்றது.

நாட்டில் உருவான ஒவ்வொரு அரசும் மலையக மக்கள் தொடர்பில் பேசினார்கள். ஆனால், ஆட்சியமைத்ததுடன் உங்கள் துக்கங்களை அவர்கள் கண்டுகொள்ளவில்லை. சுதந்திரம் பெற்று 74 வருடங்களாகியும் மலையக மக்களுக்கு உரிய காணிகள் வழங்கப்படவில்லை.

அதேபோல் சுதந்திரக் கல்வியும் மலையக மாணவர்களுக்கு உரிய வகையில் கிடைக்கவில்லை. எனவே, ஒவ்வொரு அரசுக்கும் மலையக சூழலையும் மக்களின் வாழ்வாதாரத்தையும் ஊக்குவிக்க வேண்டிய கடமை உண்டு.

அதன்படி இன்றைய அரசு சிரமங்களுக்கு மத்தியிலும் தடைப்பட்டிருந்த அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்கின்றது. அதற்கமைய மலையகப் பகுதிகளில் வீதிகள் உள்ளிட்ட அபிவிருத்திப் பணி கள் இடம்பெறுகின்றன.

பெருந்தோட்டப் பாடசாலைகள் இன்று தேசிய பாடசாலைகளாக மாற்றப்பட்டு வருகின்றன. பொருளாதார ரீதியில் உலகமும் எமது நாடும் பல சவால்களை சந்தித்துள்ளது.

ஜனாதிபதியும், பிரதமரும் தலையிட்டு பெருந்தோட்ட மக்களுக்குக் கோதுமை மா சலுகையை வழங்கத் தீர்மானித்தனர்.

அதன்படி 80 ரூபாவுக்கு கோதுமை மா வழங்கப்படுகின்றது. ஜீவன் தொண்டமானின் வேண்டுகோளுக்கமையவே இந்த விடயம் சாத்தியமாகியுள்ளது.

ஆகவே, நாட்டு மக்களின் துன்பத்தை அறிந்த மக்களால் உருவான அரசே இதுவாகும். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் பெருந்தோட்ட மக்களுக்கு உதவிகள் வழங்கப்படும்-என்றார். (அ)

## இந்திய...

இந்த கடிதத்தை கடந்த வாரம் கையளிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபோதிலும், இந்தியத் தூதுவர் புதுடில்லி சென்றிருந்தமையால் அது பிற்போடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், அவர் நாடு திரும்பியுள்ளமையால் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை இந்த ஆவணம் கையளிக்கப்படவுள்ளது.

13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துதல், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு உள்ளிட்ட பல முக்கிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ள இந்த ஆவணத்தில் கையொப்பமிடுவது தொடர்பில் பல சுற்றுப் பேச்சுகள் நடைபெற்றன.

இறுதிவரை பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்ட தமிழ் முற்போக்கு கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பன இதில் கையொப்பமிடவில்லை.

எனினும், பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்க வேண்டும் என்ற கோரிக்கை அடங்கிய ஆவணத்தை அடுத்த கட்டமாக தயாரிக்கவுள்ளதாகவும், அதில் அந்தக் கட்சிகள் இணைந்துகொள்ளவுள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கூறினார். (அ)

## தேவாலயத்தில்...

களுக்கு கருத்து தெரிவித்த அவர், இந்த சம்பவம் தொடர்பான விசாரணைக்கு கால அவகாசம் தேவைப்படும் என்று கூறினார்.

தேவாலயங்கள் மற்றும் பிற வழிபாட்டுத் தலங்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படும் என்றும், இதுபோன்ற குற்றங்களில் ஈடுபடுபவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

விசாரணைகள் தொடர்பான தகவல்கள் பொதுமக்களுக்கு வெளியிடப்படாதபோதிலும், விசாரணை திருப்திகரமான வகையில் முன்னெடுக்கப்படுவதாக கமால் கூறினார்.

இதேவேளை, ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் குறித்த முழுமையான விசாரணைகள் நிறைவடைந்த பின்னர் அதில் அதிருப்தி இருப்பின் கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் விமர்சிக்கலாம் என்றும் பாதுகாப்பு செயலாளர் குறிப்பிட்டார். (அ)

## 250 கிலோ...

பிடிக்கப்பட்டது.

இதனையடுத்து அந்த வாகனத்தை முழுமையாகச் சோதனை செய்தபோது பொதி செய்யப்பட்ட நிலையில் 250 கிலோ கஞ்சா மீட்கப்பட்டது. இதனை உடைமையில் வைத்திருந்தமை மற்றும் எடுத்துச் சென்றமை தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டனர்.

மேலதிக விசாரணைகளின் பின் கைது செய்யப்பட்ட இருவரையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஈரப்பெரியகுளம் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## இலங்கையின்...

தமது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

இலங்கையின் உறுதியான மற்றும் நம்பகமான பங்காளியாக இந்தியா எப்போதும் இருக்கும் என்பதை மீள உறுதிப்படுத்துவதாகவும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தமது டுவிட்டர் பதிவில் கூறியுள்ளார்.

அத்துடன் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை விடுவிப்பது தொடர்பில் இதன்போது வலியுறுத்தப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் இந்த முக்கியமான தருணத்தில் இலங்கைக்கு ஆதரவளிப்பதற்காக ஏனைய உலக நாடுகளின் முயற்சிகளுடன் இணைந்து செயற்படுவதாகவும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் கூறினார். (அ)

ஈழநாடு
Eelanadu

## மரண அறிவித்தல்

மலர்வு
10 - 07 - 1947



உதிர்வு
13 - 01 - 2022

## சுதேசநாதன் செல்லையா

**(ஓய்வுபெற்ற சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்)**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், கனடா Markham ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சுதேசநாதன் செல்லையா அவர்கள் 13.01.2022 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் - செல்லையா தம்பு தம்பதிகளின் அன்பு மகனும், இந்திராணி (ஸ்ரீ சுவாமிநாதன்) அவர்களின் அன்புக் கணவரும், துஷ்யந்தி, சசிகலா, சுதர்ஷனா , பிரவினா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜூலியன், லியோனார்ட், டான், தீபன் ஆகியோரின் மாமனாரும், கெவின், டிலன், ராகுல், திவ்யா, கேட், காத்ரின், நேஹா ஆகியோரின் அன்புத் தாத்தாவும், காலஞ்சென்றவர்களான விமலா, சந்திரா மற்றும் காந்தி (இலங்கை), கமலா (இலங்கை), மணி (இலங்கை), பாபா(இலங்கை), ஸ்ரீ (டென்மார்க்), தனேந்திரன் (இந்தியா), வர்னி (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற ராஜி, மார்க் (கனடா), ரஞ்சி (இலங்கை), சுரேஷ் (அபுதாபி), சுரேன் (துபாய்), ஷாமினி (இலங்கை), சாந்தி (இலங்கை), குமார் (அவுஸ்திரேலியா), மனிக் (இலங்கை) ஆகியோரின் அன்புச் மைத்துனரும் ஆவார்.

*பார்வைக்கு :*
Monday, 17 Jan 2022 6:00 PM - 9:00 PM
Tuesday, 18 Jan 2022 8:30 AM - 9:30 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre
8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

*திருப்பலி:*
Tuesday, 18 Jan 2022 10:00 AM
St. Thomas the Apostle Roman Catholic Church
14 Highgate Drive, Markham, ON L3R 3R6, Canada

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**இந்திராணி - மனைவி**
**Mobile : +16477204850**
**Phone : +19055543431**

தகவல்:
**குடும்பத்தினர்.**



## யாழ்.நகரில் இடம்பெற்ற பட்டிப் பொங்கல் விழா!

*யாழ்ப்பாணம், ஜன. 16*

பட்டிப் பொங்கல் விழா நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் - சத்திரத்து ஞான வைரவர் ஆலயத்தில் கோபூசை இடம்பெற்று பின்னர் கோபவனி மற்றும் கோமாதா கீர்த்தனங்கள் என்பன முறையே இடம்பெற்றன.

கோபவனியானது ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகி காங்கேசன்துறை வீதி ஊடாக மின்சார நிலைய வீதி, யாழ் பேருந்து நிலைய மேற்கு வீதி மற்றும் ஆஸ்பத்திரி வீதி ஊடாக ஆலயத்தை வந்தடைந்தது.

குறித்த கோமாதா உற்சவத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், சமய குருமார்கள், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள், பிரதேச சபைத் தவிசாளர்கள், பாடசாலை மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ-03)

## மீரிகமவில் இருந்து குருநாகல் வரையான அதிவேக நெடுஞ்சாலை திறந்து வைப்பு

*கொழும்பு, ஜன. 16*

மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் மீரிகமவில் இருந்து குருணாகல் வரையான பகுதி ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்தப் பகுதி 41 கிலோமீற்றர் தூரம் கொண்டதாகும். இது ஐந்து இடைமாறல் பகுதிகளை உள்ளடக்கியதாகும்.

மீரிகம, நாக்கலாகமுவ, தம்பொக்க, குருநாகல், யக்கஹபிட்டிய ஆகிய இடங்களில் இடைமாறல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சுற்றாடல், சமூக ரீதியான பாதிப்புகளை குறைக்கும் வகையில் இது அமைக்கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

நான்கு ஒழுங்கைகளை கொண்டதாக இந்த நெடுஞ்சாலை அமைக்கப்பட்டுள்ளது.

4 பில்லியன் ரூபா செலவில் நெடுஞ்சாலையின் இந்தப் பகுதி நிர்மாணிக்கப்பட்டுள்ளது. (அ)

## பிளாஸ்ரிக் போத்தல் மீள்சுழற்சி; பாராட்டுகிறார் சஜித் பிரேமதாஸ

*கொழும்பு, ஜன. 16*

நாடளாவிய ரீதியில் சதொச விற்பனை நிலையங்கள் ஊடாக பிளாஸ்ரிக் போத்தல்களை மீள்சுழற்சி செய்யும் வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தனவின் முயற்சியை எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸ பாராட்டியுள்ளார்.

சதொச விற்பனை நிலையங்களில் ரூ.35 விலையுடைய இந்தப் புதிய தண்ணீர்ப் போத்தல்களை மீண்டும் விற்பனை நிலையங்களுக்குத் கொடுக்கும்போது ஒவ்வொரு போத்தலுக்கும் ரூ.10 திருப்பிச் செலுத்தப்படும். நுகர்வோர் குறைந்த விலையில் தண்ணீர்ப் போத்தல்களைக் கொள்வனவு செய்து சுற்றுச்சூழலில் சேர்க்கப்படும் பிளாஸ்ரிக்கின் அளவைக் குறைப்பதே எமது நோக்கமாகும் என அமைச்சர் குணவர்தன தெரிவித்தார்.

பிளாஸ்ரிக் போத்தல்களைப் பயன்படுத்தும் அனைத்து உற்பத்தியாளர்களுக்கும் இது பெரும் முயற்சியாக அமையும். பிளாஸ்ரிக் போத்தல்களைப் பயன்படுத்தும் அனைத்து உற்பத்தியாளர்களிடமும் இதை அமுல்படுத்த முடியும் என நம்புவதாகவும், பிளாஸ்ரிக் சேகரிப்பானது மீள்சுழற்சி செய்வதை மிகவும் எளிதாக்கும் என்றும் சஜித் பிரேமதாஸ தனது ருவிட்டரில் குறிப்பிட்டுள்ளார். (அ)




## இரு வாரங்களில் மாத்திரம் 3,918 டெங்கு நோயாளர்கள்

*கொழும்பு, ஜன. 16*

இந்த வருடத்தின் இரண்டு வாரங்களில் 3,918 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், இந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் டெங்கு காய்ச்சலினால் உயிரிழப்பு எதுவும் பதிவாகவில்லை என சுகாதார மருத்துவ அதிகாரி விசேட மருத்துவ நிபுணர் ஷிலந்த செனவிரத்ன குறிப்பிட்டார்.

இதனால் சுற்றுச்சூழலை சுத்தமாக வைத்துக்கொள்ளுமாறு மக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (அ)

## நாகர்கோவிலில் நேற்று சிறுவர் பட்டப்போட்டி



*யாழ்ப்பாணம், ஜன. 16*

வடமராட்சி கிழக்கு, நாகர்கோவிலில் சிறுவர்களுக்கான பட்டப் போட்டி நேற்று மிக சிறப்பாக இடம்பெற்றது.

நாகர்கோவில் நாகேஸ்வரா விளையாட்டு கழக மைதானத்தில் பிற்பகல் 4.00 மணிக்கு இடம் பெற்ற போட்டியில் ஒன்பது பட்டங்கள் பங்கு கொண்டன.

நாகர்கோவில் கிராமத்தில் முதல் தடவையாக இடம்பெற்ற இப் பட்டப் போட்டியில் முதலாம் பரிசான ரூபா 5 ரூபாவை அருந்தவராசா மதுஷா எனும் சிறுமி பெற்றுக் கொண்டதுடன், இரண்டாம் இடத்தை பெற்று 3 ஆயிரம் ரூபா பணப் பரிசினை சவுந்தர்ராஜன் சந்துரு பெற்றுக் கொண்டார், மூன்றாம் இடத்தை பெற்று ரூபா 2 ஆயிரம் ரூபா பண பரிசினை யோகநாதன் நிரூஜன் பெற்றுக்கொண்டார்.

இதே வேளை ஏழு போட்டியாளர்களுக்கான ஆறுதல் பரிசில்களும் வழங்கப்பட்டன.

இப் பட்டப் போட்டியின் நடுவராக தொழிலதிபர் ரகு கடமையாற்றினார். பரிசில்களை பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினரும் போட்டி ஏற்பாட்டாளருமான ஆ.சுரேஸ்குமார் வழங்கினார். (அ-02)

## கோவிட் தொற்றால் 07 பேர் பலி!

*கொழும்பு, ஜன. 16*

நாட்டில் நேற்றும் முன்தினம் கோவிட் தொற்றால் 07 பேர் உயிரிழந்துள்ளனர். சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறு திப்படுத்தலுடன் அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப் பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 15,197 ஆக அதிகரித்துள்ளது.

## 4000 போதை மாத்திரைகளுடன் நெதர்லாந்திலிருந்து வந்த பொதி

*கொழும்பு, ஜன. 16*

நெதர்லாந்தில் இருந்து இலங்கைக்கு அனுப்பப்பட்ட 4000 போதை மாத்திரைகளை உள்ளடக்கிய பொதியொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த போதை மாத்திரைகளை தபால் திணைக்களத்துக்கு கைமாற்றும்போது சுங்கத் திணைக்கள அதிகாரிகளினால் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த சம்பவத்துடன் தொடர்புடையதாக தெரிவிக்கப்பட்டு சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.01.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்

6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்

6.55 மணி : இன்றைய பலன்

7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்

8.30 மணி : காலை செய்திகள்

9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)

10.30 மணி : அறிந்தும் அறியாமலும்

11.00 மணி : BEAT BOX

11.30 மணி : தடை அதை உடை-தற்காப்புக்கலை

**பகல்**

12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)

1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி-சச்சின்

4.30 மணி : காட்டூன் தமிழ்

5.00 மணி : COFFE WITH பிரமுகர்

6.00 மணி : கலக்கல் ஸ்ரார்- திறமையாளர்களுக்கான களம்

7.00 மணி : SPOTLIGHT- யாழ் மாவட்டநாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்தன்



8.00 மணி : இரவுச் செய்திகள்

9.00 மணி :டான் பட்டிமன்றம்



10.00 மணி: நேர்கொண்ட பார்வை

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி

8.00 மணி : சிரிப்பு சரடிவெடி

10.00 மணி : ஒரு பட கொமடி

11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்

3.00 மணி : குண்டக்க மண்டக்க

5.00 மணி : ஒரு பட கொமடி

6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி

9.00 மணி : சிரிப்போ சிரிப்பு

10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்

7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்

8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்

9.00 மணி : மெல்லிசை

10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி

1.00 மணி : விசை இசை

3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)

4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)

5.00 மணி : இனிது இனிது

6.00 மணி : என்றென்றும் இசை

7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்

9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்

6.00 மணி : தரம் 07 - தமிழ்

6.45 மணி : தரம் 08 - தமிழ்

7.30 மணி : தரம் 09 - கணிதம்

8.15 மணி : தரம் 10 - கணிதம்

9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்

10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி

11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்

1.00 மணி : தரம் 07 - தமிழ்

2.00 மணி : தரம் 08 - தமிழ்

3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்

3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்

4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்

5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்

5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்

6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

---

**காலை**

5.00 மணி : சிவாய மந்திரம்

6.00 மணி : சுப்ரபாதம்

6.30 மணி : சுப்ரபாதம்

07.00 மணி : இன்றைய சிந்தனை

07.05 மணி : இன்றைய நாள்

07.30 மணி : மங்கள இசை

08.00 மணி : அருளுரை

08.30 மணி : திருவாசகம்

09.00 மணி : திருவிழா-01

10.00 மணி : பாடல்கள்

10.30 மணி : பஜனை

11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி

12.30 மணி : திருவிழா-02

6.00 மணி :கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்

7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை

7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)

8.00 மணி : ஜெபமாலை

09.30 மணி : மன்றாடு

10.00 மணி: விவிலியம் அறிவோம் (திருகோணமலை)

10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)

01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)

03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)

04.00 மணி: மறைக்கல்வி(மட்டக்களப்பு)

05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)

06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)

7.00 மணி : ஞானவழி

7.30 மணி : படம்

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்

7.00 மணி : இறை சிந்தனை

7.30 மணி : இஸ்லாமிய பாடல்

8.00 மணி : கலந்துரையாடல்

9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்

10.00 மணி : மனதோடு பேசலாம்

10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்

11.00 மணி : சுவனப்பாதை

11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்

12.30 மணி : இஜ்லாமிய வரலாறு

1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்

2.00 மணி : கஸீதா

2.30 மணி : இறை சிந்தனை

3.00 மணி : பாடல்கள்

3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்

4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்

5.00 மணி : இறை தென்றல்

6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்

8.00 மணி : இஸ்லாமிய வரலாறு